இனிது ரகசியம் அல்ல!

முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் மறைவை ஒட்டி சில விடயங்களை நேற்று இப்பத்தியில் வரைந்திருந்தேன்.

அவரது ஆட்சிக் காலத்தில் இலங்கை விவகாரத்தை பாரதம் கையாண்ட முறைமை தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பின் முக்கியஸ்தர்கள் பக்கம் 17

பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை 19.08.2018 | கதிர் 287

# படை முகாம்கள் மூடுவது முட்டாள்தனமான முடிவு!

## இராணுவத் தளபதியின் நடவடிக்கையை கடுமையாகச் சாடுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஓகஸ்ட் 19

வடக்கில் பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைப்பதற்காக இராணுவ முகாம்களை மூடி, முகாம்களின் அளவைச் சுருக்கும் இலங்கை இராணுவத் தளபதியின் முடிவு முட்டாள்தன மானது என்று தெரிவித்துள்ளார் அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா. பக்கம் 18



## இரவு கடலட்டை பிடித்தமையால்
## கைதாகிய 81 தெற்கு மீனவர்களை விடுவித்த மீன்பிடித் திணைக்களம்



யாழ்ப்பாணம், ஓக.19

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் இரவில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த 81 தென்பகுதி மீனவர்கள் 21 படகுகளுடன் பக்கம் 18

## 19 சீன, இலங்கை ஜோடிகளுக்கு மிகப்பிரமாண்டமான திருமணம்
### நீர்கொழும்பில் நடைபெற்றது




கொழும்பு, ஓக.19


சீனா மற்றும் இலங்கையைச் சேர்ந்த 19 ஜோடிகள் நீர்கொழும்பில் உள்ள ஆடம்பர விடுதியில் பக்கம் 18

## மைத்திரிக்கு கறுப்புக்கொடி காட்ட வடமராட்சி கிழக்கு மீனவர் முடிவு
### தெற்கு மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக

யாழ்ப்பானம், ஓக.19

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்திருக்கும் நிலையில் யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குக் கறுப்பு பக்கம் 18

## ஆபாசமான பாடல்களை பஸ்களில் போடாதீர்கள்
### முதல்வர் விக்கி கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓக.19

ஆபாசச்சிந்தனைகளைத் தூண்டக்கூடிய மற்றும் நவீனம் என்ற பெயரில் பாலியல் கலாசாரங்களையும் பாலியற் சிந்தனைகளையும் தூண்டக்கூடிய பக்கம் 18

## அம்பாந்தோட்டை செல்கிறார் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஓக.19

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவ பக்கம் 18

## மாகாண சபைத் தேர்தல்; வெள்ளியன்று தீர்மானம்

கொழும்பு, ஓக.19

மாகாணசபைத் தேர்தலைப் புதிய முறையில் நடத்துவதா? அல்லது பழைய முறையில் நடத்துவதா? – என்பது தொடர்பான முடிவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதத்துக்குப் பின்னர் அறிவிப்போம் என்று விளை பக்கம் 17

## வயோதிபத் தம்பதியை தாக்கிவிட்டுக் கொள்ளை
### ஊரெழுவில் அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.19

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு அம்மன் கோவிலடியில் வீடு புகுந்த கொள்ளைக் கும்பல், பக்கம் 18

## ஆவா குழுவில் இணைந்துள்ள என் மகனை காப்பாற்றுங்கள்
### பொலிஸாரிடம் தாய் கதறல்

யாழ்ப்பாணம், ஓக.19

ஆவா குழுவினருடன் இணைந்து செயற்படும் தனது மகனைக் காப்பாற்றித் தருமாறு தாய் ஒருவர் வடக்கு மாகாண சிரேஷ்டபிரதிப்பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்ணான்டோ, நேற்று நடத்திய செய்தியாளர் பக்கம் 18


## வாள்வெட்டுக் குழுக்களை அடக்க பொதுமக்களின் உதவி வேண்டும்
### யாழ்ப்பாணப் பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.19

வாள்வெட்டுக் கும்பல்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் தமக்கு நேரடியாகத் தகவல்களை வழங்கி உதவுமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்ணான்டோ கேட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பான தகவல்களை இரகசியமாகத் பக்கம் 17

## கோபி அனான் காலமானார்



ஜெனீவா, ஓக.19

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செய பக்கம் 17

காலைக்கதிர் Kalaikkathir


# விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தை நேரில் சென்று பார்வையிட்டார் அனந்தி!



கிளிநொச்சியில் இராணுவத்தினரின் ட்றக் வாகனம் மோதி விபத்திற்குள்ளாகி உயிரிழந்தவரின் குடும்பத்தின் நிலை தொடர்பில்வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த குடும்பத்தை சந்திப்பதற்காக நேற்று வட மாகாண அமைச்சர் இந்த பகுதிக்குச் சென்றுள்ளார்.

பாரதிபுரம் பகுதியை சேர்ந்த 51வயதான க.குகனேஸ்வரன் என்ற 5 பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்திருந்தார்.

இது தொடர்பில் அனந்தி சசிதரன் தெரிவிக்கையில்–

படையினர் பாவனைக்கு உத வாத வாகனங்களை செலுத்துகின்றனர்.

விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த குடும்பத்தின் நிலை என்ன? 5 பிள்ளைகளை கொண்ட இந்த குடும்பத்தின் நிலை தொடர்பில் யார் பொறுப்புக் கூறப்போகின்றார்கள்? இதற்காகவே வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என நாம் அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

இந்த குடும்பம் மீள்குடியேறிய காலம் தொடக்கம் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்கின்றது.

தற்காலிக கொட்டகையில் வாழும் இவர்களிற்கு யார் பாதுகாப்பளிப்பது, இவ்வாறான தகரக் கொட்டகையில்தான் இவர்கள் வாழ்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து கூறியுள்ளார்.

சொந்தமாகக் காணியோ, வீடோ அற்ற நிலையில் சகோதரி ஒருவரின் தற்காலிக கொட்டகையில் இந்தக் குடும்பம் வாழ்ந்து வருகின்றது என குறிப்பிடப்படுகின்றது.

# மீள்குடியேறிய மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்



வவுனியா, ஒக 19

மீள் குடியேறிய முள்ளிக்குளம் கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இலவச மருத்துவ முகாமொன்று இடம்பெற்றது.

முள்ளிக்குளம் கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியேறியுள்ளனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என 100 குடும்பங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் தற்காலிகக் கூடாரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் மருத்து வசதிகளைப்பெற்றுக்கொள்ள சிலாபத்துறை வைத்திய சாலைக்கேசென்றுவரவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், பங்குத் தந்தை அருட்தந்தை லோறன்ஸ் லியோ விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பணியாளர் கள், மருத்துவ வசதிகளுடன்நேற்று முள்ளிக்குளம் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள பாடசாலை ஒன்றில் இல வச மருத்துவ முகாமை மேற்கொண்ட னர்.

வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனுடன் மடு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ராஜன் லெம்பேட் இணைந்து வைத்திய பரிசோதரனகளை மேற்கொண்டதோடு, மருந்துப் பொருள்களையும் வழங்கினர். ஐ

# வீடமைப்பு பொதுவசதிகளை மேம்படுத்துவதற்கான அரசின் முதலீடுகள் இரண்டு மடங்கால் அதிகரிப்பு!


பிரதமர் ரணில் தெரிவிப்பு

வீடமைப்பு பொதுவசதிகளை மேம்படுத்துவதற்கான அரசின் முதலீடுகள் இரண்டு மடங்கால் அதிகரிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனறாகலை மாவட்டத்தில் தெவிபுதகம மாதிரிக் கிராமம் பிரதமர் ரணில் தலைமையில் மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. இதுதொடர்பான நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

இதன்போது, இந்து சமுத்திரத்தின் கேந்திர மத்திய நிலையமாக இலங்கையை மாற்றியமைப்பது அரசின் இலக்காகும் என்றும் பிரதமர் கூறினார்.

2025ஆம் ஆண்டளவில் புதிதாக 17 ஆயிரத்து 500 உதாகம்மான கிராமங்களை ஏற்படுத்துவது அரசின் இலக்காகும் என்று நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தெனிபுதகம உதாகம்மான கிராமம் 93 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 52 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் அமெரிக்க – இலங்கை விமானப்படைகளின் கூட்டு நடவடிக்கை!



அமெரிக்க – இலங்கை விமானப்படைகள் இணைந்து வவுனியாவில் பசுபிக் ஏஞ்சல் என்ற கூட்டு மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

ஒரு வாரகால கூட்டு நடவடிக்கை கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் அமெரிக்க விமானப்படை மருத்துவர்கள், மற்றும் அதிகாரிகள், இலங்கை விமானப்படை அதிகாரிகளுடன்இணைந்து மருத்துவ முகாம்களையும், ஏனைய சுகாதார பராமரிப்பு பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நாளாந்தம் சுமார் 1000 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியில் வவுனியா அலகல்ல மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், இலங்கைக்கான பதில் அமெரிக்க தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், அமெரிக்காவின் பசுபிக் விமானப்படையின் தேசிய வான்காப்புப் படையின் உதவித் தளபதி மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் எய்போர்ட், மற்றும் இலங்கை விமானப்படை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா– இலங்கை இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் நோக்கில் பசுபிக் ஏஞ்சல் என்ற மனிதாபிமான கூட்டு நடவடிக்கை கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச சைட்டீஸ் மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில்!

அழிவடையும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள தாவரங்களையும் விலங்குகளையும் பாதுகாப்பதற்காக மக்களை விழிப்பூட்டும் நோக்கில் இடம்பெறும் சர்வதேச சைட்டீஸ் மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் இடம்பெறவுள்ளது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இம்மாநாடு 2019 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 03 ஆம் திகதி வரை கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளதுடன், 183 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுற்று சூழல் அமைப்புகள், உலகளாவிய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட நாலாயிரத்தை அண்மித்தோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச மட்டத்திலான சைட்டீஸ் சமவாயம் எனப்படும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் வன விலங்குகளினதும் தாவரங்களினதும் சர்வதேச வணிகம் பற்றிய சமவாயம் 1973 ஆம் ஆண்டு வொஷிங்டன் நகரில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வின்போதே கைச்சாத்திடப்பட்டு, 1975 முதல் அமுல்படுத்தப்பட்டதுடன், 1979 ஆம் ஆண்டில் இலங்கை இச்சமவாயத்தில் இணைந்துகொண்டது.

இலங்கையின் வனப்பிரதேசத்தை மேம்படுத்துவதற்கும், வன விலங்குகளையும் உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்கும் பேண்தகு அபிவிருத்தி கொள்கைகளின் ஊடாக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பாரிய வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவரும் தருணத்தில் இம்மாநாடு இலங்கையில் இடம்பெறுவது விசேட அம்சமாகும்.

மாநாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்னவின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளும், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# நல்லாட்சி அரசின் மூன்று ஆண்டு பூர்த்தி; வீட்டுத்திட்ட அடிகல் நாட்டினார் செல்வம் எம்.பி!



நல்லாட்சி அரசின் மூன்று ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வவுனியாவில் வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ராகுலன் தலைமையில் இந்நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டு வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

நல்லாட்சி எனப்படும்தேசிய அரசின் மூன்றுவருட பூர்த்தியைமுன்னிட்டுநாடாளாவிய ரீதியில் 100 மாதிரி கிராமங்களை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதற்கமைய வவுனியா மாவட்டத்தில்தரணிக்குளம் புதியநகர் மற்றும் மகாறம்பைக்குளம் பகுதிகளிலுமாக ஐந்து மாதிரி கிராமங்களுக்கு அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டிருந்தது. தரணிக் குளம் புதியநகர் பகுதியில் மூன்று மாதிரி கிராமங்களுக்குமாக மொத்தம் 143 வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் தெற்குதமிழ் பிரதேசசபை தலைவர் து.நடராஜசிங்கம், மீள்குடியேற்ற அமைச்சின் வவுனியா மாவட்ட முகாமையாளர் வி.சிவலிங்கம், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மற்றும் கிளிநொச்சி முகாமையாளர்களான வி.குரூஸ், கிராம சேவகர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir









# தமிழ் மக்களை ஏமாற்றுகிறது நல்லாட்சி அரசு

## மாவை சேனாதிராசா நேற்று விசனம்
## தென்மராட்சி தூபி திறப்பு விழாவில்

- எஸ்.நிதர்ஷன் -

**எமது மக்களைக் கொன்று குவித்த இராணுவத்தினர் விசாரிக்கப்படவேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கை. ஆனால் தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கின்ற நல்லாட்சி அரசின் அமைச்சர்களும் ஜனாதிபதியும் இராணுவத்தினரை விசாரிப்பதற்கு இடமளிக்க முடியாது எனக் கூறி எங்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகின்றனர். இதனை உலகமும் அறிந்து கண்மூடித்தனமாகச் செயற்படுகிறது. உலகமும் தங்கள் நலனில் அக்கறையுடன் செயற்படுவதாலேயே அரசின் நிலைப்பாடுகளுக்கு உலகம் ஆதரவளிப்பதாக இருக்கின்றது. சர்வதேசத்தின் இத்தகைய செயற்பாடுகள் எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையே தருகின்றன.**

**இவ்வாறுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

கடந்த 1984 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட – தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்களையும் – கொல்லப்பட்ட கைதடி மக்களையும் – நினைவு கூரும் தூபி திறப்பு விழா நிகழ்வு தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்றிலில் நேற்று நடைபெற்ற போது அந்நிகழ்வில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :–

போர்க் காலத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களின் செயற்பாடுகள் அளப்பரியவை. அந்தக் காலத்தில் பல்வேறு அச்சுறுத்தல்கள், இடையூறுகளுக்கு மத்தியிலும் மக்களுக்கான தமது சேவைகளை சிறந்த முறையில் அவர்கள் மேற்கொண்டு வந்திருந்தனர். அவ்வாறு மன உறுதியுடன் தைரியமாக அவர்கள் செயற்பட்டு வந்ததமையாலேயே இராணுவத்தினரால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் கொல்லப்பட்டமை அவர்கள் ஆயுதம் எடுத்தவர் கள் என்பதற்காகவோ அல்லது விடுதலைப்புலிகள் என்பதற்காகவோ அல்ல. அவர்களை இராணுவம் வெறுமனே எழுந்த மானமாகத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொன்றிருக்கின்றது. எமது மக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றிருக்கின்றார்கள் என்பதற்கு இந்தச் சம்பவமும் ஓர் உதாரணமாகவே இருக்கின் றது.

அவ்வாறு இங்கு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் இருக்கின்றன. எமது மக்கள் போர் முனையிலும் அதற்கு முன்னரும், பின்னரும் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றனர். இன்றைக்கும் இராணுவத்தினரின் அத்தகைய தொடர்ச்சிப்போக்கு எங்களது மண்ணிலே இருக்கின்றது. ஆகவே இந்தக் கொலைகளுக்குக் காரணமான இராணுவத்தினர் விசாரிக்கப்படவேண்டும் என்பதே எங்களது கோரிக்கையாகும்.

ஆனால் நல்லாட்சி அரசு தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்றதாக இருந்தாலும் ஜனாதிபதியும் முக்கிய அமைச்சர்களும் இராணுவத்தினரை விசாரிப்ப தற்கு இடமளிக்கமாட்டோம் என்று கூறி எங்களையும் உல கத்தையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதை உலகமும் கண்மூடித்தனமாக பார்த்துக் கொண்டு இருக்கிறது. ஏனெனில் உலகம் தங்களது நலன்களைக் கருதியேசெயற்படுகிறது. இவ்வாறு, அரசாங்கத்தின் இது போன்ற நிலைப்பாடு களை சர்வதேசம் ஆதரிப்பது எங்களுக்கு மிகவும் ஏமாற்றத்தைத் தான் தந்திருக்கிறது.

ஆனால் எங்களுடைய மக்களின் கோரிக்கை விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே ஆகும்.

இந்த மண்ணிலே உயிர்களைப் பலி கொடுத் தவர்களுடைய நினைவுகள் மறைந்து போகவில்லை. அவை வரலாற்றில் பதிந்து போயுள்ளமை போல தமிழ் மக்களது இதயத்திலே காயங்களும் மாறாத நினைவு களாக இன்றைக்கும் இருக்கின்றன.

இந்த நினைவுகளால்தான் முள்ளிவாய்க்கால் உட்பட பல இடங்களிலும் இந்த நினைவு அஞ்சலிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்களை நாங்கள் மறந்து விடவில்லை. எங்கள் மனதில் இருந்து அவர்கள் விடுபடவில்லை. அந்த அத்திபாரம் அவர்கள் சிந்திய இரத்தம் கொடுத்த விலை. உயிர்ப்பலிகள் – எங்களுடைய இனத்தின் விடுதலைக்கு அத்திபாரமாக, அடிப்படையாக அமைந்திருக்கின்றன என்பதால் இன்னமும் நாங்கள் மனஉறுதியுடனே உள்ளோம். ஆகவே எமது மக்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நாம் தொடர்ந்தும் பயணிப்போம். – என்றார்.

# தமிழர் மனதில் வெறுப்பை ஊட்டுகின்றன படைகளின் போர் வெற்றிச் சின்னங்கள்

## அதனால் அவற்றை அகற்ற ஜனாதிபதியை கோருகிறார் முதல்வர்

- எஸ். நிதர்ஷன் -





யாழ்ப்பாணம், ஓக.19

**ஆயுதப்படைகளின் கடந்த கால வெற்றிகளை நினைவு கூரும் விதத்தில் பொது இடங்களிலும், சந்திகளிலும் யுத்த வெற்றிச் சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றமை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்துவனவாக இல்லை. அதற்கு மாறாக, கடந்த காலங்களில் தம் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள், தாம் எதிர்கொண்ட ஆற்றொணா துன்ப துயரங்களை மீள நினைப் பூட்டி அவர்கள் மனக் காயங்களை மேலும் சீண்டி நோகப் பண்ணுபவையாகவே உள்ளன.**

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் மூலம் சுட்டிக் காட்டியிருக்கின்றார் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இந்தப் போர் வெற்றிச் சின் னங்கள் தமிழ் மக்கள் மனதில் வெறுப்பையும் இனவாத எண்ணங்களையுமே தூண்டுகின்றன.

இங்குள்ள பிரதான இனங்கள், சமூகங்கள் இடையே ஐக்கியம், புரிந்துணர்வு, நல்லிணக்கம், அமைதி போன்றவற்றை உருவாக்குவதற்கு இத்தகைய போக்கு உதவப் போவதேயில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின மனங்களை வென்று, தமிழர்கள், சிங்களவர் கள் மற்றும் ஏனையோரிடையே பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு, இவ்வாறு பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் காட்சிப்படுத்துகின்றமையை நிறுத்துவதே நல்ல ஆலோசனையாக இருக்க முடியும்.

தேவையானால், அத்தகைய நினைவுச் சின்னங்களில் விவரத் தொகுப்பை – பட்டியலை – உங்களுக்கு அனுப்பி வைக்க முடியும்.

நாட்டின் நலன் கருதி, அத்தகைய காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளில் எதிர்காலத்தில் ஈடுபட வேண்டாம் எனப் படைகளுக்கு உத்தரவிடுமாறு தங்களை விநயமாக வேண்டுகிறோம்.

பரஸ்பரம் புரிந்துணர்வையும், நல்லெண்ணத்தையும் காட்டுவதற்காக வாய்ப்புள்ள இடங்களில் இருந்து அத்தகைய நினைவுச் சின்னங்களை மாற்றியமைக்கவோ அல்லது அகற்றவோ உரிய வேளை வந்துவிட்டது.

– இவ்வாறு இவ்விடயம் தொடர்பாகத் தாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் முதலமைச்சர் தெரிவித்திருக்கின்றார். (உ)

# காங்கேசன் கடலில் 83 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

காங்கேசன்துறைக் கடலில் 8 கடல் மைல் தொலைவில் சுமார் 39 பொதிகளில் மிதந்து கொண்டிருந்த 83.5 கிலோ கோரள கஞ்சாவை கடற்படையினர் நேற்று மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கரைக்குக் கடத்தும் இலக்குடன் சந்தேக நபர்கள் இவற்றைக் கடலில் மிதக்க விட்டிருக்கலாம் என்று கடற்படைத் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## உண்மையை மறைக்கும் முயற்சி

நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்தமையால் ஊடக சுதந்திரம் மீண்டுவிட்டது, வெள்ள வான் கடத்தல்கள் இல்லாமல் போய்விட்டன, கருத்துச் சுதந்திரம் கொடி கட்டிப் பறக்கின்றது என்றெல்லாம் ஜனாதிபதி, பிரதமரில் இருந்து ஆட்சித் தலைவர்கள் அனைவருமே பீற்றிக் கொண்டு, தமக்குத் தாமே பெருமை பேசிக் கொள்கின்றனர்.

ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மீதான அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் நிறுத்தப்பட்டமையாலும், வெள்ளை வான் கடத்தல்கள் நின்று விட்டமையாலும் ஊடக சுதந்திரம் மீண்டு விட்டது என்றோ, கருத்துச் சுதந்திரம் நிலை நிறுத்தப்பட்டு விட்டது என்றோ கூறுவது வெறும் அபத்தமன்றி வேறில்லை.

கடந்த ஆட்சியின் இருண்ட யுகக் காலத்தில் கடத்தப்பட்ட, தாக்கப்பட்ட, கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் ஊடகங்கள் மீதான நேரடி வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பிலும் சுயாதீனமான – உண்மையான – நேர்மையான – விசாரணைகள் நடைபெற்று, குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும் சூழல் உருவானால் மட்டுமே உண்மையான ஊடக சுதந்திரம் கிட்டியிருப்பதாகக் கருதமுடியும்.

ஆனால், இந்த நல்லாட்சி அரசிலும் அந்தச் சுதந்திரம் கிட்டவில்லை. அப்படியில்லையேல் கிட்டிய ஊடக சுதந்திரமும் கூட பேரினவாதப் பண்பியல்பிலான சுதந்திரமேயன்றி உண்மையான கருத்துச் சுதந்திரம் அல்ல. இதுவே யதார்த்தப் புறநிலையாகும்.

இப்படி இனப்பாகுபாட்டு அடிப்படையிலான ஊடக சுதந்திரமே இங்கு மீண்டுள்ளது என்பதைத் தெரிந்தோ, தெரியாமலேயோ – புரிந்தோ, புரியாமலேயோ – ஒப்புக் கொண்டிருக்கின்றார் இலங்கையின் சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார.

கடந்த இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழர்கள்தாம். கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட, தாக்கப்பட்ட, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட, தடுப்புக் காவலில் வாடிய, காணாமல்போன ஊடகவியலாளர்கள் அனேகர் தமிழர். வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள். தமிழ் ஊடகங்களே அதிகம் இலக்கு வைக்கப்பட்டன.

ஆனால், இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும், தமிழ் ஊடகங்களுக்கும் எதிராக நடத்தப்பட்ட எந்தத் தாக்குதல் குறித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை – ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பில் மட்டும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை எடுத்து, கொலைகாரர்களைத் தண்டிக்காமல் விட்ட செயலைத் தவிர.

ஆனால் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்கள் தொடர்பில் இந்த நல்லாட்சி அரசு கனகாத்திரமான நடவடிக்கைகளை எடுத்து, விசாரணைகளைத் துரிதப்படுத்தி, முன்நகர்ந்திருக்கின்றது.

அதனையே சட்டம், ஒழுங்கு அமைச்சர் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை, 'த நேஷன்' பத்திரிகையின் இணை ஆசிரியர் கீத் நொயர், 'ரிவிர' ஆசிரியர் உபாலி தென்னக்கோன் ஆகியோர் மீதான கொடூரத் தாக்குதல்கள், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை உட்பட ஐந்து ஊடகவியலாளர்கள் பற்றிய விசாரணைகளே இப்போது நடைபெற்று வருகின்றன.

எனினும், பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்த கொடூரங்கள் குறித்து இன்னும் விசாரிக்கப்படவில்லை. – என்று இப்போது கூறுகின்றார் சட்டம், ஒழுங்கு அமைச்சர்.

அவரது தாகவல்களும், பாதிக்கப்பட்ட தென்னிலங்கைச் சிங்கள ஊடகவியலாளர்கள் தொடர்பில் மட்டுமே விசாரணைகள் நடந்திருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளும் ஒப்புதல் வாக்குமூலமேயன்றி வேறில்லை.

மேற்படி தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து முறைப்பாடுகள் இருந்தாலும் வெற்றிகரமான தகவல்கள் இல்லை என்று சப்புக்கட்டு வியாக்கியானம் ஒன்றையும் – விளக்கம் ஒன்றையும் – முன் வைக்கின்றார் அமைச்சர் மத்தும பண்டார.

இந்தச் சம்பவங்கள் குறித்து பூர்வாங்க விசாரணைகளைக் கூட ஆரம்பிக்காமல், வெற்றிகரமான தகவல்கள் இல்லை என்பதால் அவை தொடர்பில் விசாரிக்கப்படவில்லை என்று கூறி முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முயல்கின்றார் அமைச்சர் என்பதே வேதனைக்குரிய விடயமாகும்.

பலநூறு பேர் பார்த்திருக்கப் பட்டப் பகலில் வெள்ளை வானில் கடத்தப்பட்டவர் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகை ஆசிரியரே பின்னர் கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் விசாரணை பிரிவில் கண்டுபிடிக்கப்பட்டார்.

அவரை விசாரித்தால், அவரைக் கடத்தியோர், தடுத்து வைத்திருந்தோர் என்ற வரிசையில் கடத்தலில் ஈடுபட்ட தரப்பும் சங்கிலித் தொடராகச் சிக்கும் வாய்ப்புண்டு.

குறைந்த பட்சம் வாக்குமூலம் பெறுவதற்காகவாவது அந்த ஆசிரியரை அழைத்து இன்னும் விவரமே கேட்கவில்லை.

அப்படியிருக்கையில் தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் குறித்து முறைப்பாடுகள் இருந்தும் வெற்றிகரமான தகவல்கள் இன்மையால் முன்னேற்றம் இல்லை என்று நாட்டின் சட்டம், ஒழுங்கு அமைச்சரே பகிரங்கமாகத் தோன்றிக் கூறுவது உண்மைக்கு மாறான நடவடிக்கையன்றி வேறில்லை.

# வடக்கு வேலையின்மைப் பிரச்சினை: நிலைமையை விளக்குகிறார் முதல்வர்



**வடக்கு வேலையின்மைப் பிரச்சினை தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய மூன்று கேள்விகளையும் அவற்றுக்கான பதில்களையும் இவ்வாரத்துக்கான கேள்வி – பதிலாக அனுப்பி வைத்துள்ளார் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்**

1.கேள்வி –வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த அமைச்சுக்கள்: திணைக்களங்களில் 7,510 அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் நான்கரை ஆண்டுகளாக இவற்றை நிரப்ப முடியாதமை ஏன்?

பதில் – மொத்தம் 6,338 வெற்றிடங்கள் இருக்கின்றன என தெரிய வருகின்றது. அவற்றுள் மத்திய அரசினால் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்கள் 3,329. மாகாண அரசினால் நிரப்பப்பட வேண்டியவை 3,009.

இந்த வெற்றிடங்கள் காலத் துக்குக் காலம் ஏற்படுகின்றன. இளைப்பாறல்கள், இடமாற்றங் கள், பதவி விலகல்கள், இறப்புக்கள் எனப் பல காரணங்களால் இந்த வெற்றிடங்கள் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தினத்தில் வெற்றிடங் கள் உருவாவதில்லை. நாளாந்தம் இவை மாறிக் கொண்டேயிருப்பன. ஒவ்வொரு சேவையிலும் கணிசமான அளவு வெற்றிடங்கள் ஏற்பட்ட பின்னரே சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டும் தகைமையுடையோர் முன்னிலையாகாத சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணத்திற்கு மொழிபெயர்ப்பாளர்களைக் குறிப்பிடலாம். மேசன்மார்கள், குழாய்பழுதுபார்ப்பவர்கள், பம்புகளை இயக்குபவர்கள், மர வேலை செய்வோர், தையல்க்காரர்கள் எனப் பலரின் வெற்றிடங்கள் கவனத்திற்கு வந்துள்ளன. எனினும் காலத்திற்குக் காலம் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டே உள் ளன. உதாரணத்திற்கு நேற்றைய தினம் நாம் 110 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நியமனங்கள் கையளித்தோம். ஒவ்வொரு வருடமும் இவ்வாறு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

தற்போது எம்மால் நிரப்பப்பட வேண்டியவை 3,009. ஆனால் புதிதாக நேற்று நியமனம் கொடுக்கப்பட்டவர்களும் அந்தத் தொகையினுள் அடங்குகின் றனர்.

தவணைக்குத் தவணை நாம் கொடுத்து வந்து கொண்டிருக்கின்ற நியமனங்கள் பற்றிய முழு விபரங்களையும் கோரியுள்ளேன். அவை கிடைத்ததும் உங்களுக்குத் தெரியப்படுத்துவேன்.

மாகாணசபையின் நிர்வாகத்தில் இருக்கும் பதவிகள் அனைத்தினது தொகை 40,422. இவ்வளவு ஆளணியும் மத்திய அரசினாலும் மாகாண அரசினாலும் நிரப்பப்படுகின்றன. மாகாண அரசினால் நிரப்பப்படவேண்டிய ஆளணியில் 31.07.2018 அன்று வெற்றிடமாக நிரப்பப்படவேண்டிய ஆளணியினர் 3009. இது 7.4 வீதம் ஆகும் (3009/40422X100= 7.4) ஆகும்.

2.கேள்வி – வடக்கில் பல ஆயிரக் கணக்கில் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பற்றிருக் கும் நிலையில் இவ்வாறு பெருந் தொகையான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமையால் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வடக்கு மாகாணசபை அநீதி இழைத்துள்ளதே?

பதில்: பதவி வெற்றிடங்கள் என்பது ஒரு நிலை. வேலை வாய்ப்பற்றவர்கள் என்பது பிறிதொரு நிலை. இரண்டையும் சேர்த்து எம்மைக் குறை கூறாதீர்கள். அதாவது குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு வேலைவாய்ப்பற்றவர்கள் தகைமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு வாகன சாரதி வெற்றிடம் ஒன்று இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஐம்பது பேர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலையின்றி இருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த ஐம்பது பேருக்கும் சாரதி தேர்ச்சிப் பத்திரம் இல்லை என்றால் என்ன செய்வது? பதவி வெற்றிடமாக இருக்கும் ஐம்பது பேரும் வேலையற் றிருப்பார்கள். ஆகவே வேலையற்றிருப்போர் யாவரும் எமக்கிருக்கும் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தகைமை பெற்றவர்கள் என்று நினைத்து எம்மைக் குறை கூறுவது முறையாகாது.

பல வெற்றிடங்களை நிரப்பத் தோதான தகைமை உடையவர்கள் இல்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். இது கல்வித் தேர்ச்சியில் உயர் நிலை அடைந் தவர்களுக்கும் பொருந்தும் கல்வி நிலையில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும் பொருந்தும். பல்கலைக்கழகம் வரையில் இலவ சக் கல்வி பெற்று உயர் நிலையை அடையும் எம்முள் பலர் வெளி நாடுகளுக்குச் செல்வது உங்களுக்குத் தெரியும். அவர்களால் நிரப்பக்கூடிய வெற் றிடங்களும் எமது வெற்றிடப் பட்டியலில் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இல்லாதமையால் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருக்கின்றது. அதே போல் தொழிற்கல்வி கற்று சில தொழில்களில் தேர்ச்சி பெற்ற பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைகள் தேடிச் செல்வதால் இங்கு ஏற்படும் வெற்றிடங்கள் பல தொடர்ந்து நிரப்பப்படாது இருப்பதையும் நீங்கள் உணர வேண்டும். தொழில்த் திறன் உள்ளவர்கள் இல்லாததால் வடமாகாணம் படும் அவஸ்தையை நீங்கள் உணர வேண்டும். தாதிகளுக்கு வெற்றிடம் உண்டு. தகுந்த தமிழில் பேசும் தாதிகள் இல்லாத தால் நாம் மாகாணத்திற்கு வெளி யில் இருந்து தாதியரை அழைத்து வந்து வெற்றிடங்களை நிரப்புகின்றோம். நிரப்பிய பின்னரும் வெற்றி டங்கள் பல உண்டு. நீங்கள் கூறும் வேலையற்றவர்களை நாம் தாதியர்களாக நியமிக்கலாமா? அவர்க ளுக்கு அரசாங்கம் எதிர்பார்க்கும் தகைமை இருக்க வேண்டும். தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வடக்கு மாகாணசபை அநீதி இழைத்துள் ளதா அல்லது வடக்கு மாகாண சபைக்குத் தமிழ் இளைஞர் யுவதிகள் அநீதி இழைத்துள்ளார்களா? இலகுப் பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் பலர் வேலைவாய்ப்பின்றி இருப்பது அவர்கள் எமது வெற்றிடங்கள் பலவற்றை நிரப்பத் தகுதி இல்லாத தன் காரணத்தால். இதனால்த்தான் எமது தேவைகளுக்கு ஏற்பவும் கல்வி புகட்டப்பட வேண்டும் என்று கூறி வருகின்றோம்.

3.கேள்வி : வடக்கில் வேலை வாய்ப் புக்களை வழங்கும் சந்தர்ப்பம் இருந்தும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்த வடக்கு மாகாணசபை தவறியுள்ளமை வடக்கு மாகாண சபையின் செயற்றிறன் அற்ற செயற்பாடாக கருத முடியாதா?

பதில் : முன்னைய கேள்விகளுக்கு நாம் கூறிய காரணங்கள் உங்களுக்கு எமது இடர் நிலையையும் இக்கட்டான நிலையையும் உணர்த்தி இருக்கும். எமது வட மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் தான் இவ்வாறான குற்றங்களை முன் வைத்து வருகின்றனர். அடுத்த தேர்தலுக்கான முனகல்கள் இவை. முன்பும் வெற்றிடங்கள் இருந்தன. இவர்களோ நீங்களோ கேட்கவில்லை. திடீரென்று பதவி முடியும் காலத்தில் இவற்றை எழுப்பக் காரணம் என்ன? வாசகர்கள் பதில் அறிவார்கள். வேலை வாய்ப்புக்களை வழங்க இருக்கும் சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பது தவறான கருத்து. நாம் காலத்துக்குக் காலம் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகளை எடுத்தே வருகின்றோம். அதில் பல சிக்கல்கள், தடைகள் எமக்கிருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் இன்னமும் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தின் கீழ்த்தான் பதவி வகித்து வருகின்றோம். நேற்றைய தினந்தான் சுகாதாரத் தொண்டர்கள் பலர் வந்து என்னைச் சந்தித்தார்கள். அவர்களுள் பலர் அடிப்படைக் கல்வித் தகைமை அற்றவர்கள். ஆனால் பல வருட காலம் தொண் டர்களாகத் தொழில் புரிந்து வருப வர்கள். வெற்றிடங்களை வெளியில் இருந்து கல்வித்தகைமை பெற்றவர்களைக் கொண்டு நிரப்பலாம். அப்போது சுகாதாரத் தொண்டர்கள் பலர் தெருவிற்குச் செல்லவேண்டி வரும். தற்போது எமது புள்ளி விபரங்கள் அவர்கள் செய்யும் வேலைகளையும் வெற்றிடங்களாகவே காட்டுகின்றன. ஆனால் அவர்கள் தொண்டர்களாகக் கடமையாற்றுகின்றார்கள். அவர் களை வேலைகளில் ஈடுபடுத்த பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கின்றது. அவர்களின் கல்வித் தகைமையை, வயதெல்லையைத் தாண்டிய அவர்களின் வயது என்று பலவற்றை நாம் தாண்டியே அவர்களுக்கு நியமனங்கள் அளிக்க வேண்டிவரும்.

தொண்டர் ஆசிரியர்கள் பலர் தமது தொடர்ந்த சேவையினை நிரூபிக்க முடியாத நிலையில் நியமனம் பெறமுடியாதவர்களாக இருந்தார்கள். Log Book (பதிவுப் புத்தகம்) காணாமல் போன மையே அதற்குக்காரணம். அவர்களிடமிருந்து சில நிபந்தனைகளுக்கு அமைவாக சத்தியப் பத்திரங்கள் பெற்று நியமனங்களை வழங்கலாம் என்று நானே சிபார்சு செய்து அண்மையில் பல இடர்பா டுகளுக்குப் பின்னர் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. எத்தனை சத்தியாக்கிரகங்கள், ஆர்ப்பாட்டங்கள், சண்டை, சச்சரவு கள் என்பவற்றைத் தாண்டி அவர் கள் தமது நியமனங்களைப் பெற்றார்கள் என்று அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். அவர்க ளுள் நியமனம் பெற்ற ஒருவர் வந்து உங்கள் செயற்றிறனால்த்தான் எமக்கு நியமனம் கிடைத்தது என்று என்னிடம் கூறும் போது கண்ணீர் வடித்தார். அதே நபர் சென்ற வருட இறுதியில் என் அலுவலக அறையில் கத்திக் கூப்பாடு போட்டு தர்க்கித்தவர். ஆனால் அவரின் மேல் எனக்குக் கோபம் வரவில்லை. அனுதாபமும் அன்புமே மேலோங்கியிருந்தது. அதை அவர் புரிந்து கொண்டிருந்த தால் தான் வேலை கிடைத்ததும் கண்ணீர் உகுத்தார். நாங்கள் செயற்றிறனுடன் தான் செயற்படுகின்றோம். வெளியில் இருந்து குற்றம் சுமத்துவது இலகுவானது. தடைகளை நீக்கி, தகைமையை உறுதி செய்து, தகுந்தவர்களை உள்ளீர்ப்பது அத்தனை சுலபமான காரியமல்ல.

## நாளை

20.08.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : கேட்டை பி.இ. 1.39 வரை
திதி : நவமி மு.ப. 7.12 வரை
சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05 வரை

# பொத்துவில் மக்களின் காணிகள் மிக விரைவில் விடுவிக்கப்படும்!




வனவளத்துறை உயரதிகாரி தெரிவிப்பு

பொத்துவில் ஊறணி கனகர் கிராம தமிழ் மக்களது காணிகள் யாவும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக விடுவிக்கப்படும் என இலங்கையின் வனவளத்துறை உயரதிகாரியான மஹிந்த செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 4 தினங்களாக பொத்துவில் பகுதியில் நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களிடம் நேற்று முன்தினம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நான்காவது நாளாக போராட்டத்திலீடுபட்டுவரும் மக்களைச் சந்திக்கவென கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி வண. ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் மற்றும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் சென்றிருந்தனர்.

அவர்கள் மக்களுடன் கலந்துரையாடிவிட்டு வனவளத் துறை அதிகாரிகளை அவ்விடத்திற்கு வரவழைத்தனர். அங்கு அப்பகுதிக்குப்பொறுப்பான லகலைப் பிராந்திய வனத்துறை அதிகாரி கே.கே.எஸ்.ஆரியரத்னவும் சக உத்தியோகத்தர்களும் வந்திறங்கினர். அவர்களிடம்மக்களும்தேரரும்கலந்துரையாடினர்.

அவர் உடனே அம்பாறை மாவட்ட வனத்துறை அதிகாரி டி.முனசிங்கவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு போராட்டக்காரர்களுடன் வெளிப்படையாகப் பேச வைத்தார்.

மாவட்ட வனத்துறை அதிகாரி முனசிங்க மக்களிடம் தெரிவிக்கையில்–

நாம் இந்த காணியை விடுவித்து மக்களிடம் வழங்கவேண்டும் என்று எமது சாதகமான அறிக்கையை கொழும்புக்கு அனுப்பிவிட்டோம். அங்கிருந்து பதில் வந்தால் அவற்றை அளந்து தர நடவடிக்கை எடுப்போம் என்றார்.

மேலும் அவர் இலங்கையின் வனவளத்துறையில் அதி உச்ச மேலதிகாரியுடன் பேசவதற்கும் ஏற்பாடு செய்தார். அதன் படி சில நிமிடங்களில் கொழும்பிலிருந்து வனவள பாதுகாப்புத்துறை உயரதிகாரி மஹிந்த செனவிரத்ன தொலைபேசியில் மக்களுடன் சிங்களத்தில் பேசினார்.

அவர் அங்கிருந்து கூறுகையில்–

அம்பாறைமாவட்டத்திலிருந்து கிடைத்த அறிக்கையை நாம் காணிக்குப்பொறுப்பான ஜனாதிபதி காணி ஆணைக்குழுவுக்கு எமது சிபாரிசையும் வைத்து சமர்ப்பித்துள்ளோம்.

அந்த ஆணைக்குழு கூடி சாதகமான முடிவை இன்னும் ஒருசில வாரங்களுள் அறிவிக்கும். அந்த முடிவு கிடைக்கப்பெற்றதும் இப்பகுதியை துப்புரவாக்கி மக்களிடம் அளந்து கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

உயரதிகாரியின் பதில் மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியபோதிலும் அந்த நல்ல முடிவு கிடைக்கப்பெறும்வரை தாம் அவ்விடத்தைவிட்டு அகலப்போவதில்லை என்று அங்கிருந்த வன அதிகாரி ஆரியரத்னவிடம் தெரிவித்தார்.

## எதிர்ப்புப் பேரணி நடைபெறும் இடத்தை முன்கூட்டியே அறிவிக்கப் போவதில்லை!



நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

அரசுக்கு எதிராக கொழும்பில் முன்னெடுக்கப்படவுள்ள எதிர்ப்பு பேரணி நடைபெறும் இடத்தை முன்கூட்டியே அறிவிக்க போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை கூறியுள்ளார்.

அரசுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி எதிர்வரும் ஐந்தாம் திகதி எதிர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. கொழும்பில் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொழும்பில் நடத்த எதிர்பார்த்துள்ள கூட்டம் எங்கு நடைபெறும் என்பது முன்னதாக அறிவிக்கப்பட மாட்டாது என நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் அவர் பேசுகையில் –

கூட்டம் நடைபெறும் இடத்தை முன்னதாக அறிவிக்க முடியாது. அவ்வாறு அறிவித்தால், அரசு கூட்டத்தை நடத்துவதற்கு நீதிமன்றத்தில் தடை உத்தரவைப் பெற்றுக் கொள்ளும்.

ஆகையினால், கூட்டம் இடம் பெறும் இடத்தை முன்னதாக சொல்லாமல் இருப்போம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## வடக்கில் இரு வருடங்களில் 7 ஆயிரம் அபாயகர வெடி பொருள்கள் அகற்றல்!



கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப்பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஓகஸ்ட் மாதம்; 15ஆம் திகதி; வரையான காலப்பகுதியில் 7147 அபாயகரமானவெடிப்பொருள்களைஅகற்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் 5 லட்சத்து 97 ஆயிரத்து 107 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 7 ஆயிரத்து 147 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

மேலும் இந் நிறுவனம் இரண்டு லட்சத்து 26 ஆயிரத்து 764 சதுரமீற்ற நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக அரசிடம் கையளித்துள்ளது.

கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசகர் ஹொலி இவன்ஸ் மற்றும் தேசிய கண்ணிவெடி அகற்றுதலுக்கான பொறுப்பதிகாரி மஹிந்த விக்ரமசிங்க அடங்கிய குழுவினர் இம்மாதம் 04 ஆம் திகதி இந்நிறுவனத்திற்கு வருகை தந்ததுடன் நிறுவன அலுவலகம் மற்றும் கண்ணிவெடியகற்றும் தளம் என்பவற்றைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் பாதையில் மண்சரிவு ; ரயில் சேவைகள் தாமதம்!

பதுளை – கொழும்பு பிரதான ரயில் போக்குவரத்து பாதையில் ஹட்டன் மற்றும் கொட்டகலை ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் சிங்கமலை சுரங்கப்பகுதிக்கு அருகில், 109 ஆவது மைல் கட்டைப்பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக மலையக ரயில் சேவைகளில் தாமத நிலை ஏற்பட்டது.

அதன்பின் பாதிப்பு ஏற்பட்ட ரயில் பாதையை சீர்செய்யும் பணிகள் ரயில் நிலைய ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டன.

தற்பொழுது ரயில் பாதையை சீர் செய்யப்பட்டு, மலையகத்திற்கான ரயில் சேவை வழமைக்குத்திரும்பியுள்ளதுஎன ஹற்றன் ரயில் நிலையத்தின் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

நேற்று முதல் மலையக பகுதிகளில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாகவே இந்த ரயில் பாதையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

## நல்லூர் இசையரங்கில் இன்று குழு இசை, இசைக் கச்சேரி

நல்லூர், ஓக.19

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் நடத்தி வரும் இசையரங்கில் இன்று மாலை 6.45 - 8.15 வரை குழு இசையும் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

இன்றைய குழு இசையின் – நெறியாள்கை திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா

பாட்டு: இ.பிரபு, கு.அனுசன், வை.பிரதீபன், பா.செந்தூரன், செ. பாலமுருகன், வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்: ம.லோகேந்திரன், கடம்: அ.செல்வரட்ணம்

இசைக்கச்சேரி: பாட்டு: சந்திரிக்கா ரவிக்குமார், வயலின்: கே.வேல. தீபன், மிருதங்கம்: வ.ரமணா, முகர்சிங்: சி.செந்தூரன்.

## சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் விவரங்களை வழங்குக!

### கல்வி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை



சீரற்ற காலநிலையால் பாதிக்கபட்ட பாடசாலைகளின் விபரங்களை உடனடியாக கல்வி அமைச்சுக்கு தெரிவிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் பாதிப்புக்கு உள்ளான பாடசாலைகளின் அதிபர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளவத்தை சபையார் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

தற்போது நாட்டில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இதனால் பாடசாலைகள் பாதிக்கப்படுகின்றன. தற்போது பாடசாலை விடுமுறை என்பதால் மாணவர்களுக்கு பாதிப்பு இல்லாவிட்டாலும் பாடசாலைகளுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

அதிபர்கள் விடுமுறை என கருதி வீடுகளில் இருக்காமல் பாடசாலைகளுக்குச் சென்று பாடசாலையின் நிலைமையை உடனடியாக பார்வையிட்டு பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்ததால் உடனடியாக கல்வி அமைச்சுக்கும், எனக்கும் அறியத்தரவும். அவ்வாறான நிலையில் பாதிப்புக்கு உள்ளாகும் பாடசாலைகளை விடுமுறைமுடிந்துஆரம்பிக்கும்முன்னர் மீள் நிலைக்கு கொண்டு வர முடியும்.

அத்துடன், தற்போது கல்வி பொது உயர்தர மாணவர் களுக்கான பரீட்சை நடைபெற்று வருகின்றது. இந்த பரீட்சை நடைபெறும் நிலையங்களில் பாதிப்புகள் ஏற்பட்டால் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் பரீட்சை திணைக்களத்தின் ஊடாக கல்வி அமைச்சுக்கு அறியத்தரவும்.

மேலும், இவ்வாறான நிலையில் மாணவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகனை தவிர்த்துக் கொள்ள முடியும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சுற்றுச் சூழல் மாசடைய பிளாஸ்டிக்கும் காரணம்

## தீமைகளோ ஏராளம்

- சா.ஜெ.முகில் தங்கம் -



பசுமை இல்ல வாயுக்களில் மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய மீத் தேனையும் எத்திலினையுமே பிளாஸ்டிக் பொருள்கள் அதிகம் வெளியிடுகின்றன.

இயற்கையும் இயற்கையைப் பாதுகாக்கும் விழிப்பு உணர்வும்தான் இன்றைய நிலைமைக்கு எல்லோருக்குமான கடமையாக மாறி வருகிறது. தெரிந்தோ தெரியாமலோ சுற்றுச் சூழலுக்குத் தீங்கிழைப்பவற்றுக்கு எதிராகப் போராடத் தொடங்கியுள்ளோம். புவி வெப்பமயமாதல், பசுமை இல்ல வாயுக்கள், காலநிலை மாற்றம் இந்த மூன்றும் அடுத்த தலைமுறைக்கு மாபெரும் ஆபத்தாக இருக்கும் என்பதால் அவற்றுக்குக் காரணமாக இருக்கும் நம்முடைய செயல்களை முடிந்த அளவுக்குக் குறைத்துக்கொள்ள விழிப்பு உணர்வு நடந்து வருகிறது.



அதேபோல் இந்த ஆபத்துகளை ஏற்படுத்தும் மூலங்களையும் கண்டறியும் ஆய்வுகளும்நடந்துவருகின்றன. அப்படி சமீபத்தில் நடந்த ஆய்வு ஒன்று நாம் இன்னும் விழிப்பாக நடக்க வேண்டிய தன் அவசியத்தைக் கோரியுள்ளது. நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்கள் மீத்தேனையும் எத்திலினையும் (பசுமை இல்ல வாயுக்கள்) வெளிப்படுத்தக் கூடியவை என அந்த ஆய்வு கூறுகிறது.

ஹவாய்ப் பல்கலைக்கழகம் (University of Hawaii) மற்றும் கடல், புவி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளியைச் (School of Ocean and Earth Science & Technology (SOEST)) சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

பிளாஸ்டிக் வளிமண்டலத்துடனும் மற்ற பொருள்களுடனும் வினைபுரிந்து எந்த வகையான வாயுக்களை வெளியிடுகிறது என்பதை ஆய்வு செய்ய நினைத்தனர் ஆய்வாளர்கள். பொதுமக்கள் பரவலாகப் பயன்படுத்தும் ஏழு பொதுவான பிளாஸ்டிக் மாதிரிகளை ஆய்வுக்காகச் சேகரித்தனர் ஆய்வுக்குழுவினர். இந்த மாதிரிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் மாதிரிகளும் கடலில் சென்று சேர்ந்த பிளாஸ்டிக் மாதிரிகளும் சாதாரணமாக மண்ணில் கிடந்த பிளாஸ்டிக் மாதிரிகளும் கலந்திருந்தன.

இவற்றை ஆய்வுக்கு உட்படுத்திக் கண் காணிக்கும்போது கடல்நீரில் இருந்தாலும் சாதாரணமாக வளிமண்டலத்துடன் வினைபுரிந்தாலும் அனைத்து மாதிரிகளும் பசுமை இல்ல வாயுக்களை வெளியிடவே செய்கின்றன.

### அதனைக் கைவிட்டு வாழப் பழகுவோம்



பசுமை இல்ல வாயுக்களில் மிகவும் தீங்கு விளை விக்கக்கூடிய மீத்தேனையும் எத்திலினையுமே அதிகம் வெளியிடுகின்றன. குறைந்த அடர்த்தியுடைய பொலிஎத்திலீனைக் கொண்ட பிளாஸ்டிக்குகள் மற்ற அனைத்து பிளாஸ்டிக்குகளை விடவும் அதிகமான அளவு பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுகின்றன.

"குறைந்த அடர்த்தியுடைய பொலிஎத்திலீன் (low density polyethylene (LDPE)) பிளாஸ்டிக் என்பது பிளாஸ்டிக் உற்பத்தியில் முக்கியமான ஒன்று. மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு குப்பைகளாகத் தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக்குகள் இவை என்கிறார் ஹவாய் பல்கலைக்கழக முன்னணி ஆய்வாளர் சாரா – ஜீன் ரோயர் (Sarah - Jeanne Royer).

குறைந்த அடர்த்தியுடைய பாலிஎத்திலீன் பிளாஸ்டிக் அதிக நேரம் சூரிய ஒளியில் இருந்தால் அதிக அளவிலான மீத்தேனையும் எத்திலீனையும் வெளியேற்றுகின்றன. இந்த ஆய்வானது ப்ளோஸ் ஒன் (PLOS One) ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், சாரா மற்றும் அவரது ஆய்வுக் குழுவினர் சிறிய துண்டுகளாக இருக்கும் பிளாஸ்டிக்கையும் ஆய்வு செய்துள்ளனர். அவற்றில் LDPE பிளாஸ்டிக் தூளானது LDPE துகள்களைவிட 500 தடவை அதிகமாக மீத்தேனையும் எத்திலீனையும் வெளியேற்றுகின்றன. LDPE பிளாஸ்டிக் என்பது மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் மெல்லிசான பிளாஸ்டிக் பைகள், பொலித்தீன் கைகள் போன்றவைதான். பிளாஸ்டிக்கிலிருந்து வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்களின் அளவு என்பது மிகவும் குறைவான ஒன்றுதான். பசுமை இல்ல வாயுக்களின் முக்கிய மூலங்களையெல்லாம் விடவும் பிளாஸ்டிக்குகள் குறைவுதான். ஆனால், தொடர்ந்து நீண்ட நாள்களாக வெளியேறுவதால் பசுமை இல்ல வாயுக்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர்.



உலகமே பிளாஸ்டிக் யுகமாக மாறிவிட்ட தற்போதைய நிலையில் இப்படியான ஆய்வு எல்லோரையும் பிளாஸ்டிக் பயன்பாட்டிலிருந்து விலகியிருக்கச் சொல்கிறது. கடலிலும் மண்ணிலும் வளிமண்டல காற்றிலும் இல்லாமல் வேறு இடங்களில் வைப்பதன் மூலம்தான் பசுமை இல்ல வாயுக்களை உருவாக் குவதைத் தவிர்க்கலாம். மேலும், இந்த ஆய்வு நம்மிடையே இருக்கும் கழிவு மேலாண்மை குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. வீட்டில் பயன்படுத்தும் பல்வேறு குப்பைகளும் கடைசியில் கடலுக்குத்தான் போய்ச் சேர்கின்றன. ஏற்கெனவே பிளாஸ்டிக் பொருள்கள் கடலையும் கடல் உயிரினங்களையும் பெருமளவில் மாசுபடுத்தியும் பாதித்தும் வருகின்றன என ஆய்வுகளும் சாட்சியங்களும் சொல்கின்றன. இப்போது அவை காலநிலை மாற்றத்திலும் பிரதிபலிக்கின்றன. எனவே, பிளாஸ்டிக் இல்லாமல் நாம் இல்லை என்ற நிலைமைதான் ஏறக்குறைய நிகழ்கிறது. அப்படி இருக்கும் போது இந்த ஆய்வு முடிவு களுக்காகவாவது மாற்று முயற்சியை முன்னெடுக்க வேண்டும். *

> பசுமை இல்ல வாயுக்களில் மிகவும் தீங்கு விளை விக்கக்கூடிய மீத்தேனையும் எத்திலினையுமே அதிகம் வெளியிடு கின்றன. குறைந்த அடர்த்தியுடைய பொலித்திலீனைக் கொண்ட பிளாஸ்டிக்குகள் மற்ற அனைத்து பிளாஸ்டிக்குகளை விடவும் அதிகமான அளவு பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுகின்றன.

## இறந்த தன் குட்டியை 17 நாள்களாக கடலில் சுமந்து சென்ற திமிங்கலம்



இறந்த தன் குட்டி திமிங்கலத்தின் உடலைச் சுமந்துகொண்டு, இரண்டு வாரங்களாக கடலில் சுற்றிய தாய் திமிங்கலத்தின் செயல் அனைவரையும் நெகிழச் செய்துள்ளது.

பசிபிக் கடலில் உள்ள திமிங்கலங்களின் எண்ணிக்கையை விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர். அந்த வகையில் 'ஜெ 35' என்று பெயரிடப்பட்ட திமிங்கலத்தை விஞ்ஞானிகள் கண்காணித்து வந்தபோது மனதை நெகிழும் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் தரப்பில், ஜெ 35 திமிங்கலம் ஒன்று பிரசவத்தின்போது இறந்த குட்டி பெண் திமிங்கலத்தைக் கடந்த இரண்டு வாரங்களாக பசிபிக் கடல் மற்றும் கனடா, அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளில் சுமந்து கொண்டு சுற்றி இருக்கிறது. இதனைக் கடந்த வெள்ளிக்கிழமை நாங்கள் கண்டறிந்தோம்" என்றனர்.

17 நாள்கள் முடிவில் ஜெ 35 தனது குட்டியைக் கடலில் போட்டு அங்கிருந்து நகர்ந்து மிகுந்த உணர்வுபூர்வத் தருணமாக இருந்ததாகவும், பசிபிக் கடலில் கடந்த 20 வருடங்களாக பிரசவத்தின்போது வெறும் 25% திமிங்கிலங்கள் மட்டுமே உயிர் பிழைக்கின்றன என்றம் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# வெடிப் பொருள்களை கண்டறிவதற்கு கீரிகளுக்குப் பயிற்சி!

## ஸ்ரீலங்கா இராணுவத்தின் முயற்சி வெற்றி; நாய்களை விட மோப்ப சக்தி அதிகமாம்

வெடி பொருள்களைக் கண்டறிய அதிநவீன கருவிகளும், பயிற்றுவிக்கப்பட்ட மோப்ப நாய்களும் பயன்படுத்தப் படுகின்றன. எனினும், வெடி பொருள்களைக் கண்டறிய கீரிப் பிள்ளையைப் பயன்படுத்தும் திட்டமொன்றை இலங்கை இராணுவம் முன்னெடுக்கிறது.

இந்தத் தகவல் கிடைத்த பின்னர், இது குறித்த விரிவான விவரங்களைச் சேகரிக்க 'பி.பி.ஸி. தமிழ்' அங்கு நேரடியாக சென்றிருந்தது.


கொழும்பின் புறநகர்ப் பகுதியான மத்தேகொட என்ற இராணுவ முகாமில் இந்த கீரிப்பிள்ளைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இராணுவத்தின் பொறி யியல் பிரிவு இந்தச் செயல்திட்டத்தை 2017ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வருகிறது.

வெடிபொருள்களைக் கண்டறிய இலங்கை இராணுவத்தில் பயிற்றுவிக்கப்பட்ட மோப்ப நாய்களே இதுவரை பயன்படுத்தப்பட்டன. தற்போது விலங்கினத்தில் அதிக மோப்ப சக்தி கொண்ட கீரிப்பிள்ளையைப் பயிற்றுவிக்கும் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது என இலங்கை இராணுவம் தெரிவித்தது.

இந்த புதிய முயற்சிக்குத் தலைமை வகிக்கும் மேஜர் சுபுன் ஹேரத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ...

"வெடிபொருள்களைக் கண்டறிய நாய்களை இதுவரைப் பயன்படுத்தி வந்தோம். வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்படும் இந்த நாய்களுக்கு அதிக செலவாகிறது. இதனைத்தவிர அதிநவீன கருவிகள் பயன்படுகின்றன. இந்தக் கருவிகளின் விலைகளும் அதிகமாக உள்ளன. எனவே இதற்கு மாற்று வழியைக் கண்டறியும் தேவை இருந்தது. நாய்களுக்கு ஈடாக கீரிப்பிள்ளையைப் பயன்படுத்த முடியுமா என்பதை ஆராய்ந்தோம். அதில் தற்போது வெற்றியும் கண்டுள்ளோம். பொதுவாக நாய்களை விடவும் கீரிக்கு மோப்ப சக்தி அதிகமாக இருக்கிறது. இதனால் வெடிபொருள்களை தேடிப்பிடிப்பதில் கீரி சிறப்பாக செயல்படுகிறது." என்று விவரித்தார்.

நாய்கள் இயல்பாகவே தரையில் அல்லது தனது தலைக்கு கீழ் உள்ள வெடிபொருள்களைக் கண்டுபிடிப்பதில் சிறப்பாகச் செயல்படுகிறது. எனினும், கீரிப்பிள்ளை தரைக்கு கீழும், தரையில் இருந்து சுமார் 4 அடி உயரத்திலும் உள்ள வெடிபொருள்களைக் கண்டறிவதில் நாயைவிட சிறப்பாகச் செயல்படுகிறது.



கீரிப்பிள்ளையைப் பயன்படுத்தும் இந்த முயற்சி, இதற்கு முன்னர் கம்போடியாவில் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததாக தேசிய விலங்கியல் காப்பகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். எனினும், இந்த முயற்சி சரியாக முன்னெடுக்கப்பட்டதாகவோ, வெற்றி பெற்றதாகவோ எவ்விதத் தகவலும் இல்லையெனக் கூறினார். எனவே, வெடிபொருள்களைக் கண்டறியக் கீரிப்பிள்ளையைப் பயன்படுத்தும் செயல்திட்டம் இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவிக்கிறது.

வெடிபொருள்களைக் கண்டறிய நாய்களையும், கீரிகளையும் பயன்படுத்துவதில் உள்ள பொதுத் தன்மைகள் குறித்து இராணுவத்திடம் கேட்டபோது...

"வெடிபொருள்களைக் கண்டறியும் விலங்கினத்தில் நாய்களே சிறப்பாக இதுவரை செயல்பட்டன. எனினும், கீரிப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க ஆரம்பித்ததில் இருந்து நாய்களைவிட அவை சிறப்பாக செயல்படுவதை அவதானிக்க முடிகிறது.

வெடிபொருள்களைக் கண்டறிய வெளிநாட்டு நாய்களே இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றன. குளிர் நாடுகளில் இருந்து தருவிக்கப்படும் அந்த நாய்கள் இலங்கையில் உள்ள தட்பவெப்ப நிலையினால் விரைவில் களைப்படைந்து விடுகின்றன. ஆனால், கீரிகள், நாய்களை விட நீண்ட நேரம் உழைப்பதை அவதானித்தோம் என்று வெடிபொருள்களைக் கண்டறிய கீரிகளைப் பயன்படுத்தும் திட்டத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

### சாம்பல் நிறக் கீரிகளுக்கு மோப்ப சக்தி அதிகம்

இலங்கையில் தங்க, சிவப்பு, சாம்பல் என மூன்று நிறங்களில் மூன்று வகை கீரிப்பிள்ளைகள் இருக்கின்றன. இவற்றில் சாம்பல் நிற கீரிகளுக்கே அதிக



மோப்ப சக்தி இருப்பது ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. பொதுவாக ஈர நில வலயத்தில் சிவப்பு நிற கீரிப்பிள்ளையும், உலர் வலயத்தில் சாம்பல் நிற கீரிப்பிள்ளையும் இலங்கையில் இருக்கின்றன. சிவப்பு, சாம் பல் நிறத்திலான இரண்டு கீரிகளும் இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தனியான பெயர்கள், இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுவதைப்போன்ற இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தில் தற்போது ஒன்பது கீரிப்பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றில் ஏழு கீரிப் பிள்ளைகளை இந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்திற்காக இரண்டு கீரிப்பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.

கீரிகள் குறித்து தற்போது ஆராய்ச்சி நடத்திவரும் இலங்கை இராணுவ அதிகாரி மேஜர் சுபுன் ஹேரத் மேலும் விளக்கமளித்தார்.

"கீரிகள் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே குட்டிகளைப் பிரசவிக்கின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது. குட்டிகளைப் பிரசவித்து, அவற்றை நீண்ட நாள்களுக்கு தனது பாதுகாப்பான பொந்துகளுக்குள் காப்பாற்றி வைத்துக் கொள்கின்றன. நீண்ட நாள்களுக்குப் பின்னரே அவற்றை தனித்துவமாக இயங்க அனுமதிக்கின்றன.

இதனால் குட்டிகளைப் பெறுவதில் சிக்கல் இருக்கிறது. எமது இரண்டாவது திட்டத்தின்படி, தற்போதுள்ள ஏழு கீரிகளையும் இனச்சேர்க்கை செய்து, அவற்றின் குட்டிகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இருக்கிறோம். இவ்வாறு பெறப்பட்ட ஒரு குட்டி மட்டுமே இராணுவத்தில் தற்போது இருக்கிறது. ஏனையவை காட்டில் இருந்து பிடித்து வரப்பட்டவை."

### சுமார் ஒரு வருடம் வரை பயிற்றுவிக்க நேரிடுகிறது

"வெடிபொருள்களைக் கண்டறிய முன்னர், ஆறு மாதங்களுக்கு கீரிப்பிள்ளையை பயிற்றுவிப்பாளர் தன்னுடன் பழக்கப்படுத்த வேண்டும். ஆறு மாதங்களின் பின்னரே பயிற்றுவிப்பாளருடன் கீரிப்பிள்ளை இணங்கிச் செயற்பட ஆரம்பிக்கிறது. அடுத்த ஆறு மாத காலத்திற்கு அதற்கு கட்டளைகளுக்கு கீழ்ப்படியவும், வெடிபொருள்களைக் கண்டறியவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. முழுமையாக ஒரு கீரிப்பிள்ளையைப் பயிற்றுவிக்க ஒரு வருடம் தேவைப்படுகிறது.

காட்டில் இருந்து நேரடியாக பிடித்து வரப்பட்ட கீரிப்பிள்ளை என்பதால் ஒரு வருடம் செல்கிறது. எனினும், குட்டியில் இருந்து பயிற்றுவிப்பதாயின் இதனை 80 வீதம் இலகுவாக செய்ய முடியும் என்பதே இலங்கை இராணுவத்தின் அனுபவமாக இருக்கிறது. எதிர்காலத்தில், போதைப் பொருள்களைக் கண்டறியவும் இவற்றைப் பயிற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளோம்" என்று கீரிகளைப் பயிற்றுவிக்கும் குழுவிற்கு தலைமை தாங்கும் அதிகாரி கூறினார்.

> "கீரிகள் குறித்து விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியதாக உலகில் எங்கும் சான்றுகள் கிடைக்கவில்லை என்றும் இந்தப் பணியை தாம், ஓர் ஆய்வாக செய்து வருவதாகவும் இலங்கை இராணுவம் குறிப்பிடுகிறது."



கீரிப்பிள்ளை வெடிபொருள்களைக் கண்டறியவது எவ்வாறு என்பதை பரீட்சார்த்தமாக நடத்திக் காட்டினார்கள். இராணுவ வீரர் ஒருவர், வெடிபொருள் ஒன்றை வடிவமைக்கப்பட்ட மரக்குற்றி ஒன்றின் மேற்பகுதியில் இருந்த மண்ணைக் கிளறி, அதற்குள் மறைத்து வைத்தார். சில நிமிடங்களின் பின்னர் பயிற்றுவிப்பாளருடன் வந்த கீரி, தனது மோப்ப சக்தியால் வெடிபொருள் மறைத்து வைத்திருந்த இடத்தில் வந்து நின்றது.

### வெடிபொருளைக் கண்டதும் அவ்விடத்தில் அமர்ந்து விடும்

இதற்கு முன்னர், வெடிபொருளைத் தோண்டி எடுக்கும் வகையில்தான், இந்தக் கீரிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. எனினும், வெடிபொருள்களை எடுக்கும் போது வெடிபொருளின் பாதிப்பு கீரிகளைத் தாக்குவதால் அந்த நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது இடத்தை மட்டும் கண்டறிவதற்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. வெடிபொருளைக் கண்டறிந்த பின்னர், அந்த இடத்தில் அமர்ந்துகொள்கிறது. பயிற்றுவிப்பாளர் இதனைப் புரிந்து கொண்டு, வெடிபொருளை மீட்டெடுக்கிறார்.

வெடிபொருள்களைக் கண்டறிய கீரி போன்ற காட்டு விலங்கினம் ஒன்றைப் பயன்படுத்துவது, அவற்றைத் துன்புறுத்தும் வகையில் இல்லையா என்பது குறித்து இந்த செயல்திட்டத்திற்குப் பொறுப்பான அதிகாரி கப்டன் நயநாத் ஜயதிலக்க விடம் கேட்டோம்.

"விலங்கியல் ஆர்வலர்களும் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தனர். விலங்கினத்தைத் துன்பப்படுத்தி, வதைப்படுத்தி அவற்றை நாம் பயிற்றுவிப்பதில்லை. இந்த விலங்கினத்தைப் பயிற்றுவிக்கும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும், இலங்கை தேசிய விலங்கியல் பாதுகாப்பு அதிகாரியொருவர் வழங்கி வருகிறார். அதற்கமையவே இந்த கீரிப் பிள்ளைகளை நாம் கையாண்டு வருகிறோம். இந்த விலங்கினத்தை எவ்வகையிலும், துன்புறுத்தவோ, வதைக்கவோ இல்லை என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும்" என்று அவர் பதிலளித்தார்.

பாம்பைக் கண்டால் படையே நடுங்கும் என்பர். அந்த பாம்பின் பரம எதிரியாகக் கருதப்படும், கீரிப்பிள்ளை தற்போது இலங்கையின் படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வெடிபொருள்களைக் கண்டறிவதற்கு உலகில் முதன் முறையாக கீரிப்பிள்ளையைப் பயன் படுத்தும் செயல் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவிக்கிறது.

கீரிகள் குறித்து விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியதாக உலகில் எங்கும் சான்றுகள் கிடைக்கவில்லை என்றும் இந்தப் பணியை தாம், ஓர் ஆய்வாக செய்து வருவதாகவும் இலங்கை இராணுவம் குறிப்பிடுகிறது.

### கண்ணி வெடிகளை அகற்றப் பயன்படுமா?

கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு இந்தக் கீரிகளைப் பயன்படுத்த முடியுமா என்று இராணுவ அதிகாரியிடம் கேட்டோம்.

"பொதுவாக நாய்களை கண்ணிவெடிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தி வந்தோம். இது மிகவும் சிரமமான பணி. தற்போது வடக்கு கிழக்கில் 92 சதவீதம் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சிய கண்ணிவெடிகளையும் அகற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகில் வேறு நாடுகளில் இன்னமும் கண்ணிவெடிப் பிரச்சினை இருப்பதால், அதற்காக இவற்றைப் பயிற்றுவிக்க முடியும் என நம்புகிறோம். இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஐ.நா. சபை உள்ளிட்ட தரப்பில் கோரிக்கைகள் வரும் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு வரும் போது கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் கீரிகளை எங்களால் பயிற்றுவிக்க முடியும்.

எமது இந்த முயற்சி வெற்றிபெற்றுள்ளதால், எதிர்காலத்தில் போதைப் பொருள்களைக் கண்டறிவதற்கும் இவற்றுக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதனை பரீட்சார்த்தமாக செய்துபார்த்தோம். போதைப் பொருள்களைக் கண்டறிவதிலும் கீரிகள் சிறப்பாகச் செயற்படுகின்றன. அதற்காகவே தற்போது கீரிகளை இனப்பெருக் கம் செய்வித்து, சிறுவயது முதல் அவற்றைப் பயிற்றுவிக்கும் இரண்டாம் கட்டத்தில் ஆர்வமாக இருக்கிறோம்." என்றார். *

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

சந்திராஷ்டம நாள் - அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற் கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க் கவும்.

19.08.2018
25.08.2018

2018 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 3 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை நவமித் திதி பி.இ. 3.15 வரை பின்னர் தசமி. நட்சத்திரம். அனுஷம் இரவு 7.13 மணி வரை பின்னர் கேட்டை. மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.52 மணி முதல் 6.25 மணி வரை
**சுபநேரம்** - காலை 9.04 மணி முதல் 10.34 மணி வரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஆவணிமாத வளர்பிறை நவமி
**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அனுஷம்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

சஞ்சலமான வாரம். வருமானம்குறைந்துகாணப்படும். உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் சஞ்சல நிலை காணப்படும். எண்ணிய கருமங்கள் நிறைவேறாமற் போகும். உற்றார், உறவினர்களுடன் எச்சரிக்கையாகப் பழகுதல் வேண்டும். உத்தியோகத்தில் கவனக் குறைவால் உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிப்பால் உடலும், மனமும் சோர்வடையும்.

## ரிஷபம்:

சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். குடும்ப உறவு ஓரளவு சீராக இருக்கும். உடலாரோக்கியம் குன்றும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். வியாபாரம் ஏறு இறங்குமுகமாக நடக்கும். தொழிலில் கடின உழைப்பும் அலைச்சல்களும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நண்பர்கள் உறவினர்களின் சகாயம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் அதிக பிரயாசையின் மேல் அனுகூலமாகும்.

## மிதுனம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். வியாபாரிகள் புதிய கிளைகளைத் தொடங்கி வருமானம் ஈட்டுவார்கள். தொழிலாளர்களுக்கு தொழில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி ஊக்கம் அதிகரிக்கும். பெண்கள் சுய தொழிலில் முன்னேற்றமடைவார்கள். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்களின் அனுசரணை கிடைக்கும்.

## கடகம்:

யோகமான வாரம். பணபலம், மன பலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். சொந்த வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கம். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கௌரவ பதவிகள் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பும் வந்து சேரும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு. மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும்.

## சிம்மம்:

சலனம் மிகுந்த வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் சஞ்சல நிலை காணப்படும். உத்தியோகத்தில் கவனக் குறைவு உண்டாகும். கடின உழைப்பால் உடல் சோர்வடையும். மாணவர்களுக்கு கல்வியில் தடை உண்டாகும். குடும்ப விஷயங்களை யாரிடமும் நம்பி பகிரக் கூடாது. நண்பர்களும் பகைவர்களாக மாறுவார்கள். எவருடனும் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

## கன்னி:

மத்திமமான வாரம். வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எண்ணிய காரியங்கள் தடை, தாமதத்தின் மேல் நிறைவேறும். தேக சுகம் பாதிப்படையும். குடும்ப அமைதி பேணப்படும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். மாணவர்களுக்கு கல்வியில் சுமாரான முன்னேற்றம் காணப்படும். பூர்வீகச் சொத்துக்கள் விவகாரம் அதிக தாமதத்தின் மேல் கைக்கு வந்து சேரும். பயணத்தின் போது உடைமைகளில் அவதானம் தேவை.

## துலாம்:

இன்பமான வாரம் பணம் தாராளமாகப் புழங்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். ஆடை, ஆபரண, ஆடம்பரப் பொருட்ச்சேர்க்கையால் பெண்கள் மன மகிழ்ச்சி அடைவார்கள். மனம் போல் மண வாழ்க்கை அமையும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்புண்டு. விட்டுப் பிரிந்த சொந்தங்கள் வீடு தேடி வருவார்கள். இழந்த சொத்துக்களும் கைக்கு வந்து சேரும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

## விருச்சிகம்:

அதிர்ஷ்டமான வாரம். பணம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். படித்து முடித்தவர்களுக்கு தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தால் அமோக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன தானாகவே கிடைக்கும். சகோதர வழியால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டு உறவினர்களிடம் இருந்து பரிசுப் பொருள்கள் வந்து சேரும்.

## தனுசு:

துன்பமான வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். தொழில் செய்யும் இடங்களில் தொந்தரவுகள் அதிகரிக்கும். கடின உழைப்பு இருக்கும். சக பணியாளர்களின் உதவி குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். தொழில் மாற்றத்தால் சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிய நேரிடும். நெருங்கிய உறவினர் ஒருவரின் துக்க செய்தி கேட்க நேரும்.

## மகரம்:

அதிர்ஷ்டமான வாரம். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினருடன் இருந்த நீண்ட காலப் பகை நீங்கும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். பெண்களுக்குதிடீர்த் திருமண வாய்ப்புக்கள் அமையும். கலைஞர்களுக்கு அரசு வழியால் விருது, பணம், பாராட்டு கிடைக்கும். தொழிலாளர்களுக்கு போதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். பெண்களுக்கு அரசு வழியால் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

## கும்பம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் மேம்படும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் விருத்தியடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள். பெண்கள் குடும்பப் பொறுப்பைத் திறமையாக நடத்தி நட்பெயரையும் பாராட்டையும் பெறுவார்கள். சுய தொதில் விருத்தியடையும். திருமண காரியங்கள் சுபமாய் ஒப்பேறும். சிலர் தொழில் கிடைத்து வெளிநாடு செல்வார்கள் கொடுக்கல், வாங்கலில் இணக் கம் உண்டாகும்.

## மீனம்:

புகழ் மிக்க வாரம். பணப் புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். இது வரை நோயால் வாடியவர்கள் நோய் நீங்கி ஆரோக்கியமடைவார்கள். கலைஞர்கள் புகழ் மேலோங்கும். மாணவர்கள் கல்வித் திறமையால் ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். உத்தியோகத்தர்கள் வேலைத்திறமையால் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். பதவி உயர்வுகளையும் பெறுவார்கள். அரசியல் வாதிகளின் புகழ், அந்தஸ்து, செல்வாக்கு உயரும்.

# டைட்டானிக் கப்பலில் பிரிந்த இளம் தம்பதியர்

# காலத்தால் மறக்க முடியாத காதல்!

● க. சுபகுணம்

பிரான்ஸில் நிலவிய இனப் பிரிவினைகளை அவள் கண்டு கொள்ளவில்லை. அவள் கண்களை ஜோசப் மீதான காதல் மறைத்திருந்தது. 1908 ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொண்டனர். அவள் பெயர் ஜூலியட் மேரி லூயிஸ் லஃபார்க்.

“டைட்டானிக் ஜேம்ஸ் கேமரூன் அந்தப் படத்தை இயக்குவதற்கு முன்பே இந்த விஷயம் அவருக்குத் தெரிந்திருந்தால் கதை வேறு மாதிரியாகப் போயிருக்கலாம்!

2000ஆம் ஆண்டில் தெரியவந்த இந்த வரலாறு, 1997ஆம் ஆண்டு வெளியான டைட்டானிக் படத்தை இயக்கிய அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தெரிந்திருந்தால், கதாநாயகன் ஜாக் என்ற கதாபாத்திரத்தை ஒரு கறுப்பின ஆளாக வைத்திருப்பார். கதாநாயகி ரோஸுடன் அவருக்குத் திருமணமாகி அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்திருக்கும். க்ளைமாக்ஸில் கப்பல் மூழ்கும்போது தனது குடும்பத்தைக் காப்பாற்றிய ஜாக்...

ஜாக்கும் அவர்களோடு பிழைத்தாரா என்பதை கட்டுரையை வாசித்து தெரிந்து கொள்வோம்.


உண்மையான ஜாக்கின் பெயர் ஜோசப் பிலிப் லெமெர்சியர் லாரோச்சி (Joseph Phillipe Lemercier Laroche). டைட்டானிக் கப்பலில் பயணித்த ஆப்ரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஒரே யொரு பயணி. பிரெஞ்சு ராணுவப் படையின் கேப்டனாக இருந்தவருக்கும் ஹைடியக் கறுப்பினப் பெண்ணுக்கும் பிறந்தவர்தான் இந்த ஜோசப். அவரது அம்மா சுதந்திரமான ஹைடியின் (Haiti) முதல் ஆட்சியாளரான ஜீன் ஜேக்கஸ் டெஸாலினெஸ் (Jean - Jacques Dessalines) என்பவரது மகள். ஹைடியில் உயர் குடிப் பிரமுகராக வளர்ந்தவர் தனது 14 வயதில் மேற்படிப்புக்காக பிரான்ஸுக்குச் சென்றார். அங்கு பொறியியல் பட்டப் படிப்பை முடித்தவர் அந்நாட்டிலேயே பாரீஸ் மெட்ரோ ரயில் கட்டுமானத்தில் பணிபுரியத் தொடங்கினார்.


சில ஆண்டுகள் கழித்துத்தான் அவளைச் சந்தித்தார் ஜோசப். அவள் ஒரு வைன் (Wine) விற்பனையாளரின் மகள். ஜூலியட் மேரி லூயிஸ் லஃபார்க் (Juliette Marie Louise Lafargue) என்பது பெயர். பிரான்ஸில் நிலவிய இனப் பிரிவினைகளை அவள் கண்டுகொள்ள வில்லை. அவள் கண்களை ஜோசப் மீதான காதல் மறைத்திருந்தது. 1908 ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொண்டனர். 1909ஆம் ஆண்டு அவர்களுக்கு பிப்ரவரி மாதம் சிமோன் (Simmone) பிறந்தாள். 1910ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேரி லூயிஸ் (Marie Louise) பிறந்தாள்.

ஜூலியட் ஒரு கறுப்பின மனிதரைத் திருமணம் செய்தமையால் அவரையும் சமூகம் ஒதுக்கி வைக்கத் தொடங்கியது. அவர்களுக்கு யாரும் வீடு தரவில்லை. அதனால் வேறு வழியின்றி ஜூலியட்டின் தந்தை வீட்டிலேயே வாழவேண்டிய நிலை. கௌரவமாக வளர்ந்த ஜோசப்பால் இந்த அவமானங்களைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. போதாக் குறைக்கு இரண்டாவது பெண் மேரிக்குப் பிறந்ததிலிருந்தே பலவீனமான உடல் நிலை. அடிக்கடி நோய்த்தொற்றுகள் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன. இன வேறுபாடுகள் அதிகமிருந்தமையால் மெட்ரோரயில் கட்டுமானங்களில் அவருக்குப் போதுமான மரியாதையும் கிடைக்கவில்லை, போதுமான வருமானமும் கிடைக்கவில்லை. செலவைச் சமாளிக்க முடியாமல் ஜூலியட்டின் தந்தை தயவையே நாடவேண்டியிருந்தது. அதனால் இருவரும் 1913ஆம் ஆண்டு ஜோசப்பின் சொந்த நாடான ஹைடிக்கே திரும்பிச் சென்றுவிடலாமென்று ஜோசப் – ஜூலியட் தம்பதி முடிவு செய்தார்கள்.

ஆனால், 1912ஆம் ஆண்டு ஜூலியட் கர்ப்பமானார். அதற் கடுத்த ஆண்டு அவர் நிறைமாத கர்ப்பிணியாகி விட்டால் பயணம் சாத்தியமில்லாமல் போய்விடும். அதனால் அந்த ஆண்டிலேயே கிளம்ப முடிவெடுத்தார்கள். அப்போது அவரது தாய் மாமா டெஸாலினெஸ் எம். சின்சின்னாடஸ் (Dessalines M. Cincinnatus) 1911 முதல் 1912 வரை ஹைடியின் அதிபராக இருந்தார். ஹைடியில் தனது குடும்பத்துக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கு கௌரவமான வாழ்க்கை வாழ அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்று அவர் கருதினார்.









> “நீ படகில் குழந்தைகளுடன் போ... போய்விடு; நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன்...”

### ஜோசப் - ஜூலியட்

இவர்கள் கிளம்பி வருவதற்காக லா பிரான்ஸ் (La France) என்ற கப்பலில் பயணிப்பதற்கான டிக்கெட்டுகளை அனுப்பி வைத்தது ஹைடியிலிருந்த அவரது குடும்பம். ஆனால், அந்தக் கப்பலில் குழந்தைகள் எப்போதும் நர்சரியில்தான் இருக்கவேண்டும். அங்கிருக்கும் தாய்மார்கள் அவர்களைப் பராமரித்துக்கொள்வார்கள். முக்கியமாக அனைவரும் சாப்பிடும் மண்டபத்துக்கு அவர்களைக் கொண்டுவரக் கூடாது. இதுவே முதல் கட்டுப்பாடாக அந்தக் கப்பலுக்கான நுழைவுச் சீட்டுகளில் போட்டிருந்தது.

அதைப் பார்த்த ஜோசப் அதில் பயணிக்க விரும்பவில்லை. அவர், தன் பெண்களுக்குத் தன் கையாலேயே தினமும் ஊட்டிவிடவேண்டும். அனைவரும் ஒன்றாகவே எப்போதும் உணவருந்த வேண்டும். அது அங்கு சாத்தியமில்லை. ஆனால், எப்படியாவது ஹைடி போயாக வேண்டும்.

அதே சமயம் ஆர். எம். எஸ். டைட்டானிக் (R.M.S. Titanic) என்ற கப்பலின் இரண்டாம் வகுப்பில் பயணிக்க இருந்த ஒரு குடும்பம் இவர்களுக்குப் பழக்கமானது. இவர்களிடமிருந்து லா பிரான்ஸ் கப்பலின் முதல் வகுப்பு டிக்கெட். அதைக் கொடுத்தபோது அவர்கள் மறுக்கவில்லை. இருவரும் டிக்கெட்டுகளை மாற்றிக் கொண்டார்கள்.

1912ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி கிராண்டே ரேட் (Grande Rade) என்ற பகுதியில் ஜோசப்– ஜூலியட் குடும்பம் கப்பலேறி ஹைடிக்குத் தன் பயணத்தைத் தொடர்ந்தது. ஜோசப் கறுப்பின மனிதர்களுக்கு எதிரான அனைத்து அவமானங்களையும் டைட்டானிக்கில் அனுபவித்தார். அனைவரும் அவர்களை வெறுப்பு போட பார்த்தனர்.

கப்பல் பணியாளர்கள்கூட அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைகளையும் செய்ய வேண்டிய உதவிகளையும்செய்யவில்லை. சாப்பிடும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் பெரும்பாலும் ஜோசப் தன் குடும்பத்தை அவர்களின் அறையிலேயே தங்க வைத்தார். அவரைப் போலவே அவரது குடும்பமும் அவமானங்களைச் சந்திக்கக்கூடாது என்பதில் உறுதிகொண்டிருந்தார். அவர்களுக்கும் சேர்த்து அவரே அனுபவித்தார். ஒரு கறுப்பின மனிதரைத் திருமணம்செய்தமைக்காக ஜூலியட்டும் போதுமான அவமதிப்புகளையும் கோபப் பார்வைகளையும் பெற்றாள். இருவரும் தங்கள் காதலை எதிர்த்த சமூகத்தைத் தைரியமாகவே எதிர் கொண்டனர்.

### 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பயணம்

1300 பயணிகளும், 900 பணியாளர்களுமாக டைட்டானிக் கப்பலில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் பயணித்தனர். அவர்களில் வெள்ளையரல்லாத வேற்றினத்தவர்கள் இரண்டே பேர் தானிருந்தார்கள். மற்றொருவர் இத்தாலியரான விக்டர் கிக்லியோ (Victor Giglio). முதல் வகுப்பில் பயணித்த பெஞ்சமின் குக்கென்ஹெயிம் (Benjamin Guggenheim) என்பவரின் உதவியாள். அதனால் அவரும் முதல் வகுப்பிலேயே பயணித்தார். அதோடு விக்டர் கறுப்பினமில்லை. அவர் மாநிறத்துக்கும் கூடுதலான வெள்ளைக்குச் சற்றே குறைவான நிறம். கறுப்பினத்தைச் சேர்ந்தவர் ஜோசப் ஒருவர் மட்டுமே.

(14ஆம் பக்கம் பார்க்க)



**புலம்பெயர்ந்து சென்று தாயகம் வந்திருந்த சௌந்தரி கணேசன் என்பவர் பலரையும் சந்தித்து மனதில் பதிந்தவற்றை இங்கே கொட்டித் தீர்த்துள்ளார். அவரின் வேதனை, ஏக்கம், எதிர்பார்ப்பு போன்றவை நியாயமானவை. அவரது அனுபவ பகிர்வை நோக்குவோம்**

# சக மனிதனைப் பற்றி சிந்திக்க வேண்டிய சமூகக் கடமை இவர்களுக்கு இல்லையா?



பொருளாதார நெருக்கடிகள், வாழ்க்கைச் சுமைகள், உறவுகளின் பிரிவுகள், மன அழுத்தங்கள் போன்றவற் றுக்கு மத்தியில் சீவிக்கின்ற பல மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட சில விடயங்களைப் பற்றிய ஓர் பதிவுதான் இது. அண்மையில் வன்னியிலும், வவுனியாவிலும் நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டவர்களுடன் உரையாடியபோது பலவிதமான அனுபவப்பகிர்வுகள் இடம் பெற்றன. எதையும் பகிர்ந்து கொள்ளும் போது துன்பம் பாதியாகின்றது என்பார்கள், அதற்கேற்ப இருபக்கமும் மனம் விட்டுப் பேசிக்கொண்டோம். அவற்றின் எழுத்து வடிவம்தான் இவை.

எத்தனையோ சவால்களை, சிரமங்களை, ஏமாற்றங்களைச் சந்தித்தாலும், எவையெவை அவசியமானவையோ, எவையெவை தேவையானவையோ அவற்றில் எமது மக்கள் காட்டுகின்ற அக்கறை என்பது சொல்லிலடங்காதது. முக்கியமாகத் தமது பிள்ளைகளின் கல்விதடைப்பட்டுவிடக்கூடாது என்ற ஏக்கத்தில் பாடுபடுகின்ற பெண்கள். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், போரினால் பாதிக்கப்பட்டு இயங்கமுடியாதிருக்கும் கணவனையும் கவனித்துக் கொண்டு தினக்கூலிக்குச்சென்று குடும்பத்தைப் பராமரிக்கும் பெண்கள், படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் கிடைத்த வேலையை விரும்பிச் செய்யும் பெண்கள் என்று அனைவரும் தமது பிள்ளைகளின் கல்வி மீது காட்டும் அக்கறை ஆச்சரியப்பட வைக்கிறது. அவர்களது ஒரே நோக்கம் தமது பிள்ளைகளைப் படிப்பித்து ஒருநல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிடவேண்டும் என்பதே.

புலம்பெயர்ந்த தமிழர்களினால் உருவாக்கப்பட்ட அமைப்புக்களும் எப்படி யாவது எமது இளம் தலைமுறையினரின் வாழ்க்கையில் ஒரு சிறிய வெளிச்சத்தை யாவது ஏற்படுத்தி, அதன் மூலம் கால மெல்லாம் அவர்கள்பயனடையவேண்டும் என்று தொடர்ச்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைய மாணவர்கள், நாளை தங்கள் காலில் நிற்கக்கூடிய தன்னம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களுமாக மாறுவார் கள், அதைக் காணும்போது தாம் செய்த முயற்சிக்கு ஓரளவாவது பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் புலம்பெயர்ந்ததமிழர்களும்சளைக்காமல் உதவிசெய்து கொண்டிருக்கிறார்கள்.

**பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் அக்கறை**

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற கூற்று தமிழினத்திற்கு எவ்வளவு பொருத்தமானது என்பது எமது மக்கள் கல்வியின் மீது கொண்டுள்ள ஆர்வத்தைப்பார்த்த போது விளங்கியது. யாசகம் செய்தாவது தமது பிள்ளைகளுக்குக்கல்வியைக் கற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற வேட்கை போர்தின்ற பூமியெங்கும் பரவலாகக் காணப்படுகிறது.

நான் சந்தித்த பெற்றோருடன் கதைத்தபோது, மாணவர்களுக்குப் பாடசாலைக் கற்கை மட்டும் போதாது பிரத்தியேக வகுப்புக்கள் இன்றும் அவசியம் என்று கூறினார்கள். ஆனால் ரியூசன் வகுப்புகளுக்குப்பணம் கொடுத்து தமதுபிள்ளைகளை அனுப்ப முடியவில்லை என்றும் மற்றைய மாணவர்கள் ரியூசனுக்குச் சென்று படிப்பதைதமது பிள்ளைகள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு வீட்டில் இருக்கின்றார்கள் என்றும் நொந்து கொண்டார்கள்.

புலம்பெயர் அமைப்புக்கள் இதிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதாவது தனித்தனியாக ஒவ்வொரு மாணவர்களுக்கும் பணத்தை அனுப்பாமல், பாடசாலை நேரம் முடிந்த பின்பு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற முக்கியமான பாடங்களை அனைத்து மாணவர்களும் கட்டணம் ஏதும் செலுத்தாமல் கற்றுக்கொள்ளும் வகையில் மாலை நேர வகுப்புக்களை ஒழுங்கு செய்து அனுபவம் மிக்க, ஓய்வு பெற்ற ஆசிரியர்களை இப்பணியில் அமர்த்தியுள்ளார்கள். இதன்மூலம் பல மாணவர்களும் பயனடைகின்றார்கள், ஓய்வு பெற்ற பின்பும் சமூகத்திற்கான தனது கடமையைச் செய்தோம் என்ற திருப்தியையும், சிறு தொகைப்பணத்தையும் பின்னேரப் பாடசாலையில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

'இந்த வயதில் ஆசிரியர் பணி சிரமமாகவும் களைப்பூட்டுவதாகவும் இருந்தாலும், கற்பதில் பிள்ளைகளின் ஆர்வத்தையும் அவர்களுடைய முன்னேற்றத்தையும் காணுகின்றபோது இப்பணியைத் தொடர வேண்டும் என்ற எண்ணம் என்னை உந்துவிக்கிறது என்று கூறுகின்றார் மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்பிக்கின்ற ஓய்வுபெற்ற ஒரு பெண் ஆசிரியர்'.

ஈழத்தமிழன் எதை இழந்தாலும் கல்வியை இழக்க அவனது மனம் ஒரு போதும் சம்மதிக்காது. அடிப்படைத் தேவைகள் திருப்தி இல்லாமல் தீர்ந்தாலும், கல்விக்கான தேடல் எங்கேயும் எப்போதும் குறையவில்லை. ஊரிலிருந்து எத்தனையோ கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சிறிய பாடசாலைகளுக்கு அறிவும், திறமையும் உள்ள எங்கள் குழந்தைகள்,



## பெரும் துயரம், ஏமாற்றத்துடன் முதியோர் இல்லத்தில் பெற்றோர்

சிரமங்களுக்கு மத்தியிலும் எப்படியோ சென்று வருகிறார்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற கூற்றின்படி எங்களுக்குக் கல்விதான் முக்கியம் என்ற உணர்வில் தமது குடும்பச் சூழலையும், பெற்றோர்களின் வலிகளையும் புரிந்து கொண்டு படிக்கின்ற இளம் சிறார்களை தொடர்ந்தும் ஊக்குவிக்க வேண்டும். அந்தக் குழந்தைகளின் கல்வி கனவாகப் போகாமல் மெய்ப்பட வேண்டும்.

**மாணவர்களுக்கு கல்வியுடன் பண்பு, ஓழுக்கத்தையும் புகட்டுவது அவசியம்**

பாடசாலைகளில்மாணவர்கள்புத்தகப் படிப்பில் அக்கறை காட்டுவது எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு பள்ளிக்கு வரும் சிறார்களது பண்பாடுஇ ஒழுக்கம், பழக்க வழக்கம் போன்றவற்றின் மேம்பாடும் அவசியமாகின்றது. இவைபற்றிய அவர்களது அறிவுக் கண்ணை திறக்க வேண்டியது ஆசிரியர்களே.முக்கியமாகத் தங்களிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்கு 'போதை' பழக்கங்களின் பாதிப்புப்பற்றியும்இ அதனால் ஏற்படும் சீர்கேடுகள் பற்றியும் விழிப்புணர்வை ஆசிரியர்கள் ஏற்படுத்தவேண்டும். குறிக்கோள் இல்லாத, லட்சியம் இல்லாத இளையவர்களின் எதிர்காலம் ஓர் 'இருண்ட பாதை' என்பதை ஆரம்ப காலத்திலிருந்தே மாணவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். இன்று இந்தப் பெரும் பொறுப்பு ஆசிரியர் சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்தக் கட்டத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

வெளிநாடுகளில் மட்டுமல்ல, தாயகத்திலும் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே வாழ்க்கை நகர்ந்து செல்கிறது என்ற சிந்தனையும் எழாமலில்லை. சுயநலமில்லாமல் யாருமில்லை என்று சொல்லுமளவுக்கு உறவுகளுக்குள் பல விரும்பத்தகாத செயற்பாடுகளைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. வன்செயல்கள்இ பாலியல் பலாத்காரம் போன்ற குற்றவியல் சம்பவங்கள் பொதுவாக சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகின்றன. சுய சௌகரியங்களை கருத்தில் கொண்டு சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணமாக்கி வன்முறைகள் அரங்கேறுவதை ஊடகங்கள் வாயிலாகவும், மக்களின் கருத்துக்கள் மூலமும் அறியமுடிகிறது. நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றையும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இவை தெளிவாகப் புரியும்.

**அன்று இருந்த குடும்ப ஒற்றுமை இன்று இல்லையே!**

ஒரு குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தை, சகோதரர், சகோதரி மற்றும் மாமன் மச்சான் என்று ஒன்றாக வாழ்ந்தவர்களுக்கிடையே அன்பும் பாசமும் முன்புபோல் இல்லை. அவரவர்களுடைய வருவாய், பணம், பதவி, புகழ் என்பனவற்றை வைத்தே அன்பும் பாசமும் நிர்ணயிக்கப்படுகிறது. தேவைகளை யார் பூர்த்தி செய்கிறார்களோ அங்கேதான் பாசமும்போலியாக மேலோங்கி நிற்கிறது. இது மனிதர்களுக்கான ஒரு பொதுவான விடயம்தான் என்றாலும் 'கள்ளங்கபடமில்லாத அன்பைத் தொலைத்துவிட்டு புலம்பெயர்ந்து வந்துவிட்டோமே' என்ற ஏக்கத்திற்கு இனிமேல் அவசியமில்லையோ என்று எண்ணத் தோன்றியது.

உறவுகளுடனும் சக மனிதர்களுடனும் சொந்தம் கொண்டாட யாருக்கும் அங்கே கால அவகாசம் கிடைப்பதில்லை. வீட்டில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்வதற்குக்கூட பணம் கொடுத்து வேலைக்கு ஆட்களைத் தேடிப்பிடிப்பதும், வீட்டில் சமைத்து ஒன்றாகச் சேர்ந்து உணவருந்திக் கொண்டாடிய காலம் மாறி, உணவகங்களின் உற்பத்திப் பெருக்கமும், உணவுப் பொட்டலங்களின் புழக்கமும் அங்கே அதிகரித்து விட்டன. இயந்திரமான வாழ்க்கை, மேலைநாடுகளின் கலாசாரத் தாக்கம் போன்றவை புலத்தில் நடப்பது போல் நிலத்திலும் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குழந்தைகள் மற்றும் முதியவர்களைப் பராமரிக்கின்ற இல்லங்களும் அங்கே அதிகரிக்கின்றமையைக் காணமுடிகிறது.

குடும்பங்களில் உள்ளவர்கள் புலம் பெயர்ந்து செல்வதனால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் முதுமையில் காலம் தள்ளிவரும் வயதான பெற்றோர்கள்தான். ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் அங்கே தங்கியுள்ளனர். இவர்களை வைத்துப் பராமரிக்கும் அளவிற்கு முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன, அவ்வில்லங்களுக்குரிய வருமானங்களும் நன்கொடைகளும் அதிகரிக்கின்றன.

(11 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir



(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### முதியோர் இல்லத்தில் ஏமாற்றத்துடன் பெற்றோர்

முதியவர்கள் இன்று பலருக்கும் சுமையாக மாறிப் போயிருக்கிறார்கள். விலகிப் போகும் உறவுகளுக்கு மத்தியில் ஊன்றுகோல் மட்டுமே சிலருக்குத் துணையாக இருக்கிறது. பலர் இந்த வாழ்க்கையை ஏற்கவும் முடியாமல், மாற்று வழியும் தெரியாமல், வழமையான பற்றாக்குறை வாழ்க்கைக்குத் தம்மைப் பழக்கப் படுத்திக் கொண்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல முதியோர் இல்லங்களுக்கு முதியவர்களை அனுப்புவதென்பது ஒருவித பேஷனாக மாறிவருகின்றது. பணத்தைக் கட்டி விட்டால் போதும் பெற்றோர்கள் முதியோர் இல்லங்களில் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று பிள்ளைகள் நம்புகின்ற நிலை. முதியோர் இல்லங்களில் சந்தித்த முதியவர்களில் யாரும் அங்கே வாழ்க்கையைக் கொண்டாடும் வகையிலும் இல்லை, அவர்களின் மனநிலைபற்றி யாரும் அக்கறை கொள்வதாகவும் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

பெற்றோர்கள், மூத்தோர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், குடும்பத் தலைவர்கள் என்று, இதுவரைகாலமும் கட்டிக்காத்த அவர்களது அடையாளம் இழக்கப்பட்டு, கூட்டுக்குடும்பக் கட்டமைப்பில் இருந்து விலகி, சொந்தங்களை இழந்து, பிள்ளைகளால் கைவிடப்பட்டு, ஏமாற்றம் அடைந்து முதியோர் இல்லங்களில் இவர்கள் தங்கியிருக்கும் நிலையைக் கண்ணுற்றபோது வேதனை அளித்தது.

முதியோர் இல்லங்களில்அவர்களுக்கு ஒத்த நண்பர்கள் இல்லாமையால் ஒருவிதமான அந்நியப்படுத்தலின் அழுத்தத்துடனும், அவர்களது அனுபவ அறிவு எங்கும் செல்லுபடியாகாமல் போவதால் ஏற்படும் ஏமாற்றத்தினால் தோன்றும் மனத்தாங்கலுடனும் வெறும் நடைப்பிணமாக உலாவிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கின்றபோது இனி



வரும் மூத்தவர்கள் எப்படி இருக்கப் போகின்றார்கள், என்ன செய்யப்போகின்றார் கள் என்ற கேள்விதான் எழுந்தது.

### பெற்றோரை பேண வேண்டியது எமது முதன்மையான கடமை

எமது நிலத்தின் அருமை பெருமைகளை, தேசத்தின் வரலாற்றை, பழக்க வழக்கங்களை, பண்பாடு மற்றும் கலாசார விழுமியங்களை மற்றையசந்ததியினருக்குக் கையளிக்கின்றவர்கள் இவர்கள். இவர்களிடம் ஏராளமான அனுபவக் கதைகள் இருக்கின்றன, இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஏராளமான விடயங்கள் இருக்கின்றன, இவர்களே எங்களது முதுசம், இவர்களே எங்களது சொத்து இவர்களைப் பேண வேண்டியதும் எங்களது முதன்மையான கடமைகளில் ஒன்று. அந்தக் கடமையிலிருந்து தவறுவது என்பது மன்னிக்க முடியாதது.

புலம்பெயர் தேசங்களுக்குப் பிள்ளைகளினால் வரவழைக்கப்படும் பெற்றோர்கள் பின்பு ஒரு கட்டத்தில் முதியோர் பாதுகாப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றமையால் அவர் களின் சுதந்திரம், அவர்களின் சமூகப் பங்களிப்பு, அவர்களின் உணர்வுகள் போன்றவற்றிற்கான மதிப்பு சரியான விதத்தில் பேணப்படவில்லை என்பதுபற்றி அதிகமாகப் பேசப்படுகின்ற இன்றைய காலங்களில் நிலத்திலும் எமது மூத்த பிரஜைகள் சந்திக்கும் சவால்களைப்பற்றி

# சமூகக் கடமை...

பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது கவலையான விடயம்தான்.

புலம்பெயர்ந்த வாழ்க்கை முறையில் இணைந்து கொண்டாலும் நிலத்தில் உள்ள உறவுநிலைகளின் வழக்கங்களையும் அவர்களது வாழ்க்கைமுறையையும்



மதித்து இரண்டையும் நடுநிலைமைப் படுத்திக் கொள்ளக்கூடிய அளவில் எம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ளாத விடத்து முதியோராக மாறிய பெற்றோர்கள் இன்னும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

# இன்றைய இளசுகளின் தறிகெட்ட போக்கு!

புலம்பெயர் நாட்டில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் கிராமங்களை, தாங்கள் படித்த பாடசாலைகளை, தாங்கள் வணங்கிய ஆலயங்களை, தங்கள் சொந்தங்களை, போரால் பாதிக்கப்பட்ட சக உறவுகளை என்று அவர்களின் வாழவாதார மேம்பாடு, கல்வி முன்னேற்றம் போன்றவற்றில் அக்கறை எடுத்து தமது இனத்தை சீரும் சிறப்புமாகக் கட்டி எழுப்பும் வகையில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. போர் அழித்த தேசத்தை கட்டியெழுப்புவதில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு கணிசமானது என்ற கூற்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று.

எமது மக்கள் அடுத்தவரிடம் கையேந்தாமல் தன்னிறைவடைந்து, தம்மை நாடிவந்தவர்களுக்கு அள்ளிக் கொடுத்து, தங்கள் மதிப்பையும் மரியாதையையும் பேணிக்காத்து வாழ்ந்தவர்கள், இன்று உரிமைக்காகப் போராடிப் பாதிக்கப்பட்ட பின்பு, பலர் தமது தனித்தன்மைகளை இழக்க விரும்பாமல், புலம்பெயர் மக்கள் மனிதாபிமான ரீதியில் கொடுக்கின்ற உதவிகளைக் கூட, தாம் பெற்றுக்கொள்வதைக் கௌரவக்குறைவ ாகவும், மதிப்பிழக்கின்ற செயலாகவும் கருதி ஒரு சாரார் இன்றும் கஷ்டத்தில் வாடி, நொந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்னுமொரு சாரார் சலுகைகளைப் பெறுவதற்கு என்ன செய்வது, எங்கே பதிந்து கொள்வது, எவரை நாடவேண்டும் என்று எதுவுமே தெரியாமல்ஏக்கத்துடன் இருக்கிறார்கள். இன்னும் சிலர் ஏதோ தங்களால் ஆன விதத்தில் முயன்று பயனளிக்காமல் போய்விட இன்னுமோர் சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமக்குத் தேவையானவற்றை மனம்விட்டு கேட்கக் கூடியவர்கள் மட்டும் தமக்குத் தேவையான உதவிகளைப் பெற்று ஒரு மாற்றத்தை உணருகின்றார்கள். அதுமட்டுமல்ல, ஓர் அமைப்பினூடாக உதவியைப் பெற்றுக்கொண்டிருக்கும் சிலர் அதை மறைத்துக்கொண்டு இன்னுமொரு அமைப்பிடமும் மேலதிகமாக உதவிகளைப் பெற்று அனுபவிப்பதும் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்ல இலவசமாக வசதிகள் கிடைப்பதாலும், சுலபமாகப் பணம் கிடைப்பதாலும் அவற்றிற்குரிய பெறுமதிஉணரப்படாமல் செலவு செய்பவர்களையும் காணமுடிகிறது.

மக்கள் தமது இனத்தின் மீதும், சக மனிதர்கள் மீதும் அக்கறையோடும் விழிப்புணர்வோடும் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவு மனிதநேயத்துடன் வழங்குகின்ற தன்னிகரில்லாத பங்களிப்பும், அவர்களது எதிர்பார்ப்பும் சரியான விதத்தில் நடைபெறுகின்றதா என்பதற்கான கண்காணிப்பும் மிக மிக அவசியமானதே.

நிறைகளும் குறைகளும் அதனதன் அளவுகளில் அதனதன் பரிமாணங்களில் இருந்தாலும், சமூக நலத்திட்டங்கள், குறைந்த பட்ச உணவு உடை உறைவிடம் என்பவற்றுக்கான உதவிகளை இன்னும் தேவையான அளவு நிறைவேற்றவில்லை என்பதே எனது கருத்து.

இவற்றைச்சரிவரக் கவனிக்காது போனால், தனிமனித வாழ்வில், பலவிதமான தாக்கத்தை உண்டுபண்ணும். திருட்டு, சமூகச் சீர்கேடுகள், கொள்ளை, கொலை, குடும்ப உறவுநிலை சீரழிவு போன்ற பல விளைவுகள் சமூகத்தில் தலைதூக்கும். அதை விட முக்கியமாக குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் வன்முறையால் குழந்தைகளின் மனநலம் மற்றும் எதிர்காலமும் பாதிக்கப்படும் என்பதும் வெளிப்படை.



பலகுடும்பங்கள் கிடைக்கின்ற உதவியுடன் வாழ்வின் அடுத்த படியில் காலடி எடுத்து வைக்கும் வகையில் சிறு சிறு திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றார்கள், அப்படிப்பட்ட பணிகள் மேலும் தொடர வேண்டும். அவர்களுக்குப்பிடித்த அவர்களால் முடிந்த ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு ஏற்றவகையில் வழிகளை அடையாளம் காட்ட வேண்டிய தேவை இன்னும் அதிகமுள்ளது. முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன. கடும் முயற்சியை மூலதனமாகக் கொண்டும் முன்னேற முடியவில்லை என்றால் அது நிச்சயமாக நம்பும்படியாக இருக்காது.

பெண்கள் படிப்பில், வேலைக்குப் போவதில்,நாள் சம்பளம் தரும் வேலைகளுக்குச் செல்வதில் காட்டும் அக்கறை உற்சாகத்தைத் தருகின்றது. போர் தின்ற பூமியில் ஏதோ இயன்றவரை படித்து, வழமைகளை மீறாமல்இமன உறுதியுடன், வாழும் வரை போராடு என்ற பாணியில் குழந்தைகள், கணவன், உறவுகள் என்பவற்றுக்கு நடுவே தங்களையும் வளர்த்து, தங்கள் குடும்பத்தையும் முன்னேற்றும் பெண்களைப் பார்த்து பெருமைப்பட முடிகிறது. இது பலபேரின்அனுபவங்களைக் கேட்டபின்பு பதியப்படுகின்ற ஒரு கருத்து என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

### இளம் சமூகத்தினரின் தலை கால் தெரியாத போக்கு

‘இளம் சமுதாயத்தினரின் கலாசாரம் எப்படியுள்ளது’, என்ற கோணத்தில் பார்த்தால், அங்கே ஓர் சிறு அதிர்ச்சி தாக்காமலில்லை. காட்டாற்று வெள்ளம்போல் நடை, உடை, மரபுகள் என்ற அனைத்தும் உலகமயமாக்கலுடன் போட்டி போட்டு மாறிக்கொண்டிருக்கிறது. புதிய மாற்றங்களுடன் ஒட்டவும் முடியாமல், வெட்டிக் கொண்டு செல்லவும் முடியாமல் தத்தளிக்கும் மனங்களையும் காணமுடிகிறது. இவற்றையும் சமாளித்து, தனிமனித ஒழுக்கத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த



வேண்டிய பணியை தமிழ்ச் சமூகம் ஒரு கட்டத்தில் முன்னெடுக்க வேண்டி வருமோ என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

குறிப்பாக இளையசமுதாயம், போரின் விளைவுகளால் மன உளைச் சலுக்கு உள்ளாக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, சரியான நெறிப்படுத்தலும் சரியான ஆதரவும், வழிகாட்டலுமின்றி வன்முறைகளில் ஈடுபடுவது ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது.


விதம் விதமாக ஆடை ஆபரணங்களை உடுத்தி, அழகு காட்டி, உண்டு, குடித்து, லௌவீகமான வாழ்க்கையை அனுபவிக் கவும் சிலர் தவறவில்லை, வீட்டுக்கு வீடு ‘தமிழ் ரிவி’ மெகா சீரியல்களைப் பார்த்து கண்கள் குளமாகின்றவர்களும் இருக்கின்றார்கள், ’இந்திய சினிமா’ பிரபலங்களை அழைத்து கலைநிகழ்ச்சிக ளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன.

புலத்திலிருக்கும் சொந்தங்கள் அனுப்பும் பணத்தால் சிலர் வசதியாக இருக்கிறார்கள். புலத்திலிருந்து உதவியைப் பெறுபவர்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். மற்றயவர் களின் வாழ்வு இன்னும் சவால்களுடனேயே நகர்கிறது.

ஒரு நேரச் சாப்பாடு, உடுத்துவதற்கு நல்ல உடை, மாற்றுத் துணி இவற் றிற்கே அவதிப்படும் மக்களுக்கிடையில் ஆடம்பரமான பிறந்தநாள் கொண்டாட்டங் கள், திருமணத் திருவிழாக்கள் என்று பணத்தைத் தண்ணீராக விரயம் செய்யும் நிகழ்வுகளும் ஆங்காங்கே நடைபெறுகின் றன. சக மனிதனைப்பற்றிசிந்திக்க வேண்டிய சமூகக்கடமை இவர்களுக்கு இல்லையா? என்ற கேள்வி புலம்பெயர்ந்த தமிழராகிய எனக்குள் எழாமலில்லை.

-சௌந்தரி கணேசன்

# வர்ணம் தீட்டுங்கள்



# வீடுகளில் முதியோருக்கான வசதிகள்



கணவன் - மனைவி, குழந்தைகளுக்கென வீடுகளில் தனித்தனி அறைகள் அமைக்கப்படுகின்றமையைப் போல் முதியவர்களுக்கும் தனி அறை அமைப்பது அவசியமாகிவிட்டது. முதுமை எல்லோருக்கும் வரும் என்பதால் பெற்றோருக்காகவோ, தாத்தா-பாட்டிகளுக்காகவோ கட்டும் அறைகள் பிற்காலத்தில் நமக்கு உதவும் என்ற தொலைநோக்கு யோசனையும் தேவை.

தரையை அழகாய் வடிவமைக்கிறார்கள். அழகழகான மாபிள்கள் வீட்டின் தோற்றத்தை எடுப்பாகக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மாபிள் தரைகளால் முதியவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்றே சொல்லலாம். வழுக்குத் தன்மையுள்ள மாபிள் தரைகளில் முதியவர்கள் நடக்கும்போது வழுக்கி விழ வாய்ப்புகள் அதிகம். குறிப்பாகக் காலை நனைத்து விட்டு வரும்போது விழும் வாய்ப்புகள் அதிகம். முதியவர்கள் கீழே விழுவது அவர்களின் உடல் நலத்துக்குக் கேடு விளைவித்துவிடும். எனவே வழுக்கும் தன்மையுள்ள மாபிள்களுக்குப் பதிலாக, சொரசொரப்புத் தன்மையுள்ள மாபிள்களைப் பதிக்கலாம்.

மாடிகள் நல்ல விடயம். ஆனால் இது வயதானவர்களுக்கு ஏற்றதல்ல. முடிந்த அளவுக்கு வீட்டுக்குள் உள்ள மாடி படிக்கட்டுகளைச் சாய்வு தளமாக அமைப்பது முதியவர்களுக்கு வசதியாக இருக்கும். மேலும் படிக்கட்டுகளின் ஓரத்தில் நிச்சயமாகக் கைப்பிடி அமைக்க வேண்டும். மாடிப் படிக்கட்டுகளில் மாபிள்கள் பதிப்பதைத் தவிர்க்கலாம். குளியலறையில் சொரசொரப்புத் தன்மையுள்ள மாபிள்களைப் பயன்படுத்துவது முதியவர்களுக்க மட்டுமின்றி அனைவருக்கும் ஏற்றது.

குளியலறை அலமாரிகளை குறைந்த உயரத்தில் அமைப்பது நல்லது. குளியலறையில் பொருத்தப்பட்டுள்ள கைப்பிடிகள் வலுவாக இருப்பதை அடிக்கடி உறுதி செய்யவும்.

கழிவறையில் இந்திய பாணிக் கழிவறைகள்தான் சிறந்தது. ஆனாலும் நோயாளிகள் மற்றும் முதியவர்களுக்கு மேற்கத்திய பாணிக் கழிப்பிடங்களே ஏற்றது. இந்திய பாணிக் கழிப்பிடங்கள் முதியவர்களுக்குக் கஷ்டத்தையே கொடுக்கும்.

முதியவர்கள் உட்கார்ந்து எழ மிகவும் கஷ்டப்படுவார்கள் என்பதால் சுவர்களின் பக்கவாட்டில் கைப்பிடிகள் அமைப்பது அவர்களுக்குப் பயனளிக்கும். மேற்கூறிய அனைத்து அறைகளும் முதியவர்கள் விழுவதற்கும், காயம் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ள பகுதிகள். எனவே முதியவர்களுக்கான வசதிகள் கண்டிப்பாக தேவை. மற்ற அறைகளிலும், முதியவர்களுக்கு ஏற்ற வகையில் வசதிகளைச் செய்து கொடுப்பதும் நல்லதுதான்.




# இது எந்த நாடு?

1. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடு. சோவியத் ரஷ்யாவின் பிடியில் நீண்ட காலம் இருந்தது.
2. இந்த நாட்டின் தலைநகர் மின்ஸ்க். வரலாற்றில் இது வரை 18 தடவை அழிந்து, மீண்டும் உயிர்த்தெழுந்த நகரம். அதனால் இந்த நகரத்தை 'ஹீரோ சிட்டி' என்று அழைக்கிறார்கள்.
3. இரண்டாம் உலகப் போரில் தனது மூன்றில் ஒரு பங்கு மக்களை இழந்த நாடு.
4. 1991, ஒகஸ்ட் 25 அன்று ரஷ்யாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
5. 1994 முதல் இன்றுவரை அலெக்சாண்டர்லுகாசென்கோ, இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக இருக்கிறார்.
6. ஐரோப்பிய எருது இந்த நாட்டில்தான் அதிகம். இதுவே இந்த நாட்டின் தேசிய விலங்கு.
17. உருளைக் கிழங்கு அதிகம் விளைவிக்கப்படுகிறது. சுமார் 300 வகையான உருளைக் கிழங்கு உணவு வகைகள் இங்கே பிரபலமானவை.

**விடை: பெலாரஸ்**


# பூக்களும் பயன்களும்




**ரோஜாப்பூ**
தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும்.



**மல்லிகைப்பூ**
மனஅமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.



**செம்பருத்திப் பூ**
தலைமுடி தொடர்பான பிரச்சினைகளை சரிசெய்யும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.




**மகிழம்பூ**
தலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும்.




**வில்வம்பூ**
சுவாசத்தைச் சீராக்கும். காசநோயைக் குணப்படுத்தும்.



**தாழம்பூ**
நறுமணம் வீசுவதோடு சீரான தூக்கத்துக்கு உதவும். உடல் சோர்வை நீக்கும்.



**தாமரைப்பூ**
தலை எரிச்சல், தலை சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும். மனஉளைச்சலை நீக்கி மனஅமைதிக்கு வழிவகுக்கும். தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும்.



**கனகாம்பரம்பூ**
தலை வலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும்.

# வெறும் காலில் நடப்பதால் கிடைக்கும் பயன்கள்!



செருப்பை கழட்டி விட்டு வெறும் காலில் சாப்பிடுவதும், வெறும் காலில் சிறிது நேரமாவது நடப்பது சரியான முறையிலான இரத்த ஓட்டத்துக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் இன்றியமையாதது என்பது மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நமது உடலின் ஆரோக்கியம் நிலத்துடன் தொடர்புடையதாக முன்னோர்கள் கூறுவதுண்டு. வெறும் காலில் நடப்பதால் பதற்றம் இல்லாமல் இருக்க முடியும்.

வெறும்காலில் நடப்பதால் உடலில் இருந்து நேர்மறை அயனிகள் வெளியேறி, எதிர்மறை அயனிகள் உள்ளே புகும். இந்த எதிர்மறை அயனிகள் மன உளைச்சலை குறைக்கவும், தூக்கத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

நிலத்தில் காலூன்றி நிற்பதால் சாதாரணமாக உடலில் உள்ள 70% நீரை விட அதிகம் சுரக்கும். பாதத்திற்கு அடியில் விரல்கள் முதல் குதிகால் வரை அமைந்திருக்கும் ஒவ்வொரு பாகங்களும் நரம்புகள் மூளை, இருதயம் சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன.

ஆடம்பரமான காலணிகளை அணிவது சிறந்த பழக்கம் அல்ல. அது பாதத்தின் மேற்பரப்பை பலவீனமாக்கி, அதன் வலு மற்றும் வளையும் தன்மையை குறைத்துவிடும். சப்பாத்து அணிவது பாதத்தின் இயல்பை கெடுத்துவிடும். இதனால் இடுப்பு வலி, முதுகு தண்டுவலி, மூட்டுவலி உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும்என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கரடுமுரடான தரையில் நடக்கும் போது பாதத்திற்கு நேரடியாக அழுத்தம் ஏற்படுவதால், அது உடற்செயல்பாட்டை ஊக்குவிக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், வெறும் காலில் நடப்பது இயற்கையுடன் நேரடியாக இணைக்கும்.

வெறும் காலில் நடப்பதால் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதன் புவியீர்ப்பு விசை காரணமாக உடலில் அதிக வேகமாக ரத்த ஓட்டம் இருக்கும்.

ரத்த ஓட்டம் சீராக இருப்பதனால் இதயம் சார்ந்த எவ்வித பிரச்சினையும் ஏற்படாது. ரத்த நாளத்தில் ஏற்படும் அடைப்புகளை குறைத்து, ரத்தத்தின் அடர்த்தியை சரிசெய்யும்.

வெறும் காலில் நடைபயிற்சி மேற்கொண்டால் நரம்பு மற்றும் எலும்புகளை வலுப்படுத்துகிறது.

சூரிய ஒளியில் வெறும் காலுடன் நடந்தால் எலும்புகளின் கல்சிய சத்து கூடி வலுப்பெறும்.

இது நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கவும் உதவுகிறது. நமது பாதத்தில் பல்வேறு நரம்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றமையால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கிறது.

அதிகாலை வேளையில் புல்லின் மீது வெறும் காலுடன் நடப்பதனால் கண் பார்வை கூர்மையாகும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# காலமும் 05 கணங்களும்

# மனைவி - பிள்ளைகளுடன் எறிகணை வீச்சுக்குப் பலியான

## எழுத்தாளன் நெல்லை க.பேரன்

### துளிர்க்கத் துடித்த ஒருமனிதனின் ஓலம்

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -

சங்கத் தமிழாலே தாலட்டுப்பாடி
எந்தன்
தங்கக் குழந்தையை நான் நித்
திரையாக்கிவிட்டால்
திடீரென்று கேட்கும் வெடிச்சத்தம்
எங்கோ...

அர்த்த ராத்திரியில் ஆசையாய்
மணம் முடித்த
அன்பு மனையாளைக் கட்டிய
ணைத்து
ஒரு முத்தம் தரவென்று
சிந்தையில் நினைத்திட்டால் கேட்
கும் ஒரு குண்டுச்சத்தம்...

நெஞ்சு கலங்கி என் வேட்கையும்
கலைந்து மிக்க
வேதனையோடு நான் முகத்தைத்
திருப்பிடுவேன்
குண்டுகள் வந்து கூரையைத்
துளைத்தாலும் என்று
கட்டிலின் அடியினிலே பிள்ளையை
பெண்டிலை நான்
தள்ளியே சாக்கால் மூடிப் பதுங்கியே
பதகளிப்பேன்....

கறுப்புக் கழுகுகள் ஆகாயத்தில்
வட்டமிட்டால்
ஐயோ வென்று அலறும் இதயம்
எப்பெப்ப என்னென்ன....

எங்கேயோ என்றெல்லாம்
எண்ணி ஏங்கித் தீய்ந்து கருகி
உருகி வாடும் பாழும் இதயம்
துளிர்க்கத் துடிக்கும்... ஆனால்,
நாட்டிலோ
ஈரலிப்பு இல்லையே !?

1987 ஆம் ஆண்டு எங்கள் நெல்லை க. பேரன் எமக்களித்த கவிதை இது. நான்கு ஆண்டுகளில் , அதாவது 15-7-1991 ஆம் திகதி நள்ளிரவில் பேரன், தான் எழுதிய இந்தக் கவி தையை நினைத்திருப்பாரா?

தனது அன்பு மனையாள் உமாதே வியையும் செல் வமகன் உமாசங் கர் மற்றும் செல்வம கள் சர்மிளா வை யும் சாக்கால் மூடி கட்டிலின் அடியிலே தள்ளிக் காப்பாற்ற முனைந்திருப்பாரா...?

எவருமே அறிந் திருக்க மாட்டார்கள்.


ஐ.சாந்தன்

ஸ்ரீலங்கா படை யின் ஆட்லறி எறிக ணைத் தாக்குத லின் போது தனது மனைவி மக்களை யும் தன்னுடன் அழைத் துக்கொண்டு போய் விட்டார் எங்கள் நெல்லை க. பேரன்.


இரத்தத்தை உறையவைத்து ,நெஞ்ச மதை அடைக்க வைத்து வெடித்துச் சிதறிய விம்மல்கள் எத்தனை...? எத்தனை...?

செய்தி கேட்டு கலங்கிப் போனேன்.

ஆறுதல் தெரிவித்து கடிதம் எழுதவும் மனைவி மக்களை விட்டுச் செல்லாமல் உடன் அழைத்துச் சென்று விட்டார் எங் கள் நெல்லை க. பேரன்.

அப்பொழுது எம்மையெல்லாம் உலுக்கியது அந்த முழுக்குடும்பத் தின் அகால மறைவுச் சம்பவம்.

பேரம்பலம் என்ற இயற்பெயர் கொண்ட வர். வடமராட்சியில் நெல் லியடியில் 1946 இல் பிறந்தார். தனது எழுத் துலகில் ஊரின் பெய ரையும் இணைத்துக் கொண்டு நெல்லை. க. பேரன் ஆனார். 1991 இல் தமது 44 வயது அற் பாயுளில் எங்களையெல் லாம் விட்டு மறைந்தார்.


கே.எஸ். சிவகுமாரன்

பேரன் பத்திரிகை நிருபராக எழுத்துப் பணியை ஆரம்பித்து ஆக்கஇலக்கிய காரனாக பரிமளித்தவர். தபால் திணைக் களத்திலும் பின்பு சிறிது காலம் குவைத்திலும் பணியாற்றியவர்.

படைப்பிலக்கிய எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையே நூலிழை வித்தியாசம்தான். இரண்டு தரப்பாருக்குமே பொறுப்புணர்வும் தார் மீகக் கடமைகளும் இருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் -பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில் பணத்துக்காக பேனை பிடிப்பவர்கள் அபூர்வம். இலக்கியத்துறையில் எழுத்தையே முழுவாழ்க் கைக்குமான தொழி லாகக் கொண்டவர்கள் கூட இங்கு பெருமள வில் சம்பாதித்தவர்கள் அல்லர். எழுதியவை வெளிவந்தாலே போதும் என்றளவில் ஆறுதல் அடைந்த வர்களே அநேகம்.


மாவை நித்தியானந்தன்

பேரனும் எழுதினார். செய்திகள் - கட்டு ரைகள் - சிறுகதைகள் - நாவல்கள் - கவிதைகள் - அறிக்கைகள் - பேட்டிகள் - இப்படியாக பலதும் எழுதி க்குவித்தவர் பேரன். பேரனின் எழுத்துக்களை, குறிப் பாக கதைகளைக் கூர்ந்து படித்தால் அவை நடைச்சித்திரமாகவே காட்சியளிக் கும். செய்திகளும் அறிக்கைகளும் எழுதிப் பழகியதனாலோ என்னவோ அவரது சிறுக தைகளும் சில சமயங்களில் அவ் வாறு அமைவதுண்டு.

இது பத்திரிகை யாளர்களுக்கு , ஆக்க இலக்கியம் படைக் கும்போது நேர்ந்து விடும் அபா யம் தான்! பேரனும் இந்த அபாயத்தில் சிக்குண்டார். எனி னும் பேரனின் இலக் கிய வரவுகள் :- ஒரு பட்டதாரி நெசவுக் குப்போகிறாள் - சத்தி யங்கள் (சிறுகதை கள்) விமானங்கள் மீண்டும்வரும் - வளைவுகளும் நேர்கோடுகளும் (குறுநா வல்கள்) பேரனின் கவிதைகள் - சந்திப்பு - நேர்காணல் தொகுப்பு.


நீர்வை பொன்னையன்

பேரனின் விமானங்கள் மீண்டும் வரும் என்ற குறுநாவல் இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறு நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்று, யாழ் ஈழநாடு பத்திரிகையில் தொடராக வெளிவந்து. பின்னர் 1986 இல் நூலா கியது.

இவர் அங்கம் வகித்த கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தின் மாதாந்த சந்திப்புகளில் இவரது எழுத் துக்கள் விமர் சிக்கப்பட்டன. அச்சந்திப்புக் களை தனது வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொண்டவர் பேரன். இச்சந்திப்புகள் பெரும்பாலும் இலக்கிய நண்பர்களின் வீடுகளில் அல் லது தமிழ்ச்சங்க மண்ட பத்தில் நடக்கும். கே.எஸ். சிவகுமாரன்,


குப்பிழான் ஐ. சண்முகன்

நீர்வை பொன்னை யன், ஐ. சாந்தன், குப்பிழான் ஐ. சண்முகன், அ.யேசுராசா உட்பட மேலும் சில கலை, இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொள்வார்கள். அவ்வப்போது எங்கள் ஊரிலிருந்து சென்று கலந்துகொள்வேன். மல்லிகை யில் பேரன் எழுதிய பல கலை, இலக்கிய நிகழ்வுகள் தொடர்பான குறிப்புகள் பலராலும் விரும்பிப் படிக்கப்பட்டன.

பழகுவதற்கு இனியவரான பேரன், இலக்கியக்கூட்டங்களுக்கு வந்தால், கூட் டத்தின் செய்திகள் நிச்சயம் ஏதாவது ஒரு இதழிலோ பத்திரிகையிலோ வெளியாகும் என திடமாக நாம் நம்பலாம்.

மனிதர்களுடன் பழகுதல் இனிய பண்பு. இந்தப் பண்பை இவரிடமும் நான் கற்றேன். இந்தப் பண்பை எல்லோரிட மும் (படைப்பாளிகளிடம்) காண்பது அரிது.

1972 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரையில் - இடையில் அவர் சில காலம் மத்திய கிழக்கில் பணி புரிந்த காலம் தவிர்ந்து , அவருடன் பழ கிய சந்தர்ப்பங்கள் பசுமையானவை.

மொஸ்கோவில் நடந்த சர்வதேச மாணவர் இளைஞர் விழாவுக்குச்சென்று திரும்பிய எனக்காக 1986 நவம்பரில் பூபால சிங்கம் புத்தகசாலை அதிபர் நண்பர் ஸ்ரீதரசிங் நண்பர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடன் இணைந்து மூத்த எழுத்தாளர் வரதர் தலைமையில் யாழ்ப் பாணத்தில் தேநீர் விருந்தொன்றை எனக் காக ஏற்பாடுசெய்தார். இந்நிகழ்ச்சி யில் நெல்லை க. பேரன், சோகாந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநா தன், யாழ்வாணன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அந்த நிகழ்ச்சி பற்றியும் பேரன், மல் லிகை டிசம்பர் 1986 இதழில் குறிப்புகள் எழுதியிருந்தார். குறிப்பிட்ட நிகழ்ச்சியில் என்னை வாழ்த்திப் பாராட்டிய பேரனை, அச்சந்திப்பின் பின்பு நான் சந்திக்கச் சந் தர்ப்பம் கிடைக்கவில்லை. அதுவே இறு திச் சந்திப்பு.

வீரகேசரியில் இணைந்து செய்திகளை எழுதும் செம்மைப்படுத்தும் பணிகளில் நான் ஈடுபட்டிருந்தமையால் எனது படைப் பிலக்கிய முயற்சிகள் தேக்கமடைந்தன. அக்காலப்பகுதியில் நான் சிறுகதை எழுது வதற்கு நேரத்தை செலவிடவில்லை. அதனை நன்கறிந்த பேரன், அன்றைய சந்திப்பில் எனக்கு வழங்கிய புத்திமதி கள் இவை: படைப்பாளிகள் அனைவருக் கும் பொருந்தும் அறிவுரைகள்:


அ.யேசுராசா

எழுத்தாளர்கள் - எழுத வேண்டும். எழுதாதவர்கள் எழுத் தாளர்கள் அல்ல. இறைக்க இறைக்கத்தான் தண்ணீர் ஊற்றெடுக்கும். இறைக்காத கிணறு நாறும். அதுபோல்தான் எழுத்தும். தொடர்ந்து எழுதா மல் விட்டால், பின்பு எழுதுவ தற்கு சோம்பலாக இருக்கும். எழுத்துக்கு சோம் பல்தான் முதல் எதிரி.

வடமராட்சியில் பிறந்த எழுத்தாளர்க ளின் சிறுகதை கள் கொண்ட உயிர்ப்புகள் என்ற தொகுதியை நெல்லியடி கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் 1986 இல் வெளி யிட்டது. இது வெளிவந்த சம யம் , அங்கு பிறந்து , வெளி இடங்களில் நீண்டகாலம் வாழ்ந்த சோமகாந்தனின் (ஈழத்துச் சோமு) சிறுகதை அதில் இடம்பெறாமல் விட்டமை குறையெனக் கூறப்பட்டபொழுது, இந்தத் தவறுக்கு பேரன்தான் பொறுப்பு என சில ரால் பொறுப்பற்ற முறையில் குற்றம் சுமத் தப்பட்டது.

இத்தவறு தற்செயலானது என ஒப்புக் கொள்ள குற்றம் சுமத்தியவர்கள் தயங்கி னார்கள். பேரன் இவ்வாறு திட்டமிட்டு சோமுவை புறக்கணித்திருக்க மாட்டார் என்றே இப்பொழுதும் என் மனம் சொல் கின்றது.

இத்தொகுதிக்கு முன்னுரை வழங் கிய பேராசிரியர் சிவத்தம்பியாவது (இவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர்) ஆரம்பத்தில் இதனைச் சுட்டிக் காட்டியிருந் தால் சோமு வின் கதையும் சேர்த்துக் கொள்ளப்பட்டி ருக்கலாம் என்று சிவத்தம்பியில் நான் பழியைப் போட்டேன்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

**புளொட் அமைப்பின் வெகுசன அமைப்பான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் முப்பதாவது ஆண்டு நாள் அடுத்த மாதம் 18 ஆம் திகதியாகும் அதனையொட்டி அக் கட்சியின் தலைமைப் பணிமனை வெளியிட்ட அறிக்கை இது.**

# புளொட்டின் அரசியல் கட்சி 31 ஆவது ஆண்டில் பிரவேசம்

புளொட் என அறியப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வெகுஜன அமைப்பான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் முப்பதாவது ஆண்டு நாள் அடுத்த செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆகும்.

ஆயுதப் போராட்டத்தில் ஏற்படக் கூடிய தேக்க நிலையை ஈடுகட்டும் வகையிலும், பரந்துபட்ட அளவில் எமது மக்களின் அனைத்து பிரிவினரையும் விடுதலைப் போராட் டத்தின்பால் அணி திரட்டக்கூடிய வகையிலும் உருவாக்கப்பட்ட வெகுஜன முன்னணியாகிய ஜனநாயகமக்கள்விடுதலைமுன்னணி, இந்திய படைகளின் இருப்புக்கு மத்தியிலும், எமது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக, வவுனியா பேருந்து நிலையத்திற்கு முன்பாக மறைந்த செயலதிபர் தோழர் க.உமாமகேஸ்வரனின் பங்குபற்றலுடன் தனது முதலாவது வெகுஜன போராட்டத்தை நடத்தியிருந்தது.

தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் தலைமையில், அன்றிலிருந்து இன்று வரை, தனது போராட்டப் பாதையில் ஏற்ற இறக்கங்களுடனும், வெற்றி தோல்விகளுடனும் பயணித்திருந்தாலும், எமது மக்களின் அடிப்படையானதேவைகளை இனங்கண்டுஅதன் அடிப்படையில் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை மிகவும் தன்னம்பிக்கையுடனும் தொலைநோக்குடனும், கட்சிக்கு ஏற்படக்கூடிய இழப்புகளை பொருட்படுத்தாமலும் முன்னெடுத்து வந்திருந்தது.

எமது இன்னுயிர் தோழர்கள் பலரை இழந்து அன்று நாம் முன்னெடுத்த ஜனநாயக நடைமுறைகளை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் அனைவருமே, வெவ்வேறு காலகட்டங்களில் அவற்றைத் தமது அரசியல் ரீதியான அணுகுமுறைகளாகவும் நடைமுறைகளாகவும் நடைமுறைப்படுத்தி வருகின்றமை வரலாறு தெளிவாகக் காட்டி நிற்கிறது.

மக்கள் நலன், இன ஐக்கியம், தமிழ்த் தேசியத்தின் பாதுகாப்பு போன்ற அடிப்படைகளில் பல தரப்பட்ட விமர்சனங்களுக்கு மத்தியிலும் உறுதிப் பாட்டுடன் தொடர்ந்து பயணிப்பதையே இன்றும் நாம் எமது இலக்காகக் கொண்டுள்ளோம்.

கடந்து வந்த போராட்டப் பாதையில் நாம் கண்ட சோதனைகள், இழப்புகள், துரோகத்தனங்கள்என அனைத்தையும் நினைவிற்கொண்டும், அரசியல் அரங்கின் கடந்தகால நிகழ்வுகளை அனுபவங்களாகக் கொண்டும் எமது கட்சியின் எதிர் காலத்தை வடிவமைக்கவும், ஆரோக்கியமான, அறிவுபூர்வமான அரசியல் தலைமைத்துவத்தை தமிழ் மக்களின் அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் உருவாக்கிக் கொள்ளவும் உறுதி பூணுவோம்.

எமது மக்களுக்கும் கட்சியின் கட்டமைப்புக்களிற்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளிகளை நீக்க முயல்வோம். ஆரம்ப காலங்களில் செயற்பட்டமையைப் போல, மக்களோடு இணைந்த பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வெகுஜன முன்னணியாக மீண்டும் புதுப்பலம் பெறுவோம்.

எம்மோடு பயணித்து கட்சியின் உயரிய நோக்கங்களுக்காக இன்னுயிர்களை ஈந்த கழக கண்மணிகளின் கனவுகளை வெற்றிகொள்ள உழைத்திடுவோம்.

அடுத்து வரும் ஒரு மாத காலப் பகுதியில் தாயகத்தில் கட்சியின் ஒவ்வொரு நிர்வாகப் பிரிவும் தம்மாலான மக்கள் நலப் பணிகளை முன்னெடுக்க வேண்டுகிறோம். பாதிக்கப்பட்ட மக்களின் மீள் எழுச்சிக்காக பயனுள்ள திட்டங்களை மக்கள் நலன் விரும்பும் கொடையாளிகளுடன் இணைந்துசெயற்படுத்துவது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறோம்.

**இரத்ததானம்,**

மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் பொது இடங்களிலும் சுகாதார நலன் பேணும் நோக்கிலான சிரமதானங்கள், வறிய குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையிலான விவசாய பயிர் கன்றுகளை வழங்குதல், கட்சியின் கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் தெளிவுபடுத்தக் கூடிய கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் மிகவும் கீழ் மட்டத்தில் கிராமங்களில் இருந்து முன்னெடுத்தல் போன்ற மக்களோடு இணைந்த பணிகளை மேற்கொள்ள தோழர்கள் முன்வரவேண்டும் என விரும்புகிறோம்.

உங்களுடைய, உங்களுக்கு நெருக்கமானவர்களினது வலைத் தளங்களில் எமது தோழர்களின் தியாகங்கள், செயற்பாடுகள், சாதனைகளை வெளிப்படுத்தும் தரவுகளைப் பதிவிடுங்கள்.

மூன்று தசாப்தமல்ல, இன்னும் பல சகாப்தங்கள் எமது மக்களின் காவலர்களாக செயற்படக்கூடிய அமைப்பாக, சமூக நீதியை கட்டிக் காத்து நிற்கக்கூடிய கட்சியாக, இளை ஞர்களினதும் பெண்களினதும் உரிமைகளை பேணிப் பாதுகாக்கக்கூடிய ஒரு பேரியக்கமாக எமது கட்சியை வளர்த்திடுவோம் என உறுதி கொள்வோம்.

★

---

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# டைட்டானிக் கப்பலில்....



# காலம் செல்ல மறந்த காதல்

இது ஏதோ தற்செயலாக நடந்ததென்று கடந்துபோக முடியவில்லை. டைட்டானிக் பயணத்துக்கு முன்பதிவு செய்யும்போதே அந்த நிறுவனம் வெறும் வெள்ளையர்களாகவே பதிவு செய்திருக்க வேண்டும். இந்த இருவரும் பயணிப்பது கூட கடைசி நேரத்தில் தெரிந்ததால் அவர்களால் அதைத் தவிர்க்க முடியவில்லை. இதைப் பின்னாளில் ஒப்புக்கொண்ட தி வைற் ஸ்டார் லைன் (The White Star Line) கப்பல் நிறுவனம் தங்கள் கப்பலில் நடத்தப்பட்ட இனவெறிச் செயற்பாடுகளுக்குப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது.

டைட்டானிக்மூழ்கியஏப்ரல் 14 அன்று இரவு, ஜோசப் கப்பலின் மேல்தளத்தில் புகைப்பிடித்துக்கொண்டிருந்தார். கப்பல் ஒரு பனிமலைமீது மோதியதால் ஆபத்துக்குள்ளாகிய விஷயம் தெரிந்தவுடன் தனது அறைக்கு ஓடினார். குழந்தைகளோடு ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஜூலியட்டை எழுப்பினார். கப்பல் மூழ்கத் தொடங்கியது.

**கப்பலில் இருந்து பிரியும் வேளையில்...**

கூட்டம் கூட்டமாகப் பெண்களையும் குழந்தைகளையும் மட்டும் முதலில் காப்பாற்றிக்கொண்டிருந்தார்கள். படகுகளில் ஏறுவதற்கு முயன்று கொண்டிருந்த கூட்டத்துக்கு மத்தியில் தனது குடும்பத்தைப் போராடி அழைத்துச் சென்றவர் ஒருவழியாகப் படகில் ஏற்றினார். ஜூலியட்டுக்குத் துக்கம் தாங்கவில்லை. துக்கம் வெடித்துப் பொங்கி வந்த கண்ணீரும் அவளது தேம்பலும் அந்தப் படகிலிருந்த வெள்ளையர்களுக்கு அவர்களின் காதலைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. ஆனால், மேட்டுக்குடிப் போதையில் சிக்கியிருந்த அவர்களின் காதுகளுக்கு வேறுபாடுகளைத் தாண்டியவர்களின் காதல் கதறல்கள் கேட்கவில்லை.



அவர்களை அழைத்து வரும்போதுதன்னிடமிருந்த பணம், நகைகளை முடிந்தமட்டும் 'கோட்' பையில் போட்டுக் கொண்டுதான் கிளம்பினார். அவரைப் பிரியமுடியாமல் திணறிய காதல் மனைவிக்கு அந்தக் 'கோட்'டை அணிவித்து, ''ஜூலி, நீ கவலைப்படாதே.நான் வேறு படகைப் பிடித்து நிச்சயம் வந்துவிடுவேன். நீ குழந்தைகளைப் பத்திரமாகக் கரை சேர்த்துவிடு. நாம் நியூயோர்க்கில் சந்திப்போம்என்றுசமாதானம் கூறினார்.

குழந்தைகளோடு ஜூலியட் அமர்ந்திருந்த படகு இறங்கியவுடன் மற்ற பெண்கள் குழந்தைகளைக் காப்பாற்ற முயன்றார் ஜோசப். தனது குடும்பத்தைப் போராடிக் காப்பாற்றிய அவரால், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல்போனது. கப்பலோடு அவ ரும் மூழ்கிப்போனார். அவரது உடல்கூட கிடைக்கவில்லை.

> **கூட்டம் கூட்டமாகப் பெண்களை யும் குழந்தைகளையும் மட்டும் முதலில் காப்பாற்றிக் கொண் டிருந்தார்கள். படகு களில் ஏறுவதற்கு முயன்று கொண்டிருந்த கூட்டத்துக்கு மத்தியில் தனது குடும்பத் தைப் போராடி அழைத் துச் சென்றவர் ஒருவழியாகப் படகில் ஏற்றினார். ஜூலியட் டுக்குத் துக்கம் தாங்க வில்லை.**

**கர்ப்பிணியான ஜூலியட்டுக்கு நேர்ந்த கதி**

உயிருக்குப் போராடிய அந்த நிலையிலும் ஜூலியட் மீது அவர்கள் வெறுப்பைக் கக்கினார்கள். கரைசேரும் முன்பே ஜோசப் கொடுத்த 'கோட்' படகிலிருந்த ஒருவரால் பிடுங்கப்படவே வெறுங்கையோடு நின்றாள் ஜூலியட். கர்ப்பிணியான அவள் தனது இரண்டு பெண் குழந்தைகளோடு தப்பித்துக் கரை சேர்ந்தாள். இனி எங்கு செல்வதெனத் தெரியாமல் துவண்டுபோயிருந்த ஜூலியட் மீண்டும் தந்தையிடமே திரும்பினாள்.

ஆனால், அவரோ முதல் உலகப் போரின் விளைவால் தனது தொழிலை முற்றிலு மாக இழந்து மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தார். அனைவரும் வறுமையில் வாடினர். பிரான்ஸில் ஜூலியட்டுக்கு ஆண் குழந்தையும் பிறந்தது. சில ஆண்டுகளில் டைட்டானிக் கப்பலின் பேரழிவால் பாதிக்கப்பட்டதற்கு நஷ்டஈடாக ஜூலியட் பெயரில் நிலம் கிடைத்தது. அதற்குப்பிறகு அதை வைத்துச்சராசரி வாழ்க்கையை மட்டுமே கடைசிவரை வாழ முடிந்தது. கடைசிவரை அவர் மறுமணமே செய்து கொள்ளவில்லை. இறுதிவரைத் தன் காதல் கணவன் நினைவிலேயே வாழ்ந்து விட்டார்.

சமூகக் கட்டமைப்பின் இருவேறு பிரிவுகளில் வளர்ந்தும், உயர்வுதாழ்வு பாராமல் தோன்றியது ஜோசப்–ஜூலியட் காதல். இது காலம் சொல்ல மறந்த காதல்.

★



# பெண்கள் அதிகம் விரும்புவது நட்பு என்னும் உறவை

ஒருவருடைய சிந்தனைகளையும் குணங்களையும் பட்டை தீட்ட அவரை நன்கு உணர்ந்த ஒரு நண்பர் தேவைப்படுகின்றார். மகிழ்வை, துக்கத்தைப் பகிரமற்ற உறவுகளைவிட மனித மனம் நாடுவது நட்பெனும் உறவைத்தான்.

ஒவ்வொரு நண்பர்களும் புதிய உலகத்தின் வாயிற்கதவுகள். நட்பு என்பது ஒரு கொண்டாட்டம். இன்பத்தில் மட்டுமல்ல துளையிடும் வலிகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், நட்பு அவசியமாகிறது. வாழ்க்கை ஓட்டத்தைப் பூவனமாக்குவதும் நட்பு.

இத்தகு நட்பு இறுக்கமாக இல்லாமல் ஒருவர் தளர்ந்து கொடுப்பதாலேயே கிடைக்கிறது. ஒருவரை வாசித்து நட்பு பெறுவது கடினம். நாம் காட்டும் ஈடுபாட்டால் மட்டுமே நட்பு மலர்கிறது.

நட்பில் பல பரிமாணங்கள் உண்டு இருவருக்கிடையே ஏற்படும் நட்பு, இருபாலருக்கு இடையே ஏற்படும் நட்பு, இரு குழுக்களிடையே ஏற்படும் நட்பு அல்லது பல குழுக்களிடையே ஏற்படும் நட்பு, இரண்டு நாடுகளுக்கு இடையே ஏற்படும் நட்பு, பிற உயிர்களிடத்து ஏற்படும் நட்பென நட்பின் தன்மை மிக உன்னதமானதாகும். நட்பு வயது, மொழி, இனம் அறியாது.

இலக்கியங்கள் வழியும், வரலாறு வழியும் நட்பின் உன்னதப் பதிவுகளை நாம் அடையாளம் காண முடிகின்றது.

வள்ளுவப் பெருந்தகை நட்பு, நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு என்ற நிலையில் நட்பினை நன்கு விளக்கிஉள்ளார். ஒத்த உணர்ச்சிதான் நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். நட்புக்கு இலக்கணமாக, சான்றாக வாழ்ந்தவர்கள் பலர் உண்டு.



மிகுந்த தமிழ் ஞானமும், புலமையும் கொண்ட அவ்வைக்கு, தமிழ் பற்றாலும், அவரின் புலமையின் பால் ஈர்க்கப்பட்ட நட்பினாலும் அரியவகை நெல்லிக்கனியைக் அதியமான் கொடுத்தான். அவன் ஓர் அரசன். அதனை அவனே உண்டிருக்கலாம். அதை யாரும் தடுத்திட போவதில்லை. இருந்தும் தான் இல்லை என்றால், இந்நாட்டுக்கு மற்றொரு அரசன் கிடைப்பான். அவ்வை வாழ்ந்தால் தமிழ் வாழும். தமிழால் பின்வரும் சந்ததியினர் வாழ்வர் என்ற உயரிய நோக்கிலும், அவர்மீது கொண்ட நட்பின் தகைமையாலும் நெல்லிக்கனியை கொடுத்தான்.

அதியமானின் செயலும், அச்செயலைக் கண்ட அவ்வை ‘சிவபெருமான் போல் நீ நீடுழி காலம் வாழ்க’ என வாழ்த்திய தன்மையும் நினைக்கும் போதெல்லாம் இனிக்கும்.

இன்றைய காலச்சூழலில் ஆண், பெண் நட்பு போற்றத்தக்கதா? அது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி பலரிடம் உள்ளது. நம்பிக்கையின் அடிப்படையில் சுயநலமற்று துளிர்விட்டு தழைக்கும் போது ஆண், பெண் நட்பு ஆரோக்கியமானதே.

சுதந்திர போராட்ட வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற வீரமங்கை வேலுநாச்சியார், தனது கணவன் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படைத்தளபதிகள் ஸ்மித், பாஞ்சோர் ஆகியோரால் கொல்லப்பட்ட நிலையில், ஆங்கில அரசுக்கு எதிராக குறுநில மன்னர்களை ஒருங்கிணைத்து மைசூர் மன்னன் ஐதர் அலியுடன் நட்புறவு கொண்டு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு சிவகங்கை சீமையை வெற்றி கொண்ட செய்தியை எதற்குள் அடக்குவது? இச்செயலை போற்றாமல் இருக்க முடியாது.

அரசியலில் கொள்கை ரீதியாக முரண் கொண்டவர்கள்கூட நட்பு ரீதியாக அன்புள்ளம் கொண்டு வாழ்ந்ததை அறியமுடிகிறது. இப்படியான நட்புகளை காணும் போது நட்பின் உண்மைத் தன்மையையும் உறுதிப்பாட்டையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

கிராமம், நகரம், நாடு தாண்டி உலகளாவிய நட்புறவை ஆரோக்கியத்துடன் பெற்றுத்தருவதில் விளையாட்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒலிம்பிக் போன்ற விளையாட்டுகள் மூலம் நாடுகளுக்கு இடையே பலமான நட்புணர்வு கிடைக்கிறது என்பது உண்மை. தமிழன் அன்று தெற்காசிய நாடுகளோடு கொண்டு இருந்த வாணிப சிறப்பை யாவரும் அறிவோம். நட்புறவுக்கும் வாணிபம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

இவற்றைப் போன்றே ஊர் திருவிழாக்கள் மூலமாகவும், இல்லங்களில் நடக்கும் இன்ப, துன்ப நிகழ்வுகளின் மூலமாகவும் நட்புறவு மிக அழகாக கிடைப்பதுடன் விடுபட்ட உறவுகளை புதுப்பித்துக் கொள்ளும் இடமாகவும் இவ்விடங்கள் திகழ்கின்றன.

மனிதர்களுக்கு இடையேயான நட்புறவைத் தாண்டி பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருதி பறவைகள், விலங்குகள், செடி, கொடிகளிடம் மனிதன் ஏற்படுத்திக் கொள்ளும் நட்பினால் மனிதன் ஒருபடி நிலை உயர்ந்து மேன்மை அடைகிறான். இந்த நட்புணர்வால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகின்றது. மற்ற உயிரினங்கள் மனிதர்களிடம் நம்பிக்கையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் போது மனிதர்களிடம் நட்பாகின்றன.

மாவீரன் அலெக்சாண்டரை இந்திய துணை கண்டம் வரை போர்களுடனே சுமந்து வந்த பூசிப்பலா என்ற குதிரை அவருடைய பழக்கத்தாலும், செயலாலும் மிக சிறந்த நண்பனாக விளங்கியது. அந்த குதிரை 30 வயதில் இறக்கும் போது அலெக்சாண்டர் ஒரு நகரத்திற்கு பூசிப்பலா என்று பெயரிட்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

காலம் கடந்தும் நண்பனின் நினைவினை ஊட்டும் கடிதங்கள் பெட்டியில் கிடந்த காலம் மாறி, அலைபேசி உலகில் வாழ்ந்தாலும் சில அடிப்படை நிகழ்வுகளும், செய்திகளும் மாறுவதில்லை. அலை பேசியின் வழியும் போற்றத் தகுந்த வலுவான நட்பினை அடையாளம் கண்டு நட்புறவை ஏற்படுத்திக்கொள்வது அதனை பயன்படுத்தும் ஒவ்வொருவரின் கையில் உள்ளது.

தங்களது பிள்ளைகளைச் சீர்திருத்திட முடியாத சூழலில் பெற்றோர்கள் அவர்களின் நண்பர்களை அணுகி பிள்ளையை சீர்திருத்த முனையும் காட்சியை இன்றளவும் காண முடிகின்றது. நட்பு அத்தகைய வல்லமை பெற்றது. அதே நிலையில் மன ஒற்றுமை இல்லாதவர்களுடைய நட்பு தீராத துன்பத்தை தரும்.

எந்தவித எதிர்பார்ப்பும், சுயநலமும் இல்லாத கனிந்த நட்பு மிக சிறந்த நட்பாகும். இத்தகைய நட்பை அடையாளம் கண்டு கரம் பிடித்து வாழ்வின் வெளிச்சத்தைப் பரிசாகப் பெறுவோம்.

# வெண்குஷ்டமா...?

## வீட்டிலேயே குணப்படுத்தும் எளிய வழிகள்!



வெண்குஷ்டம் என்பது உயிருக்கு ஆபத்தான அல்லது தொற்றுநோய் அல்ல. ஆனால் சமூக கண்ணோட்டத்தால், இது ஒரு மன அழுத்தம் நிறைந்த நோயாகவே இருக்கிறது. இதனை முழுமையாக நீக்க முடியாது. இருப்பினும் உரிய சிகிச்சையின் மூலம் தோற்றத்தில் சிறப்பான மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

**கற்றாழை**

இது வெண்குஷ்டத்தை எதிர்த்து போராடும் அளவிற்கு முக்கிய வேதிப் பொருள்களைக் கொண்டுள்ளது. அதாவது, விற்றமின் ஏ, சி, பி12 மற்றும் ஃபோலிக் அசிட், காப்பர், கல்சியம், குரோமியம், ஜிங்க் உள்ளிட்டவை காணப்படுகின்றன. இந்த இயற்கையான தாவரம், வெண்குஷ்டத்திற்கு நல்ல பலன் அளிக்கும். கற்றாழை கரைசலை உள்ளுக்கும், வெளிப்புறத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பப்பாளி**

சுவையான பழமாக விளங்கும் பப்பாளி, ஏராளமான மருத்துவப் பண்புகளை கொண்டுள்ளது. இதில் நிறைய கரோட்டின் உள்ளது. இது ஒட்டுமொத்த தோலிற்கும் மிகவும் நல்லது. தொடர்ந்து பப்பாளி சாப்பிட்டு வந்தால், தோலின் இறந்த செல்கள் சரிசெய்யப்படுகிறது. தோலில் திட்டுக்கள் காணப்படும் இடங்களில் தினசரி 5 நிமிடங்கள் பப்பாளி துண்டை வைத்து தேய்த்தால் நல்ல பலன் தரும்.

**மஞ்சள் மற்றும் கடுகு எண்ணெய்**

சளி, இருமல் முதல் புற்றுநோய் வரை பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கிறது. இவை உடலில் இருக்கும் ஆபத்தான வேதிப் பொருள்களை நீக்குகிறது. தினசரி உணவில் மஞ்சள் சேர்த்துக் கொள்வது, மெலனோசைட்ஸ் நீக்கி, தோல் நிறமிகளை புதுப்பிக்கிறது. மேலும் தோலில் திட்டுக்கள் இருக்கும் இடங்களில் மஞ்சள் மற்றும் கடுகு எண்ணெயை நேரடியாக தடவலாம். பின்னர் 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். குறைந்தபட்சம் 2 வாரங்களுக்கு தினசரி இருமுறை செய்வது நல்லது.

**தேங்காய் எண்ணெய்**

தோலின் நிறமிகளை மறுசீரமைக்க தேங்காய் எண்ணெய் பெரிதும் உதவுகிறது. இதில் பூஞ்சை எதிர்ப்பு, பாக்டீரிய எதிர்ப்பு நன்மைகள் உள்ளன. சில வாரங்களுக்கு தோலில் இருக்கும் வெள்ளை திட்டுக்கள் மீது தினசரி 2 - 3 முறை தேங்காய் எண்ணெய் தடவுவது நல்லது.

**இஞ்சி**

இரத்த சுழற்சியை அதிகரித்து, மெலனின் சுரப்பிற்கு உதவுகிறது. இஞ்சியை சிறிய துண்டாக, வெள்ளைத் திட்டுக்கள் இருக்கும் இடத்தில் தடவலாம். பின்னர் இஞ்சி காயும் வரை அப்படியே விடவும். சில வாரங்களுக்கு தினசரி 1 - 2 முறை செய்து வருவது நல்ல பலனை அளிக்கும். இஞ்சி வேரில் இருந்து எடுக்கப்பட்ட இஞ்சி சாற்றை புதினாவுடன் சேர்த்து குடித்தால் சிறப்பான மருத்துவப் பயனை அளிக்கும்.

## கிறிஸ்தவ வாழ்வு பிரிக்கப்பட்டு பகிரப்பட வேண்டியது

பிறருக்காக நொறுக்கப்படவும் நாம் முன்வர வேண்டும் என்பதே திருநற் கருணையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம். திருநற்கருணையைப் போல் நம் வாழ்வும் உடைக்கப்பட்டு பிறருடன் பகிரப்பட வேண்டும். திருநற்கருணை எனும் கொடைக்கு நன்றி சொல்வோம். நம் வாழ்வும் உடைக்கப்பட்டு நம் சகோதர சகோதரிகளுக்கு பயனுடையதாக பகிரப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத் தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர் Kālaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## முதியோரைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 81 ஆவது பிறந்தநாளை நோயுற்ற குழந்தைகளுடன் கொண்டாடினார். குடும்பங்களில் குழந்தைகள் தங்கள் தாத்தா பாட்டியுடனும் முதியோருடனும் கடவுளுடனும் பேசுவது முக்கியம். ஒரு சமுதாயம் முதியோருக்கு எத்தகைய இடத்தை வழங்கியுள்ளது என்பதே அச்சமுதாயம் கலாச்சாரத்தில் எவ்வளவு தரம் மிக்கது என்பதற்கான அளவு கோலாகும்" – என முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கூறியவற்றைத் திருத்தந்தை பிரான்சிஸ் அந்த நிகழ்வில் வலியுறுத்தினார்.

# 72 நாடுகள், 123 நகரங்களின் வழியே உலக அமைதிக்கான மரதன் ஓட்டம்

## செம்ரெம்பரில் கனடாவில் நிறைவு செய்கிறார் ஜோக்கிம்





இலங்கை யாழ்ப்பாணம் அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட சுரேஸ் ஜோக்கிம் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பரில் கனடா ரொறென் ரோவில் உலக அமைதிக்காக தன் மரதன் ஓட்டத்தை நிறைவு செய்யும் திட்டத்திலும் உள்ளார் என காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அண்மையில் செய்தி வெளியிட்டு இருந்தது. உலக அமைதிக்காக இந்த மரதன் ஓட்டம் வெற்றிகரமாக நிறைவேறி 2018 செப்ரெம்பர் ரொறென்ரோவில் நிறைவாகப் போகிறது என்ற மகிழ்வான செய்தி எட்டியுள்ளது.

இலங்கை யாழ்ப்பாணம் அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட சுரேஷ் ஜோக்கிம் அவர்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பணியாற்றிய காலத்தில் அங்கு தங்கியிருந்து கல்வி கற்றவர்.

வாழ்வில் சாதிக்க வேண்டும் என்ற வெறிபிடித்த சுரேஷ் ஜோக்கிம் ஆஸ்திரேலியாவில் 13 ஆண்டுகள் வாழ்ந்து பின்னர் கடந்த 13 ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வருகிறார். சுரேஷ் ஜோக்கிம் கடந்த இருபது ஆண்டுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட கின்னஸ் சாதனைகளையும் படைத்திருக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நல்லதொரு வருங்காலத்தை உருவாக்கும் நோக்கத்தில் பிறரன்புப் பணிகளுக்கு நிதி திரட்டி கொடுக்கும் எண்ணத்தில் உலக அமைதிக்காக மரதன் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளார் அவர்.

2017ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பெருவிழா நள்ளிரவில் பெத்லகேமில் இயேசு பிறந்த இடத்தில் அமைதிச் சுடரை ஏற்றி ஓடத் தொடங்கிய இவர் ஒன்பது மாதங்களில் ஏழு கண்டங்களில் 72 நாடுகள் வழியாக 123 நகரங்களில் ஓடி 2 கோடியே 70 லட்சம் டாலர் நிதி திரட்டும் திட்டத்தில் உள்ளார். 2018ஆம் ஆண்டு செப்ரெம்பரில் கனடா ரொறென்ரோவில் தன் ஓட்டத்தை அவர் நிறைவு செய்வார்.

## உண்மையின் எண்ணங்கள்

### உலக அமைதிக்காக மரதன் ஓடுகிறார் சுரேஷ் ஜோக்கிம்

இலங்கை யாழ்ப்பாணம் அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட சுரேஷ் ஜோக்கிம் 2018ஆம் ஆண்டு செப்டம்பரில் கனடா ரொறென்ரோவில் உலக அமைதிக்காக தன் மரதன் ஓட்டத்தை நிறைவு செய்வார் என்பது மகிழ்வான செய்தியாகும். இன்று பல தமிழ் இளைஞர்களின் வாழ்வு பற்றி பலர் வேதனை பட்டும் கவலை தெரிவித்தும் கேள்விக் குறியோடும் கோபமாகவும் இருக்கும் வேளையில் சுரேஷ் ஜோக்கிம் அவர்களின் வாழ்வு ஒரு மேல் வரிச்சட்டமாக இருக்கிறது. அவர் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர். அவரின் பணி வரவேற்கப்பட வேண்டியது. இந்த நல்ல பணியை மேலும் பல இளைஞர்கள் பார்த்து பின்பற்ற வேண்டுமென சிபாரிசு செய்திறோம். அமைதிக்காக இந்த மரதன் ஓட்டம் வெற்றிகரமாக நிறைவேறி 2018 செப்டம்பர் ரொறென்ரோவில் நிறைவாகப் போகிறது என்ற மகிழ்வான செய்தி எட்டியுள்ளது. உலக அமைதிக்காக மரதன் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள சுரேஷ் ஜோக்கிம் அவர்களுக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தொவிக்கிறோம்.



மருதமடு அன்னையின் மடுத்திருப் பதியில் அமைக்கப்பட்ட வரவேற்பு மாதாவின் புதிய கெபி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் சம்பிரதாய பூர்வமாக ஆசீர்வதிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.







அண்மையில் மருத மடுத் திருத்தலத்திற்கு ஜனாதிபதியும் குடும்பத்தினரும் கொழுப்பு உயர் மறை மாவட்ட பேராயர்மேதகு கலாநிதி மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகையுடன் சென்று மடுக் கோவிலை அண்மித்த பிரதேசத்தைப் புனித பூமியாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்ட போது எடுக்கப்பட்ட மேலும் சில படங்கள் இவை.

# இறை சேவையின் மகத்துவத்தை உணர்த்தும் மரியின் விண்ணேற்பு

ஓகஸ்ட் 15 அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவும் இந்திய சுதந்திர தினமும் ஆகும். இந்திய சுதந்திர தினத்தையொட்டி இந்தியாவிற்கு விடுமுறை என்றால் அன்னை மரியாவின் விண்ணேற்புவிழாவையொட்டி இத்தாலி முழுவதும் விடுமுறை நாளாக இருந்தது.

இந்த விடுமுறை நாளில் திருத்தந்தை யின் புதன் மறைக்கல்வி உரை இடம்பெறவில்லை மாறாக பெருவிழாவிற்குரிய நண்பகல் மூவேளை செப உரையை மக்களுக்கு வழங்கி அவர்களோடு இணைந்து செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்னை மரியா தன்னைப் பற்றி முன்னுரைத்த எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் (லூக்.1:48) என்ற வரிகள் நிறைவுறுவதைக் காண்கிறோம். ஏனெனில் தாழ்நிலையில் உள்ளோரை ஆண்டவர் உயர்த்தியுள்ளார். உடலோடும் ஆன்மாவோடும் அன்னை மரியா விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது இயேசுவோடு தனிப்பட்ட ஒன்றிப்பில் வாழ்ந்த இறைவனின் தாயாம் அன்னை மரியாவுக்கு வழங்கப்பட்ட தெய்வீக சிறப்புச் சலுகையாகும். அன்னை மரியாவுக்கு மங்கள வார்த்தை அறிவிக்கப்பட்டதிலிருந்து வளர்ந்த இந்த ஒன்றிப்பு தன் மகனின் மறையுண்மையில் பங்கு பெற்றதன் வழியாக முதிர்ச்சியடைந்தது. அன்னை மரியாவின் வாழ்வு அக்காலத்தின் சாதாரண பெண்களின் வாழ்வு போன்றே தோற்றமளித்தது. அவர் செபித்தார், குடும்பத்தையும் வீட்டையும் வழிநடத்திச் சென்றார், செபக்கூடத்திற்குச் சென்றார்.

ஆனால் அவரின் அனைத்து நடவடிக்கைகளும் இயேசுவுடன் ஒன்றித்திருப்பதில் இடம் பெற்றன. கல்வாரியில் இது தன் உச்சத்தை எட்டியது. அன்னை மரியாவின் விண்ணேற்பு நம் விண் ணக வாழ்வு பற்றி மட்டுமல்ல நாம் நம் உட லோடும் ஆன்மாவோடும் இறைவனுக்குச் சேவையாற்றி மகிமைப்படுத்த வேண்டும் என்பதையும் நமக்கு நினைவூட்டி நிற்கிறது. இறைவனுக்குச் சேவை புரிவதில் மகிழ்ந்து அதனை நம் சகோதரர் சகோதரிகளுக்கான தாராள மனதுடைய சேவையிலும் நாம் வெளிப்படுத்துவதன் வழியாக உயிர்ப்பு நாளின் போது நாமும் நம் வானக அன்னையைப் போல் இருப்போம்.

–இவ்வாறு தன் மூவேளை செப உரையை புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த அனைவருக்கும் வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தமது உரையின் இறுதியில் இவ்வுலகில் உடலிலும், உள்ளத் திலும் துன்புறும் அனைவரையும் நினைவுகூர்ந்து செபித்து தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாகப் பல விடயங்களை அவ்வப்போது நான் அறிந்திருந்தேன். சில எழுதத்தக்கவை. சில எழுத முடியாதவை.

நேற்று இப்பத்தியில் நான் எழுதிய விடயங்கள் தொடர்பில் காலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொடர்பான இந்தியாவின் கையாளுகை குறித்து நன்கு பரிச்சயமானவருமான சிவாஜிலிங்கம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

*“நீங்கள் எழுதியவை எல்லாம் கனகச்சிதமாகச் சரியானவை. ஒரேயொரு சிறு தவறு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமரராகிவிட்டார் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். அது தவறு. மிகவும் தளர்ந்து, சுய பிரஞ்ஞை, தன்னிலை உணர்வு, சிந்தனைப் போக்கு என்பன நலிவுற்று, பாதிப்புற்று மிக மோசமான நிலையில் புதுடில்லியில் தான் அவர் உள்ளார்.”* – என்றார் சிவாலிஜிங்கம்.

அவரது தகவல் சரி என்றே நினைக்கிறேன். தன்னிலை மறக்கும் அளவுக்குப் பாதிப்புற்று, பராமரிப்போரின்றி அவலப்படும் அவரது தனிமை தொடர்பில் சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய சஞ்சிகைகளில் வந்த கட்டுரைகளை வாசித்திருந்தேன். அதுவே, அவர் அமரராகிவிட்டார் என்ற மனப்பதிவை எனக்குத் தந்துவிட்டது போலும். ஈழத்தமிழருக்காகப் பரிவுடன் செயற்பட்ட ஒரு தலைவரைத் தவறாக அவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என வரைந்தமைக்காக என் மன வருத்தத்தைப் பதிவு செய்கிறேன். அதனைத் திருத்துவதற்குச் சுட்டிக்காட்டிய சிவாஜிலிங்கத்துக்கும் நன்றி.

அமரரான முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஈழத் தமிழர்பால் எத்துணை பரிவுடன் செயற்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தாம் பிரதமராக இருந்த போது தமது பிரதிநிதி ஒருவரை நேரடியாகத் தலைவர் பிரபாகரனிடம் அனுப்பி, அவரின் எதிர்பார்ப்பை அவர் வாயாலேயே அறிய விரும்பினார் பிரதமர் வாஜ்பாய். ஆனால் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் முட்டுக்கட்டையால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

அதனை அந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட மறவன்புலோ சச்சிதானந்தன் ஐயாவின் வாசகங்களிலேயே இங்கு தர விரும்புகிறேன்.

யார் இந்த மறவன்புலோ சச்சிதானந்தன் என்பது வாசகர்களில் பலருக்குத் தெரியும்.

தமிழகத்தை – சென்னையை – தளமாகக் கொண்டு செயற்பட்ட ஈழத் தமிழர். அரசியல் ஆர்வலர். பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களுடன் நெருங்கிப் பழகுபவர். தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழகம் மற்றும் புதுடில்லி செல்லும் காலங்களில் அங்குள்ள இணைப்பாளர் இவர்தான்.

காங்கிரஸ் அரசின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு மருந்து மற்றும் உதவிப் பொருள்களை அனுப்ப முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டவர். இந்தியாவில் வசிக்கும் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான காசி ஆனந்தனுடன் எப்போதும் சேர்ந்து செயற்பட்டவர்.

1991 மே 21 ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ராஜீவ் காந்தி செல்லப்பட்டார் அல்லவா? அதற்கு சில காலத்துக்கு முன்னர் புலிகள் சார்பில் காசி ஆனந்தன் அவரோடு பேசினார் என்று தகவல் கசிந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

1991 மார்ச் 30 ஆம் திகதி புதுடில்லியில் இலக்கம் 10, ஜன்பத் சாலையில் உள்ள ராஜீவின் இல்லத்தில் இந்த இரகசியச் சந்திப்பு இடம்பெற்றது. ராஜீவ் கொல்லப்பட்டு விசாரணைகள் முடுக்கி விடப்படும் வரை அந்தச் சந்திப்புப் பற்றிய தகவல் வெளியே கசிய வேயில்லை. அந்தச் சந்திப்பில் காசி ஆனந்தனுடன் ராஜீவைச் சந்தித்தவர் இந்த மறவன்புலோ சச்சிதானந்தன்தான்.

பிரதமர் வாஜ்பாயுடன் தமது மூன்று சந்திப்புக்களை அவர் நினைவு கூருகின்றார். அந்த மூன்றாவது சந்திப்புப் பற்றிய விடயத்தை அப்படியே இங்கு உங்களுக்குத் தருகிறேன்.

தமிழைத் தமிழாக – தூய தமிழாக – வரைய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர் மறவன்புலோ சச்சிதானந்தன். அதனால் அப்பகுதியை எந்த மாற்றமுமின்றி அப்படியே அவர் எழுத்தில் இங்கு சேர்க்கிறேன்.

அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :–

*மூன்றாவது முறையாக:*

*2000 மே 25, மாலை 4 மணி. எழும்பூரில் எனதில்லம் விஜய பாரதம் இதழ் ஆசிரியர் திரு சண்முகநாதன் வந்திருந்தார். சில ஆண்டுகளாக அவருடன் பழகி வந்துள்ளேன்.*

*இந்தியப் பிரதமர் அலுவலகத்தாரும் நீதி அமைச்சர் சனா கிருட்டிணமூர்த்தியும் சேர்ந்து என்னைத் தில்லிக்கு அழைப்பதாகக் கூறினார். அப்பொழுது இந்தியப் பிரதமர் வாச்பாய்.*

*ஏன் என்று கேட்டேன். காரணம் சொல்லவில்லை. பயணத்துக்கு ஒப்புக் கொண்டேன். அரசியல் தொடர்பாக எந்த நடவடிக்கையிலும் நான் தனியனாக ஈடுபடுவதில்லை. கவிஞர் காசி ஆனந்தன், பழ. நெடுமாறன் இருவரிடமும் செய்தி கூறினேன்.*

*2000 மே 27ஆம் நாள் மாலை வானூர்தியில் தில்லி சென்றேன். கரோல் பூங்காவில் விடுதியில் தங்கினேன். 28ஆம் நாள் காலை பாசக அலுவலகம் சென்றேன். சனா கிருட்டிணமூர்த்தி வரவேற்றார்.*

*‘பிரதமரின் சிறப்புத் தூதர் வன்னிக்கு நேரே சென்று பிரபாகரனைச் சந்திக்க ஒழுங்கு செய்து தருவீர்களா? ’– அவரின் பேச்சின் சுருக்கம் இந்த வினா.*

*பிரதமர் வாச்பாய் அக்காலத்தில் தேராதூனுக்குக் கோடை விடுப்புக்குச் சென்றிருந்தார். தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பிரேச மிசுரா இங்குளார். அவரும் உங்களுடன் பேசுவார் என்றார் சனா.*

*மிசுராவும் என்னிடம் பேசினார்.*

*பிரபாகரன் வெளிப்படையாக உலவுபவர் அல்லர். கரந்துறைகிறார். இலண்டனில் அண்டன் பாலசிங்கத்தைச் சந்திக்கலாமே, என்றேன்.*

*ஈழத் தமிழருக்கு இந்தியா என்ன செய்யவேண்டும் என்பதைப் பிரபாகரன் வாயால் கேட்க (We want to hear from the horse's mouth.), நேரில் செல்லவேண்டும் என்றனர் இருவரும். வன்னிக்குப் போகும் பொறுப்பை எங்களிடம் விட்டுவிடுங்கள் என்றனர் இருவரும். மிகக் கமுக்கமாக வைத்திருங்கள். இச்செய்தி எவருக்கும் கசிந்துவிடக் கூடாது என்றனர்.*

*மனத்தில் சுமை. நடக்கிற ஒன்றா? மாலையே சென்னை மீண்டேன். கவிஞர் காசி ஆனந்தன், பழ. நெடுமாறன் இருவரிடமும் பேசினேன். அவர்கள் வியந்து என்னை வாழ்த்தினர்.*

*நான் பாரிசில் இருந்த அன்பர் வழி முயன்றேன். கவிஞர் தன் தொடர்பு வழி முயன்றார். நான்கு நாள்களாயின. விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கினால் சந்திப்புச் சாத்தியம் என்பதே வன்னியில் இருந்து வந்த விடை.*

*நாங்கள் மூவரும் ஒத்த கருத்துடையவரானோம். ‘இந்த அணுகு முறை ஈழத் தமிழருக்கு நன்மை பயக்காது. சந்திக்க உடன்படுக. தமிழர் தரப்பில் உடன்பட்டாலும் சிங்களர் தரப்பில் உடன்படார். அமைதிக்கு நாங்கள் தாயாரானவர் என்ற நிலைப்பாடு உறுதியாகும்.’ – இவ்வாறாக வன்னிக்குச் செய்தி அனுப்பினோம்.*

*2000 யூன் 5ஆம் நாள் வன்னியிலிருந்து செய்தி வந்தது. சந்திப்புக்குத் தயார். வரச் சொல்க.*

*பிரேசர் மிசுராவுடன் பேசினேன். நல்ல செய்தி. இந்தியப் பிரதமரின் நேரடித் தூதரை நீங்கள் வன்னிக்கு அனுப்பலாம் என்றேன்.*

*ஆகா.. மிக்க மகிழ்ச்சி. அப்படியே மாறாமல் வைத்திருங்கள் (Freeze it) என என்னிடம் நெகிழ்ந்தார் மிசுரா.*

*மகிழ்ச்சி, மகிழ்ச்சி. வேறு எவருக்கும் செய்தி தெரியாதல்லவா? – என்றார் சனா கிருட்டிணமூர்த்தி.*

*2000 யூன் 10. கொழும்பில் இந்திய வெளிநாட்டமைச்சர் யசுவந்தர் சிங்கா திடீர்ப் பயணம் என ஊடகங்கள் எழுதின. நானும் கவிஞரும் பழ. நெடுமாறனும் அச்சிதழில் வந்த செய்தி படித்தே தெரிந்து கொண்டோம்.*

*2000 யூன் 15ஆம் நாள். இரவு 10 மணி. சென்னை மேற்கு மாம்பலம், சனா கிருட்டிணமூர்த்தியாரின் இல்லம். என்னிடம் சொல்கிறார்.*

*“பிரபாகரன் எங்கள் முயற்சிக்கு ஒத்துழைத்தார். சந்திரிகாவிடம் யசுவந்தர் சிங்கா பேசினார். சந்திரிகா இந்த முயற்சியை விரும்பவில்லை. எனவே இந்த முயற்சியைக் கைவிடுகிறோம். பிரபாகரனிடம் நன்றி தெரிவியுங்கள்.”*

*“ஈழத் தமிழர் மீது பிரதமர் வாச்பாய் கொண்டிருந்த அளவற்ற அன்பால் இந்த முயற்சி. வாச்பாயும் நாங்களும் கலந்து பேசினோம். உங்கள் வழி முயல்வது எனத் தீர்மானித்தோம். உங்களுக்கு நன்றி.”*

*மிசுரா தொலைப்பேசியில் அழைத்தார். உங்கள் முயற்சிக்கு நன்றி. நாங்கள் தொடர்பில் இருப் போம். நீங்கள் எழுதிய Colombo's Diplomatic Artistry நூல் படித்தேன். பிரதமரிடமும் காட்டினேன். மிகக் துல்லியமாக, தெளிவாகச் செய்திகள் அதில் உள. தொடர்ந்து எழுதுங்கள் என்றார்.*

*ஈழத் தமிழர் நலம் பேணிய அடல் பிஹாரி வாச்பாய் என்ற மாமனிதர் மறைவால் ஈழத் தமிழர் அனைவரும் வருந்துகிறார்கள். இந்திய வரலாற்று ஏடுகளிலும் ஈழத்தமிழர் வரலாற்று ஏடுகளிலும் அவர் பெயர் என்றென்றும் மறையாது.*

– என்று தெரிவித்துள்ளார் சச்சி.

வாஜ்பாய் என்ற எத்துணை அற்புதமான மனிதரை நாம் இழந்துவிட்டோம்!

**- மின்னல் -**

# 2017 இல் இ.போ.சபைக்கு ரூ.161 கோடி இலாபமாம்!

இலங்கை போக்குவரத்து சபை கடந்த 2017ஆம் ஆண்டில் 161 கோடி 80 லட்சம் ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் நடவடிக்கை பிரிவு அத்தியட்சகர் ஆர்.ரி.சந்திரசிறி இதனைக் குறிப்பிட்டுள்ளார். 48 வருடங்களின் பின்னர் இவ்வாறான இலாபம் கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலதிக சேவை மற்றும் அதிகத் தூர பயணங்களை மேற்கொண்டமையால் இந்த இலாபம் கிடைத்ததாக அவர் கூறியுள்ளார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுத்துறை அமைச்சரும் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சருமான பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

காலவதியாகியுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் அரசு எதிர்கொண்டுள்ள சவால் குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்த தேசிய அரசு மூன்றாண்டு ஆட்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ளது. இந்தக் குறுகிய காலத்தில் நாட்டில் நீதியை நிலைநாட்டி மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் அரசு வெற்றியே கண்டுள்ளது.

இருப்பினும் தேசிய அரசின் ஆட்சி நடவடிக்கைகளில் குறைபாடுகளும் காணப்படுகின்றன. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்துகொண்டு எதிர்வரும் காலங்களிலும் எங்களது ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பணிகளை ஒன்றிணைந்த வகையில் துரிதமாக மேற்க்கொண்டு வருகின்றோம். அரசுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ஜனநாயகச் சுதந்திரங்களை ஒருபோதும் பறிக்கப் போவதில்லை.

மாகாணசபைத்தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு மீதான அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பில் இரு பிரதான கட்சிகள் மற்றும் ஏனைய சிறு கட்களுக்கிடையே நிலவும் வேறுப்பட்ட கருத்துக்களே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் கால தாமதத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந் நிலையில் புதிய தேர்தல் முறைமை தொடர்பான எல்லை நிர்ணய அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறுமென கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே 24 ஆம் திகதிக்கு பின்னர் மாகாணசபைத் தேர்தலை புதிய முறையில் நடத்துவதா? அல்லது பழைய முறையில் நடத்துவதா? என்பது தொடர்பான தீர்மானத்தை அரசு முன்வைக்கும். தேர்தலை நடத்தும் பணிகளை விரைவுப்படுத்துவதற்கான பணிகளை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது – என்றார். (ஐ)

## வாள்வெட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசியிவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுக் கும்பல்களின் அடாவடிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில், பொலிஸாரின் அறிவுறுத்தல்கள் அடங்கிய 5 ஆயிரம் துண்டறிக்கைகள் பொதுமக்களிடம் விநியோகம் செய்யப்பட்டன.

வன்முறைச்சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும். தற்போது வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு செயற்பட்டால், வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியும். அதே நேரம் மானிப்பாய் மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், துண்டறிக்கைகள் விநியோகம் செய்யப்பட்டன.

எனவே, குறிப்பிட்ட பொலிஸ் நிலையப் பகுதிகளில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுக் கும்பல்களைக் கட்டுப்படுத்தத் தகவல் அறிந்த பொதுமக்கள் தொலைபேசி மூலமும், வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் முகவரிக்கும் தனிப்பட்ட முறையில், இரகசியமாகத் தகவல்களை வழங்க முடியும்.

இதன் ஊடாகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை இலகுவாகக் கட்டுப்படுத்த முடியும் – என்றார். (ஐ-7)

## கோபி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லரும், நோபல் பரிசு பெற்றவருமான கோபி அனான் உடல் நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 80.

மிகச் சிறந்த மனிதரை இழந்துவிட்டோம் என்று அமெரிக்க ஊடகங்கள் கோபி அனானின் மறைவை உறுதி செய்துள்ளன.

1938ஆம் ஆண்டு கானாவில் பிறந்தார் கோபி அனான். ஐக்கிய நாடுகள் சபையின் 7ஆவது பொதுச் செயலராக 1997ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார்.

மனித உரிமைக்காகப் போராடிய தி எல்டர்ஸ் அமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்து 2013 ஆம் ஆண்டு அதன் நிர்வாகியாக உயர்ந்தார்.

அமைதியான உலகைக் கட்டமைக்கப் பணியாற்றியமைக்காக 2001ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையுடன் அமைதிக்கான நோபல் பரிசை கோபி அனான் பகிர்ந்து கொண்டார். இவருக்குத் திருமணமாகி 3 பிள்ளைகள் உள்ளனர். (ஐ)

## படை முகாம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் வழங்கிய செவ்வியின் கேள்வி – பதில் விவரம் வருமாறு:–

கேள்வி:– வடக்கில் விடுதலைப்புலிகள் மீள எழுச்சி கொள்வதற்கான வாய்ப்புத் தொடர்பாகப் பேசப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொள்வதற்கு இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய தளபதி என்ற வகையில் உங்களின் மதிப்பீடு என்ன?

பதில்:– நாங்கள் விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம். அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான பின்னணியையும் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்குமான சூழலை உருவாக்கியிருக்கிறோம். அது போதுமானதல்ல.

சில தமிழ் அரசியல்வாதிகள், இன்னமும் பிரிவினைவாதம் பேச முயன்று கொண்டிருக்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது. தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அதற்கு இணங்கமாட்டார்கள்.

அதிகாரப் பகிர்வைச் செய்ய வேண்டுமானால் நாம் பொது வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். பெரும்பான்மையான மக்கள் அதனை எதிர்க்கிறார்கள்.

தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டிருக்கிறார்களே தவிர அரசியலில் அல்ல. மக்கள் எதனைக் கேட்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமே தவிர, அரசியல்வாதிகளின் தேவைகளை அல்ல. சில தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்கிறார்கள்.

எந்த அடிப்படையிலும் அவர்களின் அந்த அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாது. நாட்டில் இருந்து இராணுவத்தை உங்களால் அகற்ற முடியாது.

கேள்வி:– இராணுவத்தின் பருமனை குறைக்க வேண்டிய தேவை உள்ளதா?

பதில்:– நாட்டின் எல்லா இடங்களிலும் இராணுவத்தினரின் பிரசன்னம் இருக்கவேண்டிய தேவை உள்ளது. இராணுவம் தெற்கில் தான் இருக்கவேண்டும், வடக்கில் இருக்கக் கூடாது என்று உங்களால் கூறமுடியாது. இராணுவத்தின் பருமனைக் குறைக்க வேண்டிய தேவை இல்லை என்பதே எனது கருத்து.

எனது தனிப்பட்ட கருத்தின்படி, இராணுவத்தின் குறைந்தபட்ச பலம், 150,000 இற்கு மேல் இருக்கவேண்டும். உள்நாட்டுப் பிரச்சினைகளுக்காக மாத்திரமல்ல, வெளிநாட்டு அச்சுறுத்தல் உள்ளிட்ட எந்தவொரு நிலைமையையும் எதிர்கொள்வதற்கும் நாட்டின் இராணுவம் தயாராக இருக்க வேண்டும்.

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. அவர்கள் 3 மில்லியன் பேரைக் கொண்ட இராணுவப் படையை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடிமகனுக்கும், போரிடுவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் அணிதிரட்டப்படவில்லை.

வடக்கில் சில பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை முழுமையாக வெளியேற்றக் கூடாது.

பொதுமக்களின் காணிகளைத் திரும்ப அவர்களிடம் ஒப்படைப்பதற்காக, சில இராணுவ முகாம்களை மூடி, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் அளவைக் குறைப்பது பற்றி இராணுவத் தளபதி பெருமையாகப் பேசியமையைக் கேள்விப்பட்டேன். இது முட்டாள்தனமானது.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மக்களுக்கு மீளவழங்குவதற்காக, முகாம்களை மூடுவதை யிட்டுப் பெருமைப்பட முடியாது. நாங்கள் ஆய்வு செய்யவேண்டும். மக்களின் கருத்தைக் கேட்க வேண்டும். சரியான மதிப்பீட்டைச் செய்ய வேண்டும்.

கேள்வி:– இராணுவம் கைப்பற்றியுள்ள காணிகள் விடுவிக்கப்படும் விடயத்துடன் நீங்கள் இணங்கவில்லையா?

பதில்:– அரசியல் அழுத்தங்களுக்காக இதனைச் செய்யக் கூடாது, இதனை முறைப்படி செய்யவேண்டும்.

இராணுவத்தளபதி இப்போது, இராணுவத்தினரை விலக்கி அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த முனைகிறார். அவர் முகாம்களை மூடி வருகின்றமை குறித்து, களமுனைத் தளபதிகள் சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்று கேள்விப்படுகிறேன். அது ஒரு பிரச்சினை.

கேள்வி:– ஆயுதப்படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதியின், உத்தரவுகளை இராணுவத் தளபதி நிறைவேற்ற வேண்டியவர் இல்லையா?

பதில்:– எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தமது மேலதிகாரிகளை இராணுவத் தளபதி திருப்திப்படுத்தவேண்டியதில்லை. நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவத் தளபதியே பொறுப்பு.

கேள்வி:– பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியை அவர் புறக்கணிக்க அல்லது இணங்காமல் இருக்க முடியுமா?

பதில்:– இராணுவத்தை நிறுத்துவது பற்றிய அறிவு அரசியல்வாதிகளுக்கு இல்லை. அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளவில்லை.

நீண்ட காலத்துக்கு முன்னர், 2002இல், நான் யாழ்ப்பாண தளபதியாக இருந்த போது, உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள சில பகுதிகளில் உள்ள முகாம்களை மூடுமாறு அரசால் கேட்கப்பட்டேன். அப்போது நான் ஒரு மேஜர் ஜெனரல். பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதனை நான் நிராகரித்தேன்.

கேள்வி:– அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த அரசுடன் தானே நீங்கள் இப்போது இருக்கிறீர்கள்?

பதில்:– அது வேறுபட்ட சிந்தனை. இப்போது அவர்கள் எனது வழியில் பணியாற்றுகின்றமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (ஐ)

## கைதாகிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டனர். ஆயினும் அவர்களை யாழ்.மாவட்டக் கடற்றொழில் திணைக்களம் விடுவித்துள்ளது.

இரவில் கடலட்டை பிடிக்கக் கூடாது என்பது சட்டமாக உள்ள நிலையில் நாகர்கோவில் கடற்பகுதியில் நேற்று அதிகாலை வெளிச்சம் பாய்ச்சிக் கடலட்டை பிடித்த 81 தென்னிலங்கை மீனவர்களைக் கடற்படை கைது செய்தது.

இந்த மீனவர்கள் பருத்தித்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். ஆயினும் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் இதில் உடனடியாகத் தலையிட்டு இரவில் கடலட்டை பிடிக்க அனுமதி உள்ளதாகக் கூறியுள்ளது.

இதனையடுத்து கைதான மீனவர்களைக் கடற்படையினர் விடுதலை செய்தனர். இதனையடுத்து நாகர்கோவில் மீனவர்கள் கடற்படை முகாமுக்குச் சென்று தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

மக்களுடன் பேசிய கடற்படை அதிகாரிகள், தாம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் ஒப்புதலின்பெயரிலேயே கைதான மீனவர்களை விடுதலை செய்தனர் எனக் கூறியுள்ளனர். (ஐ–7)

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் வெளியிட்டார்.

வாள்வெட்டு வன்முறை உள்ளிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த வாரம் தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாகனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுத் தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் பின்னர் நடைபெற்ற முன்னேற்றம் தொடர்பில் வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை நடத்தினார். இதன்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

தொலைபேசி இலக்கத்திற்கு யாழ். மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. கணிசமான முறைப்பாடுகளும் தகவல்களும் இதன் மூலம் எமக்குக் கிடைத்துள்ளன.

குறிப்பாகத் தாய் ஒருவர் அண்மையில் தொடர்புகொண்டு தனது மகன் ஆவா குழுவினருடன் இணைந்து செயற்படுகிறார் எனத் தெரிவித்தார்.

மகனைக் காப்பாற்றத் தான் முயன்றும் முடியாது போனதாக அந்தத் தாயார் தெரிவித்தார். எப்படியாவது தனது மகனை அந்த குழுவிலிருந்து காப்பாற்றித் தன்னிடம் ஒப்படைக்குமாறும் அவர் முறைப்பாடு வழங்கினார்.

இதுபோன்ற பல தகவல்கள் எமக்குக் கிடைத்து வருகின்றன. அவற்றை இரகசியமான முறையில் விசாரித்து நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துள்ளோம் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறினார். (ஐ–7)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடி காட்டிப் போராட்டம் நடத்த வடமராட்சி கிழக்கு மக்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்கில் தென்னிலங்கை மீனவர்கள் தொடர்ச்சியாகச் சட்டத்தை மீறி கடலட்டை பிடித்து வருகின்றனர். இது தொடர்பாக கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் தொடர்ந்தும் அமைதியாக இருப்பதுடன் தென்னிலங்கை மீனவர்களுக்கு ஆதரவாகவும் நடந்து வருகிறது.

நாகர்கோவில் கடற்பகுதியில் இரவில் கடலட்டை பிடித்தவேளை கடற்படையினால் நேற்றுக் கைது செய்யப்பட்ட தெற்கு மீனவர்ளையும் கடற்றொழில் திணைக்களம் விடுதலை செய்துள்ளது. இந்நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்கு மீனவர்கள் சந்திப்பொன்றை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், தென்னிலங்கை மீனவர்களின் அத்து மீறல்களை கண்டித்துப் போராட்டம் நடத்துவதெனவும், 22ஆம் திகதி மயிலிட்டி பகுதிக்கு வரும் ஜனாதிபதிக்கு எதிராகக் கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிப்போம் எனவும் மீனவர்கள் கூறினர். (ஐ–7)

## 19 சீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வியாழக்கிழமை பெரியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் திருமணம் செய்து கொண்டனர்.

12 சீன ஜோடிகள், 7 இலங்கை ஜோடிகளுக்குமே இவ்வாறு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும், இலங்கையில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள சீனாவின் அரச கட்டுமானப் பொறியியல் நிறுவனத்தின் பணியாளர்களாவர்.

'அணை மற்றும் பாதை திட்டத்துக்காக ஒன்று கூடியுள்ளோம், நாங்கள் இலங்கையில் திருமணம் செய்தோம்' என்ற தொனிப் பொருளில் இந்த பிரமாண்ட திருமண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பில் உள்ள சீனத் தூதரக அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி பாங் சுன்சூ உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் 300 விருந்தினர்கள் இந்தத் திருமண நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்தப் புதிய திருமணங்கள் மூலம், சீன–இலங்கை ஒத்துழைப்பு எதிர்காலத்தில் பிரகாசமாகவும் செழிப்பாகவும் இருக்கும் என்று நம்புகின்றனர் எனச் சீனத் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி சுன்சூ தெரிவித்துள்ளார்.

மணமக்கள் அனைவரும் சீன கலாசார மரபுகளுக்கு அமைய சிவப்பு நிற ஆடைகளை அணிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆபாசமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களை பஸ்களில் ஒலிபரப்புவதைத் தடுக்க வேண்டும் என வடக்கு முதலவர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் 20 ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்– பயணிகளின் சௌகரியத்துக்காகவும், மகிழ்ச்சியான பயணத்துக்காகவும் சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவதும் சினிமாப் படங்களைக் காட்சிப்படுத்துவதும் வரவேற்கத்தக்கது.

ஆனால் இந்தப் பாடல்கள் மக்களுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய அறிவு சார்ந்த பாடல்களாக அமைந்திருப்பதே பொதுவாக மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

மாறாக இரட்டை அர்த்தம் கொண்ட, ஆபாசச் சிந்தனைகளைத் தூண்டக்கூடிய மற்றும் நவீனம் என்ற பெயரில் பாலியல் கலாசாரங்களைப் பாலியல் சிந்தனைகளையும் தூண்டக்கூடிய பாடல்களை ஒலிபரப்புவதை அனைத்து பஸ் உரிமையாளர் சங்கங்களும் ஒன்றாக இணைந்து தடுக்கலாம்.

அதேபோன்று வாள்வெட்டுக் கலாசாரங்கள், ரவுடித்தனங்கள், சோம்பல் தன்மைகளைப் பிரதிபலிக்கும் படங்களைத் தவிர்த்து கருத்தாழம் மிக்க நகைச்சுவைகளுடன் கூடிய பல நல்ல படங்களைக் காட்சிப்படுத்துவதையே எமது மக்கள் விரும்புகின்றார்கள்.

படங்களையும் பாடல்களையும் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை பொறுப்புள்ளவர்களிடம் விட்டால் பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் வெட்கப்படத்தேவையில்லை என்று கருதுகின்றேன்.

பஸ்களில் பயணம் செய்யும் பலரின் கருத்தையே இங்கு நான் பிரதிபலிக்கின்றேன். உங்கள் சாரதிய ஒழுங்கும் மக்கள் பாதுகாப்பும் 100 சதவிகிதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தற்போது நடைபெறுகின்ற ஒன்று, இரண்டு விபத்துக்களைக் கூட இல்லாதொழிப்பதற்கு நீங்கள் பாடுபட வேண்டும்.

சுமார் 20–30 வருடங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதிகள் சிறந்த சாரதிகளாக இனங்காட்டப்பட்டிருந்தனர். ஆனால் இன்று அந்த நிலையில்லை.

போட்டித் தன்மை காரணமாக வீதி ஒழுங்கு சைகைகள், சமிக்ஞைகள் ஆகியவற்றைப் புறக்கணித்து நினைத்தவாறே நிறுத்துவது, எடுத்த மாத்திரத்தில் இயக்குவது, பின்பார்வை கண்ணாடிகளை முறையாக உற்று நோக்காது இயக்குவது போன்ற பல குறைபாடுகள் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்புக் குறித்துப் பேச்சு நடத்துவார் என்றும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கும் சென்று பார்வையிடுவார் என்றும் ஜப்பானின் கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கான பயணத்தை ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா இன்று ஆரம்பிக்கவுள்ளார். இவர், இரண்டு நாடுகளுடனும் இராணுவ ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்துவார் என்று ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகளை வெளிப்படையாக எதிர்ப்பதற்கான முயற்சியாக இது கருதப்படுகிறது.

ஐந்து நாள்கள் பயணத்தின் முதற்கட்டமாக இந்தியா செல்லும், ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தா ராமனுடன் பேச்சு நடத்துவார்.

ஜப்பானியத் தரைப்படைக்கும், இந்திய இராணுவத்துக்கும் இடையில் முதலாவது கூட்டுப் பயிற்சியைக் கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கான உடன்பாட்டை எட்டும் இலக்குடன் இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும்.

இலங்கையில் அவர், பாதுகாப்பு அமைச்சராகவும் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பார். இலங்கைக் கடற்படைக்கு மேலதிக உதவிகளை ஜப்பான் வழங்குவது குறித்து இதன்போது பேச்சுக்கள் நடத்தப்படும்.

அத்துடன் சீன நிறுவனத்தினால் இயக்கப்படும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கும் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் செல்லவுள்ளார் என்றும் கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவும் ஜப்பானும், தென் சீனக் கடல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் எதிரெர் நிலைகளில் இருக்கும் சூழலில், அம்பாந்தோட்டை மீது ஜப்பான் கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வயோதிபத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயோதிபத் தம்பதியரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு நகை மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

கொள்ளைக் கும்பலின் தாக்குதலால் காயங்களுக்குள்ளான வயோதிபத் தம்பதியர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரெழு அம்மன் கோவிலடியில் 77 வயதுடைய வயோதிபரும் 70 வயதுடைய அவரது துணைவியாரும் வசித்து வருகின்றனர். அவர்களின் வீட்டுக்குள் நேற்று அதிகாலை 4 மணிக்கு 4 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் ஒன்று நுழைந்துள்ளது.

கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த 6 பவுண் நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுத் தப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்களின் தாக்குதலால் காயமடைந்த வயோதிபத் தம்பதியர், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ–7)


# மனைவி - பிள்ளைகளுடன்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவத்தம்பிக்கும் - சோமுவுக்குமிடையே நிழல் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம் அது.

எனினும், அந்தத் தொகுதி குறிப்பிடத்தகுந்தது. பேராசிரியர் சிவத்தம்பியின் விமர்சனக் கோட்பாடு கள் திசைதிரும்புவதை சமிக்ஞையிட்ட முன்னுரை அது.


நெல்லை க. பேரன்




தனதுபெயரில் - தான் பிறந்த ஊரையும்இணைத் துக் கொண்டு இலக்கிய உலகில் தன்னை பதிவு செய்துகொண்ட பேரன், அந்த ஊரையும் அங்கு வாழ்ந்த மக்க ளையும் நேசித்த மாண்பு அவரின் பணிகளில் துலக் கமானது.

அல்வாயில் வழக்கமாக மாதாந்தம் நடக்கும் அறிவோர் கூடலில் இறுதியாக கலந்துகொண்ட பேரன் அன்றையதினம் கையொப்பம் இடும் கோவையில் தனது பெயரை பதிவு செய்யவில்லையாம். நிகழ்ச்சி முடிந்து மாலை யில் அவர் அனைவரிடமும் விடைபெற்றுச்சென் றார். அன்றையதினம் இரவு காலன் ஆட்லறியின் உருவத்தில் வந்து அவரது நெல்லியடி இல்லத்தை பதம் பார்த்தான் என்ற தகவலை பின்னாளில், அறி வோர் கூடலின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான நண்பர் கலாநிதி கலாமணி என்னிடம் தெரிவித்தார்.


சொந்த மண்ணில் சொந்தங்களைக் கதற வைத்து எம்மையெல்லாம் கலங்க வைத்துப் பிரிந்த பேரனின் இழப்பு ஒரு புறத்தில் ஆழ்ந்த சோகம். மறுபுறத்தில் தொடரும் மறக்கமுடியாத வலி.

தனது உயிருக்குயிரான மனைவி மக்களுடன் தான் அவர் விடைபெற்றார்.

எங்கள் தாயக மண்ணில் இன்றும் காணாமல் போனவர்கள் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றோம். அவர்களின் உறவுகள், ஆயிரம் நாள்களையும் கடந்து கவனவீர்ப்பு அறப்போராட்டங்கள் நடத்திவரு கிறார்கள்! காணாமல் போனவர்களுக்காக இலங்கை நல்லிணக்க (?) அரசு அலுவலகம் திறந்து ஆராயும் கண்துடைப்பு கைங்கரியமும் அரங்கேறிவருகிறது.

ஆனால், எங்கள் நெல்லை க. பேரன் தன்னை யும் தனது குடும்பத்தையும் எவரும் தேடவேண்டா ! அனைவரும் ஒன்றாகவே நிரந்தரமாகவே போய் விட்டோம் என்ற செய்தியை தந்து விட்டார்.




குவைத்தில் ஒரு நிறுவனத் தில் பணியாற்றி யிருக்கும் எமது சக இலக்கியநண் பர்சுதாராஜ், பேரன் மறைந்த பின்னர் மல்லிகையில் தனது நினைவு களை நெல்லை க. பேரனின் எழுத் துப்பணிக்கும் அப்பால் என்ற தலைப்பில் எழுதி யிருக்கிறார். அந்த நிறுவனத்தில் பேரனும் பணியாற்றியவர்.

அங்கு அவர் எவ்வாறு சக ஊழியர் களின் நெஞ் சத்துக்கு நெருக்கமாகப் பழகினார் என்பதை சுதாராஜ் விவரித்துள்ளார்.

கலை, இலக்கியம், ஊடகம் மற்றும் பொதுவாழ் வில் ஈடுபடுபவர்களின் மத்தியில் மூளையால் உற வாடுபவர்களும் இதயத்தால் உறவாடுபவர்களும் இருக்கிறார்கள்.

மூளையால் உறவைப்பேணுபவர்களுக்கும் இதயத்தால் பேணுபவர்களுக்கும் நிரம்ப வித்தியா சம் இருக்கிறது. நான் குறிப்பிட்ட மேற்சொன்ன துறைகளில் ஈடுபடுபவர்கள் அந்த வித்தியாசத்தை நன்கறிவர்.

இதயத்தால் பேணுபவர்களுக்கு அன்புதான் பெரிய எதிரி. அவர்களின் வெளிப்படைத்தன்மைதான் அவர்களின் பலவீனம் என்று மற்றவர்கள் கருது கிறார்கள். ஆனால், அத்தகையவர்கள் மறைந்த பின்னர்தான் அவர்களின் அருமை பெருமைகள் மற்றவர்களுக்குத் தெரியவருகின்றன.

நெல்லை க. பேரன் எப்பொழுதும் நண்பர்களிடம் இன்முகத்துடன் உறவாடும் இயல்புகொண்டவர். இத யத்தால் உறவாடுபவர். எந்த எதிர்பார்ப்பும் அவரிடம் இருந்ததில்லை. நட்பும் நல்லுறவும் மாத்திரமே அவ ரது எதிர்பார்ப்புகள். அதற்காக வலிந்துசென்று பழகி எவருடனும் நண்பராகும் பண்பினையும் கொண் டிருந்தார்.

அந்நியநாட்டில் அவர் குவைத்தில் பணியாற்றிய வேளையில், சக ஊழியர்களுடன் கொண்டிருந்த நேசம், அவர்களின் நலன்கள் மீதான அக்கறை




குறித்து சுதாராஜ் தனது (மல்லிகை) கட்டுரையில் அழகாகப் பதிவுசெய்துள்ளார். தொழில் நிமித்தம் குவைத் உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்குச்செல்லும் குடும்பத்தலைவர்களுக்கு ஊரையும் மனைவி - பிள்ளைகளையும் பிரிந்து வந்த ஏக்கம் வலிநிரம் பியது. தான் பணியாற்றிய நிறுவனத்தில் அவ்வாறு வலிகளை சுமந்துகொண்டிருந்த பலருடன் பேரன் நெருக்கமான நட்பினை வளர்த்து வந்திருக்கிறார். அவர் களின் சுக, துக்கங்களில் பங்கேற்றிருக் கிறார் என்பதை சுதாராஜின் அஞ்சலிக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.

அங்கு அவர் சக ஊழியர்களினால் செல்லமாக கிளார்க்கர் பேரம்பலம் என்றே அழைக்கப்பட்டிருக் கிறார். தனது படைப்புகள் நூலுருவில் வெளியாக வேண்டும். அதற்குப்பணம் வேண்டும். இலங்கையில் உழைத்து குடும்பத்தையும் பராமரித்து புத்தகம் வெளி யிடமுடியாது, அதற்கும் சேர்த்து உழைப்பதாயின் மத்திய கிழக்குத்தான் சரியான தெரிவு என்ற தீர்மா னத்துடன் சென்றவர்தான் பேரன் என்ற தகவலை யும் அறிகின்றோம்.

இலங்கையில் நீடித்தபோரின் அறு வடையில், பேரனும் அவரது முழுக் குடும்பமும் அழிந்துள்ள அதிர்வுதரும் செய்திகளையும் வரலாற்றில் பதிவு செய்திருக்கிறது. எனவே, இனியும் போர் வேண்டாம் என்பதுதான் எம்மைவிட்டுப்பிரிந்தவர்கள் எம்மவர்க ளுக்கு அழுத்தமாக பதிவு செய்யும் உண்மையாகும்.*

# புதிய முகம்



அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தில் பிறந்து வளர்ந்தவர் கேட்டி. படிப்பிலும் விளை யாட்டிலும் திறமையானவர். 16 வயதில் குடும்பம் கெண்டகிக்குக் குடியேறியது. புதிய பள்ளியில் ஒரு மாணவரைப் பார்த்தவுடன் இவருக்குப் பிடித்துவிட்டது. இருவரும் காதலித்தனர். 2014ஆம் ஆண்டு கேட்டிக்கு தொடர்ச்சியாக உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது.

சில அறுவை சிகிச்சைகளும் மேற்கொள் ளப்பட்டன. அந்த நேரத்தில் காதலரின் போனில் இன்னொரு பெண்ணின் குறுஞ்செய்தியைப் படிக்க நேர்ந்தது. உடனே மனம் உடைந்து போனார். வீட்டிலுள்ள குளியலறையில் துப்பாக் கியை முகவாயில் வைத்து, தானே சுட்டுக் கொண்டார். சத்தம் கேட்டு ஓடிவந்தவர்கள், கேட்டியின் முகம் சிதைந்துபோனது கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே மருத்துவமனை யில் சேர்த்தனர். உயிர் பிழைத்தாலும் கேட்டி யின் முகம் முற்றிலும் சிதைந்துவிட்டது. மூச்சு விடுவது, சாப்பிடுவது எல்லாம் மிகவும் சிரம மாக இருந்ததால், தொடர்ந்து மருத்துவமனை யிலேயே கேட்டி வைக்கப்பட்டிருந்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு பெற்றோர் அவர் மனதைத் தேற்றி, முகமாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு தயார் செய்தனர். சில முன்னணி மருத்துவமனைகள் தங்களால் செய்ய இய லாது என்று மறுத்துவிட்டன. இறுதியில் க்ளீவ் லாண்ட் மருத்துவமனையில் முயற்சி செய்யச் சொன்னார்கள். அங்கே முகமாற்று அறுவை சிகிச்சைக்காக பெயரைக் கொடுத்துவிட்டு, காத் திருந்தார் கேட்டி.

2017ஆம் ஆண்டு ஆண்ட் ரீயா என்ற 31 வயது பெண் இறந்துபோனார். அவரிடமிருந்து முகத்தை எடுத்து, இவருக்குப் பொருத்தும் முயற்சிகளில் மருத்துவர்கள் இறங்கினர். துப்பாக்கியில் சுட்டு, 3 ஆண்டுகளுக்குப் பிறகு முகமாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. இதன்மூலம் அமெரிக்காவிலேயே மிக இளம் வயதில் முகமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் என்ற சிறப்பு கிடைத்திருக் கின்றது. இதற்குப் பிறகு கேட்டி இயல்பாக சுவா சிக்க ஆரம்பித்தார். உணவை விழுங்கினார். மெதுவாக நடக்கவும் பேசவும் பயிற்சி அளிக்கப் பட்டுவருகிறது. பார்வை பறிபோனதால் பிரெய்லி முறையில் படிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்.

இது எனக்குக் கிடைத்த 2ஆவது வாழ்க்கை. துப்பாக்கியில் சுட்ட பிறகான வாழ்க்கையில் என் பெற்றோர் சில நிமிடங்கள் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்கவில்லை. நான் அனுப வித்த அத்தனை கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டனர். எப்போதும் நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டே இருந்த னர். இவ்வளவு நல்ல மனிதர்களை விட்டு, இறந்து போக நினைத்தோமே என்று வருத்த மாக இருக்கிறது.

என்னுடைய பழைய முகம் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால் விபத்துக்குப் பிறகான என் முகத்தை நினைக்கும்போது, இந்தப் புதிய முகம் மிகவும் அழகாகத் தெரிகிறது. படிப்பை முடித்த பிறகு, என்னைப்போல் தற் கொலையில் இருந்து தப்பியவர்களுக்காக வேலை செய்யப்போகிறேன். தற்கொலை எண் ணம் வருகிறவர்களுக்கு கவுன்சிலிங் கொடுக் கப் போகிறேன் என்கிறார் கேட்டி.

இவரது கதையை நேஷனல் ஜியோகிரபிக் பத்திரிகை, 'தி ஸ்டோரி ஒஃவ் ஃபேஸ்' என்ற தலைப்பில் முகப்புக் கட்டுரையாக வெளியிட்டி ருக்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir



# இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும் ஐ.நா.

## புதிய ஆணையாளர் பாச்லெட்டிடம் உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

ஜெனீவா, ஓக.19

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் புதிய ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் நடவடிக்கை எடுக்கவேண்டும் என உலகத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 7ஆவது ஆணையாளராக நியமனம் பெற்றுள்ள மிச்சேல் பாச்லெட்டுக்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்துக்களைத் தெரிவித்து அனுப்பியுள்ள செய்தியிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச படையினரினால் கடந்த 2009ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுப்பதில் ஐ.நா. மிகமோசமான முறையில் தோல்விகண்டிருந்தது. எனினும், தமது தோல்விகளை அடையாளம் கண்டு பரிகாரங்களைச் செய்வதற்கு ஐ.நா.வின் முக்கிய அதிகாரிகள் மேற்கொண்ட முன்முயற்சிகள் பாராட்டுக்குரியவை என உல கத்தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இறுதிப் போர்க் காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்து பொறுப்புக்கூறுவதற்காக அப்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தார். அத்தோடு இலங்கையில் இடம் பெற்றமை போன்ற தவறுகள் மீண்டும் நிகழாதிருப்பதற்காக உள்ளக மீளாய்வுக் குழுவொன்றையும் நியமிக்கப்பட்டிருந்தமையையும் உலகத் தமிழர் பேரவை நினைவுபடுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் மேற்பார்வையின் கீழ் இலங்கையைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு 2019ஆம் ஆண்டு மார்ச் அமர்வுகள் மிகவும் முக்கியமானவை என உலகத் தமிழர் பேரவை கூறியுள்ளது.

ஐ.நா. இந்த விடயத்தில் இழைக்கக்கூடிய எவ்விதமான தவறும் மனித உரிமைகளை மீறிச் செயற்படுகின்ற நாடுகளுக்குப் பிழையான முன்னுதாரணத்தை வழங்கிவிடும் எனவும் அது தெரிவித்துள்ளது. (ஐ)

# தனது உதவியாளரை திட்டித் தீர்த்த மஹிந்த



கொழும்பு, ஓக.19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அதிகாரி ஒருவரை "மோடயா" எனப் பொதுஇடத்தில் திட்டிய வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

ஊடகவியலாளர் கீத் நொயர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து, மஹிந்தவிடம் நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலம் ஒன்றை பெற்றுக்கொண்டனர்.

கொழும்பு – விஜயராமவில் அமைந்துள்ள மஹிந்தவின் இல்லத்தில் வைத்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் மஹிந்த கருத்து தெரிவித்திருந்தார். இதன்போது, தனது தனிப்பட்ட செயலாளர் ஒருவரை நோக்கி "மோடயா" எனக் கூறித் திட்டியுள்ளார். இது குறித் வீடியோ தற் போது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கீத் நொயர் கடத்தல்; தகவல்கள் கசிந்தன

கொழும்பு, ஓக.19

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுப் புலனாய்வுத் துறை அதிகாரியொருவரின் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் எனப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், அந்த இடம் தொம்பே பதுவத்த வலவ்வ என்ற பெயரில் அழைக்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டதன் பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளர் லலித் அழகக்கோன் அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு தொடர்பை மேற்கொள்ளத் தொலைபேசியில் மூன்று முறை முயற்சித்துள்ளார். இருப்பினும், அது முடியாமல் போயுள்ளது.

பின்னர் இது தொடர்பில் அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரியவிடம் கடத்தப்பட்டமை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இச்செய்தி அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு கரு ஜயசூரியவால் எடுத்துக் கூறப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட ஊடகவியலாளர் கீத் நொயார், தெஹிவளை மிருகக் காட்சிசாலைக்கு அருகில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செல்வச்சந்நிதி சென்றவர் மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், ஓக.19

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் திருவிழாவுக்குச் சென்றவர் நேற்றுக் காலை திடீரென மயங்கி வீழ்ந்து மரணமானார். இந்த நபர் கடந்த 3 நாள்களாக ஆலயத்தில் தங்கியிருந்து வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். வடமராட்சி இமையாணன் பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோத முறையில் மீன்பிடித்த ஐவர் கைது



கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி – இரணைமடு குளத்தில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டமையுடன், அவர்கள் பயன்படுத்திய தங்கூசி வலைகளும் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டில் தங்கூசி வலைகளின் பயன்பாடு நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு சட்டத்துக்கு முரணாக இரணைமடுக் குளத்தில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வந்த ஐவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயன்படுத்திய 30 வலைகளும் கைப்பற்றப்பட்டன. கைதானவர்கள் கிளிநொச்சி நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என இரணைமடு நன்னீர் மீனவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ)

# வவுனியா பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவராக மீண்டும் இராஜேஸ்வரன்




வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் ரி.கே. இராஜேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா, றோயல் கார்டின் மண்டபத்தில் நேற்று வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அதன் தலைவர் ரி.கே. இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, இருபதாவது ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நடுநிலையாளராக இருந்து நடத்தினார். இதன் போது 20 ஆவது வருடமாகவும் ரி.கே.இராஜேஸ்வரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு செயலாளராக கே.சிவ ஞானமூர்த்தி, பொருளாளராக எ.டபுள்யூ.ரசீன், உப தலைவராக எம்.விஜயரட்ணம், உப செயலாளராக கே.நிரஞ்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

10 நிர்வாக குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், நகரசபைத் தலைவர் இ.கௌதமன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# கோம்பாவில் கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஓக.19

புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரம், கோம்பாவில் பகுதியில் தோட்டக் கிணற்றில் இருந்து வயோதிபரின் உடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.



நேற்றுக் கோம்பாவில் பகுதியில் காணி ஒன்றை உழுத உழவு இயந்திர உரிமையாளர் நாற்றம் வீசியதை அடுத்துக் கிணற்றை எட்டிப் பார்த்துள்ளார். இதன்போது கிணற்றில் சடலம் ஒன்று காணப்பட்டதை அடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கோம்பாவில் 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 78 வயதான சுப்பிரமணியம் கார்த்திகேசு என்பவரே கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.